சக்தி



★ ★

சைனாவில் உள்ள ஒவ்வொரு நகரங்களையும் சைனா கம்யூனிஸ்டுகள் பிடித்துக்கொண்டு வருகிறார்கள் என்று தினசரிகளில் படிக்கிறோம் அந்த சைனாவை நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்.

ஆர். ராமநாதன் எழுதியது

விலை ரூ. ஒன்றே முக்கால்
(தபால் செலவு தனி)

கார்த்திகேயினி பிரசுரம்

ராமச் ... ரபுரம் : புதுக்கோட்டை சமஸ்தானம்

ஏப்ரல் 9ந் தேதி

வெளிவருகிறது...

சந்திரலேகா

ஜெமினியின்

அற்புதமான

சிருஷ்டி



உலோகங்கள் நாணயச் செலாவணியா யிருப்பதைப் பற்றி மக்களிடையே ஏற்பட்ட சச்சரவுகளாலும், சட்ட சம்பந்தமான வியாஜ்ஜியங்களாலும் கலக்கமடைந்து, யாரோ ஒரு புத்திசாலியான அரசன் பிரஸ்தாப உலோகத்தின் அசல் தன்மையை ஊர்ஜிதம் செய்வதற்காகத் தமது முத்திரையைப் பாளங்களில் பொறிக்க எண்ணினான். நாளடைவில், பொன்னும் வெள்ளியும் கீழ்த்தர உலோகங்களுக்குப் பதிலாக உபயோகத்துக்கு வந்தன ; மேலும், பாளத்தின் அளவு சிறிதாய் விட்டது. இவ்வாறே முதல் நாணயம் பிறந்தது. இது பல ஆயிர வருஷங்களுக்கு முன்னே நடந்த விஷயம். ஜனங்கள் அரசருடைய உருவத்தைக் கீழ்த்தர உலோக நாணயங்களில் பொறித்துக் கள்ள நாணயங்கள் செய்வதை, அதிலும் முக்கியமாய்ப் போலீஸார் திறமையற்றிருக்கையிலோ, அரசர் போருக்குச் சென்றிருக்கையிலோ அவர்கள் அப்படிச் செய்வதை அரசரால் பல தடவைகளில் தடுக்க முடியாமலிருந்தது. ஹுமாயூன் கங்கையில் விழுந்தாலும் விழுந்தார், தோல் துண்டுகள் செல்லுபடியாகிற நாணயங்களாயின ! அரச வமிசங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் பண மதிப்புகளைப் பாதித்தன.

தபாலாபீஸுகளிலும், கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்
ஸெர்டிபிகேட்

பணத்தின் மதிப்பு அப்படி அநிச்சயமாயிருந்தாலும், பரிபாஷங்கள் விரைவாய் மாறி வந்ததனாலும், சேர்த்து வைக்க அதிக ஊக்கம் பிறக்கவில்லை. மேலும் எவ்வளவு சேர்க்கப் பட்டாலும், அவ்வளவும் பத்திரமாயிருப்பதற்காக அனேக மாய்ப் புதைக்கப்பட்டு வந்தது; ஆகவே அது அனேகமாக இழக்கப்பட்டது.

இன்று, நிலையற்ற நாணயச் செலாவணியைப் பற்றிப் பயமெதுவுமில்லை. மேலும் சேமிப்புகளை ஒளித்துவைக்க வேண்டியதில்லை. நீர் உமது பணத்தை வட்டிக்குப் போட்டு வைத்து, உமக்கு நல்ல லாபத்தைக் கொடுக்கும்படிச் செய்ய முடியும். நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் வட்டிக்குப் போட்டு வைத்த பணம் மிகப் பத்திரமாயிருப்பதோடு, உரிய காலத்தில் அது 50 சத வீதம் அதிகமாகிறது. அதாவது, பிரதி 10 ரூபாயும் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாயாகிறது. இந்த வட்டிக்கு இன்கம்-டாக்ஸ் கிடையாது. நீர் இப்போது 5 ரூபாயிலிருந்து 15,000 ரூபாய் வரையில் எவ்வளவு தொகையையேனும் வட்டிக்குப் போட்டு வைக்க முடியும். (சிறு சேமிப்புக்காரர்கள் 4 அணு, 8 அணு அல்லது 1 ரூபாய்க்கு நாஷனல் ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம்). ஸெர்டிபிகேட்டுகளை இப்பொழுது 18 மாதங்களுக்கப்பால் (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகளை 12 மாதங்களுக்கப்பால்) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்,

எதிர்காலத்துக்கென்று சேர்த்து வைக்கவும்

நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளை

வாங்கவும்

பிரபலமான முதலீடு

பெற்ற ஏஜெண்டுகளிடமும், ஸேவிங்ஸ் பீரோக்களிலும் இந்த டுகள் கிடைக்கும்.

A.C.2/3.T.M.

பொருள் அடக்கம்

மலர் 14 :: இதழ் 11

●

புதுக்கோட்டையில் புது சகாப்தம்	...	தலையங்கம்	5
காலச்சுழல்	...	...	7
காங்கிரஸின் நிலை	...	மகாத்மா காந்தி	12
ஜூதல டெலிபோன்	...	'ஹல்லோ'	14
நாயர்—ஈழவர் கலகம்	...	பி. கேசவதேவ்	19
கடைசி வார்த்தைகள்	...	கு. அ.	27
சார்லி சாப்ளின்	...	ஜி. செல்லையா	39
படங்கள்	...	...	49
வைத்தியாரம்மான்	...	ஆண்டான் செஹாவ்	57
எண்ணெய் ஊற்று	...	'விஞ்ஞானி'	71
தத்துவம்	...	வி. சக்கரை செட்டியார்	73
நான் கண்ட இந்தியா	...	ஸ்ரீமதி மவுண்ட்பேட்டன்	78
மார்ஷல் திட்டம்	...	காலக்கோலன்	83
ஓரே குழப்பம்!	...	வ. ரா.	93
நமது கடமை	...	ஆர். ராமநாதன்	97
சாக்கடையிலிருந்து (தொடர்கதை)	...	பி. கேசவதேவ்	99
புத்தக உலகம்	...	கு. அ.	108

அட்டைப் படம்: கே. முத்துராமலிங்கம்

✲

சர்வசித்து பங்குனி

சக்தி

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras 14.

சர்வசித்து
மலர் 14

சக்தி

பங்குனி
இதழ் 11

மெய்ப்பொருள் காண்பது அறிவு

○

புதுக்கோட்டையில் புது சகாப்தம்

கடந்த மூந்நூறு வருஷங்களாக தனி சமஸ்தானமாக இருந்து வந்த புதுக்கோட்டை நிகழும் 1948-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம தேதியன்று இந்திய யூனியனுடன் சேர்ந்துவிட்டது. யாதொரு கலவரமும் தாவாவும் செய்யாமல் புதுக்கோட்டை அரசர் ஸ்ரீ பிரஹதாம்பதாச ராஜ ராஜகோபால தொண்டைமான் பகதூர் தாமே டில்லிக்கு நேரில் சென்று, உதவிப் பிரதமர் சர்தார் வல்லபாய் பட்டேலுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி, இந்திய யூனியனில் சேருவதாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். விவேகமாக நடந்துகொண்ட புதுக்கோட்டை மன்னரை எல்லோருமே பாராட்டினார்கள்.

புதுக்கோட்டை, வெள்ளைக்காரர்களின் கிழக்கு இந்தியாக் கம்பெனி வந்ததற்குப் பிறகு ஏற்பட்ட சமஸ்தானம். கடந்த சுமார் 300 வருஷங்களாக புதுக்கோட்டைப் பிரதேசம் சமஸ்தான மன்னர்களின் ஆளுகையின் கீழ் இருந்துவந்தது. புதுக்கோட்டையின் விஸ்தீரணம் 1179 சதுர மைல்கள்; ஜனத்தொகை 4,38,348. விவசாயம் சம்பந்தப்பட்ட மட்டில் புதுக்கோட்டையைச் செழிப்பான பூமியென்று சொல்வதற்கில்லை; காரணம், போதுமான மழையும், நீர்ப்பாசன வசதியும் இல்லாததுதான். தொழில் சம்பந்தமாகவும் இங்கே யாதொரு அபிவிருத்தியும் கிடையாது; இப்போத்தான் புதுத் தொழில்களை ஆரம்பிக்க முயன்று வருவதாகச் சொல்லப்படுகிறது. சமஸ்தானத்தின் செல்வ நிலைக்கேற்ப, அங்கே வரிகளும் அதிகம் கிடையாது. சமஸ்தானத்தின் பிரதான வருமானம் நிலவரியும், கலால் வரியும் தான். இந்த வரிகளைத் தவிர சமஸ்தான அரசாங்கத்திலிருந்துவேறு எவ்விதவரியும் விதிக்கப்படவில்லை என்றே சொல்லவேண்டும். மக்களுக்கு இந்த ஒரு பெரிய வசதியைச் செய்து கொடுத்ததுடன் சமஸ்தான சர்க்கார் தூக்குத் தண்டனை, தேவதாசி முறை முதலியவற்றையும் ஒழித்து விட்டது. பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் இனமாகக் கல்வி கற்கவும் ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த வகையில், புதுக்கோட்டை சமஸ்தான சர்க்கார் பிரஜைகளுடைய அபிமானத்தையும் பெற்றிருந்தது. ஆனால்

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவை விட்டு வெளியேறிய பின் புதுக்கோட்டை சுயேச்சைத் தனியரசாக இருந்து வருவது புதுக்கோட்டையின் நலனுக்கு உகந்ததாக இல்லாமல் போய்விட்டது. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

பிரிட்டிஷ் சர்க்காரின் பராமரிப்பின் கீழ் இருந்தவரையிலும் புதுக்கோட்டை சமஸ்தானத்துக்குப் பாதுகாப்பு இருந்து வந்தது. பெரிய கலகங்களும், கலவரங்களும் ஏற்பட்டால் அவற்றை அடக்க, முன்பு பிரிட்டிஷ் இந்தியாவின் ராணுவம் போய் உதவி செய்யத் தயாராக இருந்தது. ஆனால் ஆகஸ்டு 15-க்குப் பிறகு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதிபத்தியம் இல்லாது போகவே புதுக்கோட்டை சுயேச்சை அரசாகி விட்டது. இந்த நிலையில் புதுக்கோட்டையில் கிளம்பும் வீண் கலவரங்களை அடக்கி, சமஸ்தானப் பிரஜைகளைப் பாதுகாக்க இந்திய யூனியன் உதவி செய்தாலொழிய வேறு வழியில்லை. பொறுப்பாட்சியைப் பெறுவதின் மூலம் பெரிய பதவிகளை அடையலாம் என்று எண்ணி, அதற்காகச் சிலர் கலவரங்களை உண்டாக்கக் காத்திருந்தார்கள். பலர் தங்களையே மக்களின் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டு திரிந்தார்கள். இந்த ஆபத்தான நிலைமையைச் சமாளிக்கப் புதுக்கோட்டை சமஸ்தானம் இந்திய யூனியனில் சேருவது ஒன்றே வழியாக இருந்தது.

புதுக்கோட்டையில் வியாபார வரியோ வருமான வரியோ கிடையாது. ஆகவே இந்த வசதியைப் பயன்படுத்திக் கொண்டு இந்திய யூனியன் வியாபாரிகள் பேரளவுக்குப் புதுக்கோட்டையில் தங்கள் தலைமைக் காரியாலயம் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு, இந்திய யூனியனில் ஏகபோகமாக வரி கொடுக்காமல் வியாபாரம் செய்து வந்தார்கள். இந்திய சர்க்காருக்கு இந்த மார்ச்சு 3-ம் தேதிக்குப் பிறகு இந்த நஷ்டம் ஏற்படுவது நின்று விடும்.

புதுக்கோட்டையில் விவசாயத்துக்காக நீர்ப்பாசனம் தேவை. ஆனால் புதுக்கோட்டை தனியரசாக இருந்ததால் மேட்டூர் அணைக் கட்டிலிருந்து கால்வாய் வழியாகப் புதுக்கோட்டைக்குத் தண்ணீர் கொண்டுவர முடியாது போய் விட்டதாம். ஆனால், இப்பொழுது புதுக்கோட்டைக்கு நீர்ப்பாசனத்தைக் கொண்டு வர முயன்றால், அம் முயற்சிக்கு வெற்றி கிடைக்கவும் கூடும்.

மேற் கூறியவாறு, இந்திய யூனியனுடன் சேர்ந்து விட்டது புதுக்கோட்டைக்குப் பல வழிகளிலும் லாபமே. இந்திய சர்க்காரின் மேற் பார்வையில் அந்தச் சமஸ்தானத்தில் விவசாயமும் தொழில்களும் அபிவிருத்தி அடையும் என்று எதிர்பார்க்கிறோம். புதுக்கோட்டையைத் தனி ஜில்லாவாக ஆக்க வேண்டுமென்று அங்குள்ள பலருக்கு அபிப்பிராயம் இருந்து வருகிறது. இந்திய யூனியன் சர்க்கார் இதைக் கவனிக்கும் என்றே நம்புகிறோம். தமது ஆட்சியின் கீழிருந்த சமஸ்தானத்தில், இந்தப் புது சகாப்தத்தைத் தொடங்கி வைத்த புதுக்கோட்டை மன்னரைப் பாராட்டுகிறோம்.

காலச் சூழல்

காந்திஜிக்கு ஞாபகச் சின்னம்:

மகாத்மா நம்மிடையே இருந்து மறைந்து விட்டார். இந்தத் தேசத்துக்குத் தேசிய உதவேக மூட்டிய மகாத்மாவிற்கு ஞாபகச் சின்னம் அமைக்க வேண்டியது அவசியமான காரியம் என்பதில் யாதொரு சந்தேகமும் கிடையாது. ஆனால், இந்த விஷயத்தில தேசத் தலைவர்களின் தீர்மானமான அபிப்பிராயத்தை எதிர்பார்க்காமல் பலர் அவசரப்பட்டு என்னென்னவோ செய்ய ஆரம்பித்துவிட்டனர். பலர் பற்பல நகரங்களுக்கும் தெருக்களுக்கும் காந்திஜியின் பெயரை வைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். காந்திஜிக்குக் கோவில் கட்டுவதற்கும் பலர் ஏற்பாடு செய்துவிட்டனர். தஞ்சை ஜில்லாவில் காந்திஜி கோவிலுக்கு அஸ்திவாரம் போட்டிருப்பதாகவே ஒரு செய்தி வந்தது. இன்னும் பம்பாய் மாகாணத்தில் சாந்திவில்லி என்னும் ஊரில் 694 அடி உயரமுள்ள ஒரு குன்றின் மேல் 79 அடி உயரத்தில் காந்திஜியின் உருவச் சிலையைச் செய்து வைக்கப் போகிறார்களாம். இதற்கு நவநகர் ஜாம் சாகேப் அஸ்திவாரக் கல் நாட்டிவிட்டார். மேற்கண்ட காரியங்களைச் செய்பவர்களின் காந்தி-பக்தியைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால், பண்டித நேரு கோவில் கட்டுவதையும், சிலை செய்து வைப்பதையும், கண்ட கண்ட இடங்களுக்குக் காந்திஜியின் பெயரை வைப்பதையும் கண்டித்துள்ளார்; தேசிய ஞாபகச் சின்னக் கமிட்டியினரின் அபிப்பிராயம் வெளிவரும் வரை பொறுத்திருக்கும்படியாகவும் கூறியிருக்கிறார்.

காந்திஜிக்குக் கோவில் கட்டுவதன் மூலம் பொது மக்களிடத்தில் ஒரு புதிய மதத்தைத்தான் சிருஷ்டிக்க முடியும். காந்திஜியைப் பின்பற்றும் முறை அதுவல்ல. அவர் அருளிச் செய்த உபதேசங்களை ஒவ்வொருவரும் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அந்தக் காரியங்களைச் செய்வதுதான் உண்மையான காந்தி—பக்தியாகும். காந்திஜி ஓரிடத்தில், 'ஜனங்கள் உணவும் உடையும் இல்லாமல் தவிக்கும் இந்தச் சமயத்தில் எனக்குச் சிலை செய்ய எண்ணுவது அடாத காரியம். அதை அழுத்தமாக எதிர்க்கிறேன். அந்தப் பணத்தை எல்லாம் ஏழை மக்களுக்காகப் பயன்படுத்துவதே அறிவுடைய செயல். அதுதான் தலைசிறந்த சிலை' என்று கூறியிருக்கிறார். இந்த நிலையில் 79 அடி உயரச் சிலைக்கு அவசரப்பட்டு அஸ்திவாரம் போடுவதன் அர்த்தமென்ன? அதுவும், காந்திஜியின் தலைமையில் தேசத்துக்காக உழைத்த ஒரு தலைவர், அந்த அஸ்திவாரக்கல்லை நாட்டினால் அர்த்தமுண்டு. நவநகர் ஜாம் சாகேப் போன்றவர்கள் காந்திஜிக்கு ஞாபகச் சின்னம் எழுப்புவதன் மூலம் சரித்திரப் பிரசித்தி பெற நினைப்பதை அனுமதிக்கக் கூடாது. இந்தியாவில் இனி நடக்கும் இப்பாதிரியான முயற்சிகளில் பொதுஜனங்கள் ஜாக்கிரதையாக இருந்துகொள்ள வேண்டும். அடுத்தபடியாகத் தமிழ்நாட்டில் காந்திஜி ஞாபகார்த்தமாகப் பல பாடல்களைப் பற்பல சங்கீத வித்வான்கள் இசைத் தட்டுகளில் ஒலிப் பதிவு செய்திருக்கின்ற

னர். காந்திஜியைப் பற்றிய பாடல்கள் வெறும் வார்த்தைக் கோவைகளாக இல்லாமல் நல்ல பாடல்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவற்றையே பிரசித்தம் செய்ய வேண்டும். காந்திஜியின் ஞாபகார்த்த நிதிக்கு எல்லோரும் பண உதவி செய்து, தலைவர்களின் யோசனைப்படியே ஞாபகச் சின்னங்கள் அமைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பட்ஜெட்டுகள்

சமீபத்தில் சென்னை சர்க்காரின் பட்ஜெட்டும், இந்திய சர்க்காரின் பட்ஜெட்டும் வெளி வந்தன. சென்னை சர்க்காரின் பட்ஜெட்டில், வரக்கூடிய வருஷத்துக்கு எதிர்பார்க்கக் கூடிய வருமானம் சுமார் 50 கோடி 32 லட்சம்; செலவு சுமார் 55 கோடி 92 லட்சம். துண்டு விழும் தொகை சுமார் 5 கோடி 60 லட்சம். மாகாண மெங்கும் கலால் வருமானத்தின் மூலம் முன்பு சுமார் 17 கோடி ரூபாய் கிடைத்து வந்தது. இப்பொழுது அந்த வருமானத்தைப் பொருட்படுத்தாமல் மாகாண மெங்கும் மதுவிலக்கை அமலுக்குக் கொண்டுவந்த சென்னை சர்க்காரைப் பாராட்ட வேண்டும். ஆனால், பட்ஜெட்டில் போலீஸ் இலாகாவுக்கு 6 கோடி 40 லட்சம் ரூபாய் ஒதுக்கிவைத்திருப்பது அவசியமாகத் தோன்றவில்லை. யுகத்திற்கு முந்திய வருஷத்தில் போலீஸ் இலாகாவுக்கு 1 கோடி 60 லட்சமே ஒதுக்கப்பட்டது. இந்தியாவில் சுதந்திரப்போர்கள் நடந்தகாலத்தில் அவற்றை அடக்குவதற்காக முழு மூச்சோடு வேலை செய்த பிரிட்டிஷ் அரசாங்கம் ஒதுக்கி வைத்த பணத்தைவிட அதிகமாக இப்போது போலீஸ் இலாகாவுக்கு ஒதுக்குவது நியாயமில்லை. சென்னை மாகாணத்தில் நிஜாம் தொல்லையைத் தவிர வேறு தொல்லை எதுவும் இல்லை என்றே சொல்லலாம். அமைதியான மாகாணம் என்று பெயர் வாங்கியது சென்னை மாகாணம். அமைதியான மாகாணத்தில் போலீஸுக்கு இவ்வளவு பணத்தைச் செலவழிப்பது அனாவசியமல்லவா?

மத்திய சர்க்காரின் பட்ஜெட்டுப்படி வரக்கூடிய வருஷத்தின் வருமானம் சுமார் $230\frac{1}{2}$ கோடி ரூபாய்; செலவு சுமார் $257\frac{1}{2}$ கோடி ரூபாய். துண்டு விழுவது சுமார் 27 கோடி. ஆனால் மத்திய சர்க்காரின் புது வரிகளின் வருமானத்தைச் சேர்த்தால் சுமார் $256\frac{1}{4}$ கோடி வருமானம் வரலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அப்படியானால் துண்டு விழுவது சுமார் 1 கோடியே. வருமானத்தில் ஏறக் குறைய பாதிப் பணத்தை, 121 கோடி ரூபாயை இந்தியாவின் பாதுகாப்புக்காக ஒதுக்கி யுள்ளார்கள். இப்போது மலை ஜாதியினரின் காஷ்மீரப் படையெடுப்பால் பாதுகாப்புக்காக அதிகமாகச் செலவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது; தேசத்தின் வருமானத்தைத் தேசப் புனருத்தாரணத்துக்காகச் செலவிட முடியாத துரதிர்ஷ்டமான நிலையில் இருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது பாதுகாப்பு இனச் செலவு. 165 கோடிப் பணத்தைத் தேசத்தின் அபிவிருத்திக்காக ஒதுக்கி யிருப்பது பாராட்டத் தகுந்ததே. ஆனால் பொது மக்கள் (பொது மக்கள் என்றால் இந்தியாவில், பரம ஏழைகள் பெரும்பான்மையாக உள்ள கூட்டம்

என்று பொருள்) தினமும் உபயோகித்து வரும் தீப்பெட்டி, தேயிலை, காபபி, புகையிலை, புகையிலையின் பிற ரூபங்களான சிகரெட்டு, பொடி முதலியவற்றிற்குத் தற்போதுள்ள வரியை விடச் சிலவற்றிறகு $1\frac{1}{2}$ மடங்கும் சிலவற்றிற்கு 2 மடங்குமாக அதிகமாக்கி வரி விதித்திருப்பது கடன் பளுவால் கஷ்டப்படும் மக்களுக்குப் பெருங் கஷ்டமாக வந்து விடிந்திருக்கின்றது.

அதே சமயத்தில் வர்த்தக லாப வரியும், அதிக வருமான வரியும் குறைக்கப்பட்டுள்ளன. இதனல் பணம் படைத்த வியாபாரிகளுக்கும், தொழிற்சாலை சொந்தக்காரர்களுக்குமே லாபம். அதிக வருமானவரி குறைக்கப்படாமல் இருந்த காலத்தில் முதலாளிகளுக்கு கஷ்டம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இப்போது தொழிற் பெருக்கத்துக்கு வழி கோலுவதற்கென்று முதலாளிகளுக்கு ஊக்கமளிக்கும் முறையில் அவர்களுடைய வரிகளைக் குறைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஏழை மக்களுக்கு வரிவிதித்து, முதலாளிகளுக்கு வரியைக் குறைத்து, தொழிற் பெருக்கத்துக்கு உற்சாகம் அளிப்பதற்குப் பதிலாக அரசாங்கமே தொழில் நிலையங்களைத் தன் ஆதிக்கத்தில் எடுத்துக்கொள்ள முயன்றிருக்கலாம்; ஒரேயடியாக ஒரே தேதியில் அவ்விதம் செய்யாவிட்டாலும், சிறுகச் சிறுகவாவது முயற்சி செய்யலாம். ஆனல் அந்த அபிப்பிராயத்துக்குப் பிரதானத்துவம் கொடுக்காமல், புது வரிகளைச் சுமத்தியது சரியான காரியமாகத் தோன்றவில்லை.

உ. வே. சாமிநாத ஐயர் உருவச் சிலை:

மார்ச்சு மாதம் 6-ந் தேதியன்று மாலையில் சென்னை ராஜதானிக் கலலூரியில் சென்னைப் பிரதமர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரால், காலஞ்சென்ற மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரின் உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது. தமிழ் மொழிக்காகத் தம் வாழ்நாளெல்லாம பாடுபட்டு ஏட்டுப் பிரதிகளாகக் கிடந்த பழந் தமிழ் நூல்கள் பலவற்றை அச்சிட்டு உதவிய தமிழ்ப் பெரியாருக்கு உருவச் சிலை அமைத்தது, தமிழுலகமே பெருமை யளிக்கும் செய்தியாகும. இந்தச் சிலை நிறுவும் பணியில் ஈடுபட்டு உழைத்தவர்களைப் பாராட்டுகிறோம்.

வங்க வீரர்கள்:

வங்காளி பாஷையைக் கிழக்கு பாகிஸ்தானின் ராஜாங்க பாஷையாகவும, பாகிஸ்தான் முழுவதற்கும் உள்ள ராஜாங்க பாஷைகளில் ஒன்றாகவும் பிரகடனம் செய்ய வேண்டுமென்று வங்காளிகள் அனைவரும் கோரினர். ஆனல், பாகிஸ்தான் அரசாங்கம் இதை ஒப்புக்கொள்ள முதலில் மறுத்தது. ஆகவே மார்ச்சு 11-ம் தேதியன்று முஸ்லிம் மாணவர்களே கிழக்குப் பாகிஸ்தான் சர்க்கார் காரியாலயங்களை மறியல் செய்யத் தொடங்கினர். அப்போது போலீஸாரின் தாக்குதல் நடந்தது. அந்தத் தாக்குதலினல் காயமடைந்தவர்களில் மாஜி வங்கப் பிரதமர் ஸ்ரீ பஸ்லுல் ஹக்கும் ஒருவர். கடைசியில் வங்காளிகளின் கோரிக்கை வெற்றி பெற்றுவிட்டது. ஜாதி மத வேற்றுமையின்றிப் போராடிய வங்க வீரர்களின் தாய்

மொழிப் பற்று எல்லோருக்கும் முன் மாதிரியாக நின்று இலங்குகிறது.

முஸ்லிம் லீக் :

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கவுன்சில் சென்னையில மார்ச் 10-ம் தேதி கூடியது. இக் கவுன்சிலின் அங்கத்தினர்கள் 150 பேர். அவர்களில் கூட்டத்துக்கு வந்தவர்கள் 30 பேர்தான். அவர்களிலும் 6 பேரைத் தவிர மற்ற எல்லோரும் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள். இந்த 30 பேரில் 27 பேர் பெரும்பான்மையாக ஓட்டு அளித்ததின் பேரில் முஸ்லிம் லீக்கை இனிக் கலைக்க வேண்டாம் என்று தீர்மானித்துவிட்டார்கள். 150 பேரில் 27 பேர் வந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதே, லீக் இனி உயிர் வாழ்வதில் வட இந்திய முஸ்லிம்களுக்கு எவ்வளவுதூரம் சிரத்தை இருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டப் போதுமானது. இந்த 27 பேரும் இனி லீக், அரசியல் ஸ்தாபனமாகவோ, வகுப்புவாத ஸ்தாபனமாகவோ இருந்து வராமல். முஸ்லிம்களின் சமூக, கலாசார அபிவிருத்திக்காகப் பாடுபடும் என்று கூறியிருக்கிறார்கள். லீக் இல்லாமலே சமூக, கலாசார வளர்ச்சிக்குப் பாடுபட முடியும். இன்னும் லீகர்கள் பலரிடத்தில் பழைய லீக்-உணர்ச்சி மறைந்ததாகத் தெரியவில்லை. காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் நடந்துகொள்ளும் நேர்மையற்ற முறையையும், நிஜாமின் நாஜி தர்பாரையும் பகிரங்கமாக அறிக்கை மூலமோ பொதுக்கூட்டத்தின் மூலமோ எந்த லீக் பிரமுகரும் முன் வந்து கண்டித்ததாகத் தோன்றவில்லை. இப்படிப் பட்டவர்கள், சமூக, கலாசார வளர்ச்சிக்கே லீக் பாடுபடும் என்று சொன்னாலும் அதை நம்புவதற்கில்லை. தென்னிந்தியாவில் இந்துக்களால் முஸ்லிம்களின் சமூக, கலாசார வளர்ச்சிக்கு யாதொரு தடையும் ஏற்பட்டது கிடையாது. வகுப்புக் கலவரங்கள் தலை விரித்தாடிய வட இந்தியாவிலுள்ள முஸ்லிம்களே, லீக் இருந்தாலும் சரி போனாலும் சரி என்று அக்கறையில்லாமல் இருக்கும் போது தென்னிந்திய முஸ்லிம்கள் லீக் ஸ்தாபனத்தைத் தாங்கிப் பிடித்து நிறுத்த முயலுவது புத்திசாலித்தனமான காரியமல்ல. இனி எதிர்காலத்தில் எந்த வகுப்பைச் சேர்ந்த பொதுமக்களும் எந்த வகுப்புவாத ஸ்தாபனத்தையும் வேறு எந்த உருவத்திலும் நடமாட அனுமதிக்க மாட்டார்கள்.

'ஜல உஷா':

இந்தியாவிலேயே கட்டப் பெற்ற 'ஜல உஷா' என்னும் 8000 டன் நிறையுள்ள கப்பலை மார்ச் 14-ம் தேதியன்று விசாகப்பட்டணம் துறைமுகத்தில் இந்தியாவின் பிரதமர் பண்டித நேரு கடலில் மிதக்க விட்டார். எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப்பின் இந்தியாவில் இந்தியர்களால் கட்டப் பெற்ற முதல் கப்பல் இதுதான். இந்தியாவின் ஒப்பற்ற தவப் புதல்வரால் 'ஜல உஷா' மிதக்க விடப்பட்டது மிகமிகப் பொருத்தமான, பெருமகிழ்ச்சிக்குரிய காரியமாகும். சுமார் 30 வருஷங்களுக்கு முன் இந்தியாவின் முதல் சுதந்திரக் கப்பலை ஓட்டிய தமிழ்ப் பெருமகன் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெருமிதமான கனவு இன்று பூரணத்துவம் எய்திவிட்டது. 'ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்

வோம்' என்று பாடி முழக்கிய வீரக் கவிஞன பாரதியின திருவாக்கும் இந்தச் சரித்திரப் பிரசித்தமான சந்தர்ப்பததில் நமக்கு நினைவுக்கு வருகிறது.

கம்பர் தினம:

கவிசசக்கரவர்த்தி கம்பரின் தினம் பங்குனி மாதம் 10-ம்தேதி (23-3-48) வருகிறது. உலக மகா காவியங்களுக்குத் தலைமை வகிக்கும் ராமாயண காவியத்தைச் சிருஷ்டித்த கமபரின் தினததை நகரங்கள் தோறும் கிராமங்கள் தோறும் கொண்டாட வேண்டியது அவசியமாகும். தாய் மொழிக்காக வங்காளிகளைப் போலப் போராடவும் துணிந்தவர்கள் தமிழர்கள். ஆகவே தாய் மொழியாகிய தமிழுக்குப் பெருமை தேடியளித்த கவிச் சக்கரவர்த்தியின் தினத்தைக் கொண்டாடுவது தமிழன்னைக்கு விழாக் கொண்டாடியதே ஆகும். தவிரவும் இந்தியாவின் புதிய சுதந்திர யுகத்தில், முதலாவதாக வரும் கம்பர் தினம இதுதான் என்ற முக்கியமான விஷயததையும் ஞாபகப்படுதத விரும்புகிறோம.

இரண்டு ஆள்!

ஜனன மரணக் கணக்குகளைப் பதிவு செய்யும் ரிஜிஸ்தரார் காரியாலயத்திற்கு ஒரு நாள் ஒரு குடிகாரன் வந்தான். ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் வந்து, "எல்லோருக்கும் நமஸ்காரம். ரிஜிஸ்தரார் எங்கே போயிருக்கிறா? எனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கிறதைப் பதிவு செய்ய வேண்டும்" என்றான்.

"என்ன? எல்லோருக்கும் நமஸ்காரமா? நான் ஒருவன் தானே இங்கே இருக்கிறேன்?" என்றார் ரிஜிஸ்தாரர்.

வந்தவன் மிகவும் ஆச்சரியத்துடன் "ஒரு ஆளா? நீங்கள் ஒரு ஆள் தான இங்கே இருக்கிறீர்கள்? அப்படியானல் நான் வீட்டுக்குப் போய் நன்ருகப் பார்த்து விட்டு வருகிறேன். எனக்கு பிறந்திருப்பது ஒரு குழந்தையா அல்லது இரட்டைக் குழந்தைகளா என்பது இப்போது சந்தேகமாக இருக்கிறது" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்

—டெயிலி ரிப்போர்ட்டர்.

பட்டாபிஷேக வைபவம்

தென் பஸிபிக் பிராந்தியத்திலுள்ள ஸாலோமன், நியூ ஹெப்ரிடீஸ் முதலிய தீவுகளில் வழங்கும் அரை குறை ஆங்கில மொழியைப்பற்றி நான் படித்துக்கொண்டிருந்தேன் அப்போது, ஆரும் ஜார்ஜ் மன்னரின் பட்டாபிஷேக வைபவத்தைப் பற்றி அரைகுறை ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு பாரா மிகவும் அதிசயமாக இருந்தது. அதைக் கீழே கொடுத்திருக்கிறேன்:

ஜார்ஜ் அரசர், அவர் செத்தார். ஒண்ணும் நம்பர் மகன், எட்வர்ட், அவருக்கு உடைகளில் ஆசை இல்லை. இரண்டாம் நம்பர் மகன் அவருக்கு ஆசை உண்டு. பாதிரியார், அவர் புது அரசரோடு நிறையப் பேசினார், அவர் சொன்னர்: "நீங்கள் எல்லா ஜனங்களிடமும் நல்லதாகக் காணப்படுகிறீர்களா?" ராஜா அவர் பேசுகிருர்கள்: 'ஆம்' பிறகு பாதிரியார், நிறைய சர்க்கார் உத்தியோகஸ்தர், கிடங்குக் கணக்கன், சிப்பாய், பாங்க் மானேஜர், போலிஸ்காரன் எல்லாரும் அவன் எழுந்து நின்று பாட்டுப் பாடி, வாங்கா ஊதுகிருர்கள். முடிந்தது"

—ஜார்ஜ் ஆர்வெல் எழுதியதன் மொழிபெயர்ப்பு.

புதிய விஷயங்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது

காய்கறித் தோட்டம்

தோட்டம் போடுவது எப்படி
விதை விதைப்பது எப்படி
எரு இடுவது எப்படி
காய்கறிகளிலுள்ள உணவுச்
சத்து யாது

என்ற விஷயங்களை
அறிய வேண்டுமா?

கத்தரி வகை, அவரை வகை,
கீரை வகை, பூசணி வகை, கிழங்கு
வகை, சீமைக் காய்கறி வகை

பயிரிடக் கற்றுக்
கொள்ள வேண்டுமா?

இதற்கேற்ற புத்தகம்
காய்கறித் தோட்டம்
மு. அருணாசலம் எழுதியது

விலை ரூ. ஐந்து
தபால் செலவு தனி

சக்திகாரியாலயம்

சென்னை 14

இக் கட்டுரை மகாத்மா காந்தி கடைசியாக எழுதிய இரண்டு கட்டுரைகளில் ஒன்று. எதிர் காலத்தில் காங்கிரஸின் நிலை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைப் பற்றிக் காந்திமகான் கூறியிருப்பவை எல்லாம், இந்திய மக்கள் சிரமேற்கொண்டு கடைப்பிடிக்க வேண்டியனவாகும்.

காங்கிரஸின் நிலை

மகாத்மா காந்தி

இந்திய தேசிய காங்கிரஸ்தான் இந்தியாவிலேயே மிகப் பழைய ஸ்தாபனம். பல இன்னல்களுக்குப் பிறகு அஹிம்ஸா பூர்வமாக இந்திய சுதந்திரத்துக்கு வழிகோலிய அந்த மகா ஸ்தாபனத்தை அழித்துவிடக் கூடாது. இந்திய நாடு அழிந்தால்தான் இந்த ஸ்தாபனம் அழியவேண்டும். ஒழுங்கு முறை வழுவாத ஒரு ஸ்தாபனம் வளரும்; வளரவில்லை என்றால் இறந்தொழியும். நம் நாட்டிற்கு அரசியல் சுதந்திரம் வாங்கித் தந்துள்ளது காங்கிரஸ். ஆனால் பொருளாதார சுதந்திரம், சமூக சுதந்திரம் முதலியனவற்றைப் பெற காங்கிரஸ் உழைக்கவேண்டும். அரசியல் சுதந்திரத்தைக் காட்டிலும் இந்தச் சுதந்திரம் பெறுவது கடினமான காரியம். ஏனெனில் இந்தச் சுதந்திரம்தான் மக்களுக்கு ஆக்கமளிப்பது; அரசியல் சுதந்திரத்தைப் போல இதில் பரபரப்போ படாடோபமோ கிடையாது. ஆக்க வேலைகள்தாம் மக்கள் சக்திகள் அனைத்தையும் தூண்டுகின்றன.

காங்கிரஸ், தான்கோரிய சுதந்திரத்தின் பூர்வாங்கமான, அவசியமான பகுதியைப் பெற்றுவிட்டது; கஷ்டத்தின் பேரில் கிடைக்கக்கூடிய மற்றச் சுதந்திரங்கள் இனிமேல்தான் வரவேண்டும். ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் கஷ்டமான வேலையினிடையே காங்கிரஸ், பெயரளவில் மாத்திரம் ஜனநாயகக் கொள்கைகளைக் கொண்ட சிறு ஸ்தாபனங்களையும், லஞ்சத்தைப் பெருக்கும் சாதனங்களையும் சிருஷ்டித்துவிட்டது. களைகள் மலிந்து, ஆபாசமாக வளர்ச்சி பெற்றுவரும் இந்தப் போக்கைத் தவிர்ப்பது எப்படி?

காங்கிரஸ் பிரத்தியேகமான அங்கத்தினர் ஜாபிதா வைத்துக் கொள்ளுவதை நிறுத்தி விட வேண்டும். அங்கத்தினர் எண்ணிக்கை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு கோடி ஆனதில்லை. அந்த அங்கத்தினர்கள் இன்னார்தான் என்று சொல்லக்கூடிய முறையிலும் இருக்கவில்லை. அத்துடன் பதிவு செய்யப்படாமல் லட்சக்கணக்கான அங்கத்தினர்கள் காங்கிரஸுக்கு இருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் சேவைக்கு அழைக்கப்படவில்லை. வாக்காளர் ஜாபிதாவைப் போல அங்கத்தினர் ஜாபிதாவும் ஆண், பெண் அனைவரையும் கொண்டதாக இருக்க வேண்டும். போலியான பெயர்களை ஜாபிதாவில் சேர்க்க

விடாமலும், நியாயமாக இருக்க வேண்டிய பெயர்கள் ஜாபிதாவிலிருந்து தள்ளப்படாமலும் கவனித்துக்கொள்ள வேண்டியது காங்கிரஸின் வேலையாகும். தங்களுக்கு அவ்வப்போது இடப்படும் பணியை இனிது முடிக்கும் தேசத்தொண்டர்களுக்குத்தான் காங்கிரஸ் அங்கத்தினர் ஜாபிதாவில் இடம் உண்டு என்ற முறையில் செய்துகொள்ள வேண்டும். துரதிருஷ்ட வசமாக அந்தத் தொண்டர்களைத் தற்காலிகமாக நகரங்களிலிருந்து பொறுக்கி அவர்களில் பெரும்பாலானவர்களைக் கிராமங்களுக்கு வேலை செய்ய அனுப்பவேண்டியிருக்கிறது; மற்றத் தொண்டர்களைக் கிராமங்களிலிருந்தே பொறுக்க வேண்டும். கிராமத்தொண்டர்களின் எண்ணிக்கையை நாளுக்குநாள் அதிகமாக்க வேண்டும்.

தொண்டர்கள், அவரவர்களுடைய சுற்றுவட்டாரங்களில், சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட வோட்டர்களுக்கு உதவியாக இருந்து அவர்களுக்குப் பணியாற்ற வேண்டும். பல மக்களும், பல கட்சியினரும் அவர்களோடு சேர முயலுவார்கள்; இப்படி முயலுபவர்களில் திறமைசாலிகள்தான் வெற்றி பெறுவார்கள். இதே முறையில்தான் காங்கிரஸ் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்றுவந்து, தன் பழைய சிகரற்ற நிலையை மீண்டும் பெறமுடியும். நேற்றைய வரையிலும் காங்கிரஸ் பகிரங்கமாகத் தேச சேவனாக இருந்து வந்தது; கடவுளின் சேவகனாக இருந்தது. இனிமேல் அது கடவுளுக்கு மட்டுமே சேவகன் என்று, தனக்கும் உலகத்துக்கும் பிரகடனம் செய்து கொள்ளட்டும். பதவி மோகங்கொண்டு பதவி வேட்டையில் ஈடுபடுமானால் காங்கிரஸ் ஸ்தாபனம் அழிந்துவிடுவது நிச்சயம். நல்லவேளையாக இன்று இந்தத் துறை முழுவதையும் காங்கிரஸ், தானே பற்றிக்கொண்டிருக்கவில்லை.

வருங்கால நிலைமையை நான் எல்லோருக்கும் தெரியும்படியாக மட்டுமே சுட்டிக் காட்டியிருக்கிறேன். எனக்கு அவகாசமும், நல்ல உடல் நலமும் இருந்தால் தேசத் தொண்டர்கள், தங்களுடைய எஜமானர்களாகிய இந்த நாட்டு ஆண் பெண் அனைவரிடத்திலும் நல்ல பெயர் எடுக்க என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றித் தீர விவரித்து எழுதலாம் என்று நம்புகிறேன்.

✻

மூலகாரணம்

ஸாம்மி ஸ்டெப்ட் என்ற பிரசித்தி பெற்ற சாஹித்ய கர்த்தா, "தினந்தினமும் காதலிக்கிறேன் உன்னை" என்று ஒரு பாட்டு எழுதினர். இந்த மாதிரி அவரை எழுதத் தூண்டியது எது காரணம் தெரியுமா? இதே வார்த்தைகளை ஒரு நாள் ஒரு சிறு பையன் ஒரு பெண் குழந்தையிடம் சொல்லிக் கொண்டிருந்தது அவர் காதில் விழுந்தது தான்!

—லைட் ஆப் லைட்

மரியாதையினல் செலவு

ஒருவருக்கொருவர் மரியாதை செய்து கொள்வதற்காக அமெரிக்கர்கள் வருஷத்துக்கு ஒரு கோடி டாலர்கள் செலவழிக்கிறார்களாம், எப்படி? தந்திகளில் 'தயவுசெய்து' என்ற வார்த்தைகளைச் சேர்ப்பதினல்தான் வருஷத்துக்கு இவ்வளவு செலவு ஆகிறதாம்!

—லைட் ஆப் லைட்

சக்தி காரியாலயத்தின்

புதிய வெளியீடு

சுதந்திரம்

வாரப் பத்திரிகை

புது வருஷப் பரிசாக தமிழ்
மக்களுக்கு அளிக்கிறோம்

★

அறிஞர், வ. ரா.

ஆசிரியராக இருக்க இசைந்துள்ளார்

விலை அணு ஒன்று

விபரங்களுக்கு :

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை 14.

முதல் டெலிபோன்

○

'ஹல்லோ'

பழைய கறுப்பன்

புது அறிவைத் தேடிச் சேமித்து வைத்துக் கொள்ள நான் நீண்ட நாட்களாக முயற்சிசெய்து வருகிறேன். ஆனால், உண்மையில் நான் செய்தது என்ன? ஏற்கெனவே கடைக்குள்ளாகக் கிடங்கிலிருந்த சரக்குகளைக் கொண்டுவந்து இன்னும் கொஞ்சம் அலங்காரமாக வெளியே பரப்பி வைத்திருக்கிறேன். —சி. இ. எம். ஜோட்

1876-ம் வருஷம் ஜூன் மாதம், பிலடெல்பியாவில்கூடிய கண்காட்சியைக் காண மக்கள் திரள் திரளாகச் சென்றனர். அங்கு வைக்கப்பட்டிருந்த காட்சிப் பொருள்களிலேயே ஒன்றுதான் மக்களைப் பெரிதும் கவர்ந்தது. அதுதான் அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் கண்டுபிடித்த டெலிபோன். அங்கு வந்திருந்த பிரிட்டிஷ் விஞ்ஞானி சர் வில்லியம் தாம்சன், "நான் கண்ட பொருள்களிலேயே மிக அதிசயமானது இதுதான்" என்று வியந்துகூறினார். பிரேசில் நாட்டு மன்னன் டாம்பெட்ரோ இதைக் கண்டு பிரமித்து, "என்ன ஆச்சரியமடா இது! இது பேசுகிறதே!" என்றான்.

டெலிபோன் மூலம் பல மைல்களுக்கு அப்பாலுள்ளவர்களோடு பேசுவதைக் கண்டு இது வித்தையாயிருக்குமோ, என்று மக்கள் சந்தேகித்தனர்.

டெலிபோனைக் கண்டுபிடித்த கிரஹாம்பெல் முதலில் டெலிபோன் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆராய்ச்சி செய்யவில்லை. செவிடர்களுக்கு உதவியாக ஒரு கருவியைக் கண்டுபிடிக்கவேண்டும் என்றுதான் அல்லும் பகலும் உழைத்தார். காதின் உட்புற அமைப்பு, பேச்சைக் கேட்க காதில் இயற்கையாக அமைந்துள்ள சாதனங்கள் முதலியவற்றைத் தெளிவாகத் தெரிந்துகொண்டார். அதற்கேற்பவே ஆராய்ச்சி செய்தார்.

ஒருசமயம் கம்பியின் வழியாக அவரையுமறியாமல் தற்செயலாக சப்த அலைகளைச் செலுத்தினார். சப்த அலைகளைக் கம்பிகள் வழியாகச் செலுத்த முடியும் என்பதைக் கண்டுபிடித்தவுடனேயே குரலோசையையும் அனுப்பலாம் என்று கண்டுபிடித்து விட்டார், பெல். பெல்லும் அவருடைய சிஷ்யராகிய வாட்சனும் இடைவிடாமல் முயன்று 1876-ம் ஆண்டு டெலிபோனைக் கண்டுபிடித்தார்கள். முதன் முதலில் டெலிபோனில் பேசப்பட்ட வாக்கியம் என்ன தெரியுமா? "மிஸ்டர் வாட்சன், இங்கே வாருங்கள்" என்பதுதான்.

இவ்வளவு பெரிய விஞ்ஞான அதிசயத்தை நாளாவட்டத்தில் மக்கள் தம் வாழ்க்கையில் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

பெல்லுக்குப் பணக்கஷ்டம் நேர்ந்தபொழுது, அவரிடம் இருந்த டெலிபோனை லட்சம் டாலருக்குக் கேட்டார்கள். பெல் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஆகாய விமானத்தைப் போல டெலிபோனினால் உலகத்தின் பரப்பு இன்று குறுகிவிட்டது.

டெலிபோன் என்னும் இந்த அதிசயக் கருவிக்கு லட்சம் டாலர்கூட விலை கொடுக்க முன்வந்தனர்......முதல் முதலில் செய்யப்பட்ட டெலிபோன் கருவி சம்பந்தமான சில ருசிகரமான விபரங்கள் அடங்கிய கட்டுரை இது.

“விருந்தாளிகள் வந்திருக்கின்றனர்

தேயிலை பானமருந்தி சிம்பாஷிக்க...சம்பாஷணை ரஸமானதாக விருக்கலாம், ஆனால் டீ அவர்களுக்கு திருப்தியளிக்க முடியாது......ஏனெனில் விருந்தளிக்கும் அம்மையார் தேயிலை பானத்தை ஈரமான குளிர்ந்த பாண்டத்தில் தயாரித்தார். நல்ல டீ தயாரிக்க ஈரமில்லாத வெது வெதுப்பான பாண்டமே தேவை.”

கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறுவதற்கு டீ அருந்துகிறார்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்னதென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிக செலவும் இடையாது. ஐந்து சுலபமான விதிகளை பின்பற்றினால் போதும். உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் தேயிலை பானம் நறுமணம் ததும்பியிருக்கவும் இவ்விதிகளை உங்கள் மனதில் பதியவைத்து எப்போதும் வீட்டில் இவ்விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

ஐந்து
சுலபமான விதிகள்.

1. புதியதாக எடுத்ததும புதிதாகக் கொதித்துமான நீரையே உபயோகிக்கவும். 2. உபயோகிக்கும் முன் பாண்டத்தை வெதுவெதுப்பாக்கவும். 3. பேர் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் நல்ல தேயிலை உபயோகிக்கவும். 4. தேயிலை கஷாயம உபயோகிக்கும் முன் 3 முதல் 5 நிமிஷம் நன்கு ஊறவேண்டும். 5. பாலைக் கோப்பையில் சேர்த்துக் கொள்ளவும்—பாண்டத்தில் வேண்டாம்.

“தேயிலைப் பானம் - சில யோசனைகள்” என்ற இலவச புத்தகம ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, அல்லது தமிழ் பாஷையில் கிடைக்கும். கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101 நேதாஜி ஸுபாஷ் ரோட், தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா என்ற விலாசத்துக்கு விண்ணப்பித்து பெறலாம்.

★

நல்ல தயாரித்த **டீ** யைப் போன்றது வேறொன்றுமல்ல.



இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டால் வெளியிடப்பட்டது.

ஊ 296.

லிப்டன்ஸ்
என்றால்
முதல்தரமான
டீ
LIPTON'S TEA GIRL
FINEST INDIAN DUST TEA

நாயர்—ஈழவர் கலகம்

பி. கேசவதேவ்

பாச்சுவும் பரமனும் சமவயதினர்; இருவருக்கும், வயது எட்டு இருக்கும். பாச்சு ஒரு நாயர் வகுப்பைச் சேர்ந்தவன். பரமு ஈழவ வகுப்பினன். அவர்கள் அண்டை வீட்டுக்காரர்கள்—பாச்சு வடக்கு வீட்டைச் சேர்ந்தவன்; பரமு தெற்கு வீட்டைச் சேர்ந்தவன்.

பாச்சுவின் தந்தை பப்புப் பிள்ளை; பரமுவின் தந்தை நாணு.

குடும்பச் சொத்து பாகம் பிரிக்கப்பட்டது; பப்புப் பிள்ளைக்கு ஒன்றரை ஏக்கர் மாந்தோப்பும், ஐம்பது கலம் நெல் விளையும் பூமியும் கிடைத்தன. அவன் மனைவிக்கு இரண்டு ஏக்கர் மாந்தோப்பும், நாற்பது கலம் நெல் விளையும் நிலமும் கிடைத்தன. ஒருவித்மாக கௌரவத்துடனும் சுகமாகவும் வாழ, போதுமான சொத்து பப்புப் பிள்ளைக்கு இருந்தது.

நாணு மீன் வியாபாரி. நல்ல வருவாய் உள்ள தொழில் இது. ஒரு விதமாக கௌரவத்துடனும் சுகமாகவும் வாழப் போதிய வருவாய் நாணுவுக்கும் கிடைக்கும். அவன் கொஞ்சம் பணம் சம்பாதித்திருந்தான்.

பப்புப் பிள்ளை மத்திய சங்கத்தின் பொக்கிஷதார்; நாணு இளைச் சங்கத்தின் காரியதரிசி. இருவரும் கொஞ்சம் படித்திருக்கிறார்கள். படிப்பதில் இருவருக்கும் அளவு கடந்த ஆர்வம். "சர்வீஸ்," "மலையாள ராஜ்யம்", "பாரதப் பத்திரிகை," "எம். என் நாயர் மாசிகை" ஆகியவைகளுக்கு பப்புப் பிள்ளை சந்தா செலுத்தி இருந்தான்; "மித வாதி," "மலையாள மனோரமா" "கௌமுதி," "சகோதரன்" ஆகிய பத்திரிகைகள் நாணுவின் இணைபிரியாத நண்பர்கள்.

பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களை நாணுவும் பப்புப் பிள்ளையும் சேர்ந்துதான் முடிவு செய்வார்கள். பப்புப் பிள்ளை பாகத்திற்குக் கிடைத்த சொத்து விஷயமாக அவனுடைய ஆரத்து மாமா ஒரு கேஸ் தாக்கல் செய்தார். அந்தக் கேஸ் இரண்டு மூன்று வருடங்கள் நடந்தது. பப்புப் பிள்ளை ரொம்பச்சிரமப்பட்டான். தேவையான பொழுது பணம் கொடுத்தும் வேறு பல வழிகளிலும் பப்புப் பிள்ளைக்கு நாணு உதவி புரிந்தான். ஒரு காலத்தில் நாணுவுக்கு மீன் வியாபாரத்தில் பெரிய நஷ்டம் ஏற்பட்டது. வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்த வகையின்றி நாணு வாடினான். வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தவில்லை என்றால் நிலைமை நெருக்கடியாகும். அன்று தேங்காய் விற்றுக் கிடைத்த பணத்தையும், மனைவியின் நகையை அடகு வைத்து வாங்கிய பணத்தையும்—மொத்

சிறுவர்களின் சண்டையைப் பெரியவர்கள் வகுப்புக் கலகமாக மாற்றிவிடுகிறார்கள். சிறுவர்களோ பிறகு ஒன்று சேர்ந்துகொண்டார்கள். ஆனால், வெட்கம்கெட்ட மனித சமூகம் பிறகும் வகுப்புப் போராட்டத்தை நடத்திக் கொண்டு வருகிறது. அதில்லாமல் அடித்துச் சாகும் மனித சமூகத்தை இக்கதையின் மூலம் தார் போட்டுக் குத்துகிறார் மலையாள எழுத்தாளர் ஸ்ரீ பி. கேசவதேவ்.

தம் 300 ரூபாயைப் பப்புப்பிள்ளை நாணுவுக்குக் கடன் கொடுத்தான். எனவே, வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தவும், நஷ்டத்தைச் சமாளிக்கவும் நாணுவுக்கு வசதி ஏற்பட்டது. அவர்களுக்குள் எப்பொழுதும் கொடுக்கல் வாங்கல் நடந்து வந்தது.

ஆனால், பப்புப் பிள்ளை சுத்த சுயம்பிரகாச நாயர்; நாணு அப்பழுக்கற்ற ஈழவன். இருவருக்கும் வகுப்புஉணர்ச்சி அதிகம் என்பது இதன் பொருள். இருவரும் அதிகாலையில் சங்கரன் நாயர் சாயாக் கடைக்குச் செல்லுவார்கள். அந்தக் கிராமத்திலுள்ள பெரிய மனிதர்கள் அங்கேதான் டீ குடிப்பார்கள். ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்கள், கிராம போஸ்ட் மாஸ்டர், மத்திய சங்கம், கிளைச் சங்கம், பரஸ்பர சகாய சங்கம் ஆகியவைகளின் காரியதரிசிகள், வேலை இல்லாத மூன்றுபட்டதாரிகள், விடுமுறை காலமென்றால் மூன்று அல்லது நான்கு மாணவர்கள், ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் குமஸ்தா— இவர்கள் எல்லோரும் சங்கரன் நாயர் டீ கடையில் பற்றுவரவுக்காரர்கள். சமூக, தேசிய, சர்வ தேசிய விஷயங்கள் அங்கே விவாதிக்கப்படும். சமூகக் கலகம், உத்தியோகவிநியோகம், சட்ட சபைப் பிரதிநிதித்துவம், உத்தியோகஸ்தர்களின் சமூக மனப்பான்மை ஆகிய விஷயங்களைப் பற்றி வாக்குவாதம் நடக்கும்பொழுது பப்புப் பிள்ளையின் 'நாயர் உணர்ச்சி'யையும் நாணுவின் 'ஈழவ உணர்ச்சி'யையும் பார்க்க வேண்டுமே! அவர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து நின்று சொற் போர் செய்வதைக் கண்டால், அவர்கள் ஜன்ம விரோதிகள் என்று கேட்பவர்களுக்குத் தோன்றும். பப்புப் பிள்ளையின் பார்வையில் ஈழவர்கள் அத்தனை பேரும் நன்றி இல்லாதவர்களாகவும், நாணுவின் திருஷ்டியில் ஈழவர்கள் அனைவரும் திருடர்களாகவும் தோன்றுவார்கள். "நாயர் குல மகிமையும் ஜாதி மகிமையும் படைத்தவன், தியாகத்தின் உறைவிடம், ராஜபக்தியும் தேசபக்தியும் உள்ளவன், தீரன், வீரன்" —இவ்வாறு பிரசங்கம் செய்வான் பப்புப் பிள்ளை. "நாயர் திருடன்; அவன் நடிப்புத்தேசபக்தன்"—இது நாணுவின் பல்லவி. நாயர் சமூகத்தின் உத்தியோகக் குத்தகையையும், மூடமதாசாரங்களையும், பிராமணனுக்குச் சேவை செய்யும் மனப்பான்மையையும் நாணு உண்மையாகக் கண்டிப்பான். இறுதியில் தோல்வியோ, வெற்றியோ இன்றி இரண்டு கட்சிக்காரர்களும் தத்தம் போக்கில் பிரிந்து செல்லுவார்கள்.

பப்புப் பிள்ளையின் மனைவி அம்முக்குட்டியும், நாணுவின் மனைவி ஜானகியும் நெருங்கின சிநேகிதைகள். அவர்கள் சில்லறை கொடுக்கல் வாங்கலும் நடத்தினார்கள். ஆனால், அம்முக்குட்டியின் வீட்டிற்கு ஜானகியும், ஜானகியின் வீட்டிற்கு அம்முக் குட்டியும் செல்லமாட்டார்கள். குழந்தைகளையும் இதற்கு அனுமதிக்க மாட்டார்கள். வேலியின் இரு பக்கங்களிலும் நின்றுகொண்டு நாள் தோறும் ஐந்து அல்லது ஆறுதரமாவது இருவரும் பேசுவது வழக்கம். தங்கள் கணவர்களின் குண தோஷ விமர்சனம், குழந்தைகளின்குறும்புத்தனம், அண்டை

வீட்டுக்காரர்களின் வம்பு, நகைகளைப் பற்றி அபிப்பிராயம்—இவைகளைப் பற்றி அவர்கள் ஓயாது பேசுவார்கள். குழந்தைகள் அழும்பொழுதும், கணவர்கள் அழைக்கும் பொழுதும்கூட அவர்களை வேலிக்கு அருகிலிருந்து அகற்றுவது அசாத்தியம். ஒருவருக்குத் தெரியாமல் இன்னொருவர் அன்னியரிடம் குறை கூறுவதும் வழக்கம்தான்.

பாச்சுவையும் பரமுவையும் ஒரே நாளில் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். இப்பொழுது அவர்கள் இருவரும் மூன்றும் வகுப்பில் படிக்கிறார்கள். பள்ளிக்கூடம் சுமார் முக்கால் மைல் தூரத்தில் இருந்ததால் பாச்சுவையும் பரமனையும் ஒன்றாகப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவார்கள். அவர்கள் ஒன்றாகப் பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள்; ஒன்றாகத் திரும்பி வருவார்கள். அவர்கள் அத்தியந்த நண்பர்கள். எப்பொழுதாவது பாச்சு பரமுவின் வீட்டிற்குச் செல்லுவான். ஆலயப் பிரவேச இயக்கத்திற்குப் பிறகு சமையல் அறையைத் தவிர ஏனைய இடங்களுக்குச் செல்ல பரமுவுக்கு அனுமதி கிடைத்தது. இதே உரிமைதான் பாச்சுவுக்கு பரமுவின் வீட்டிலும் கிடைத்தது.

பாச்சுவின் வீட்டுக்கு முன்னே ஒரு சிறிய மணல் குன்று இருந்தது. பாச்சுவும் பரமுவும் அங்கேதான் விளையாடுவது வழக்கம். பரமுவின் வீட்டில் விளையாடினால் அங்குள்ள மாமரத்தடியில் விளையாடுவார்கள். மணல் குன்றின் உச்சியில் இருந்து அவர்கள் கரணம் அடிப்பார்கள்; யானைகளைப் போன்று மண்ணை வாரி இறைப்பார்கள்; குஸ்திக்காரர்களைப் போல் தொடையில் தட்டிக் கொண்டு "குஸ்தி" போடுவார்கள். பிறகு இருவரும் ஓடுவார்கள். பரமுவின் வீட்டிலுள்ள மாமரத்தில் ஏறுவார்கள். மாங்கொம்பில் உட்கார்ந்துக் குதிரைச் சவாரி செய்வார்கள். அவர்கள் தினுசு தினுசான விளையாட்டு விளையாடுவார்கள்.

ஒரு நாள் காய்ந்து கிடந்த கொம்பில் உட்கார்ந்துகொண்டு பாச்சு, குதிரைச் சவாரி செய்தான். கீழே நின்றுகொண்டிருந்த பரமு கொம்பைப் பிடித்துக் குலுக்கினான்.

பாச்சு கொம்பைப் பலமாகப் பிடித்துக்கொண்டு, "சரி, குலுக்கு; நான் விழமாட்டேன்." என்று சொன்னான்.

பரமு மீண்டும் கொம்பைப் பிடித்துக் குலுக்கினான்.

பாச்சு நடுங்கினான். பயத்துடன் அவன் சொன்னான்: "வேண்டாம் பரமு, நிறுத்து."

பரமு ஏளனம் செய்தான்.

"ஐயோ! பாச்சு பயப்படுகிறான்!" அவன் மீண்டும் கொம்பைப் பிடித்துக் குலுக்கினான்.

பாச்சு சொன்னான்: "நான் விழுவேன், பரமு. நான் விழுந்தால் உன்னை அடிப்பேன்."

"அதைப் பார்க்கலாம்"

பரமு கொம்பைப் பிடித்துப் பலமாகக் குலுக்கினான்.

பாச்சு கீழே விழுந்தான். அவனுக்கு வலித்தது. அவன் எழுந்திருந்து பரமுவின் முதுகில் குத்தினான். பரமு கூச்சலிட்டான்.

நாணு வீட்டிலிருந்து வெளியில் வந்தான். பரமு விம்மலுக்கிடையே சொன்னான்: "பாச்சு என்னை அடித்தான்."

கீழே கிடந்த ஒரு சிறிய கம்பை எடுத்து நாணு பாச்சுவை அடித்தான். உரக்கக் கூவிக் கொண்டு அங்கிருந்து ஓடினான் பாச்சு.

சம்ஹார ருத்திரனைப் போல் பப்புப் பிள்ளை பாய்ந்து வந்து வீட்டுக்கு முன் நின்றுகொண்டிருந்த நாணுவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். நாணு பப்புப் பிள்ளையை அடித்தான்... பப்புப் பிள்ளை கொடிய சபதம் செய்து விட்டு அப்பால் சென்ருன்.

"நாயர் - ஈழுவர் கலகம்" என்று பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் விளம்பரப்படுத்தின. "கலகத்தை அடக்க ராணுவம் அனுப்பப்பட்டிருக்கிறது." "கலகக்காரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்கிருர்கள்"— இவை பத்திரிகைகளில் இடம் பெற்ற தலைப்புகள்.

ஆஸ்பத்திரி நிறைந்துவிட்டது. கால் ஒடிந்தவர்கள், கையை இழந்தவர்கள், தலையில் காயம் பட்டவர்கள், இறந்தவர்கள், இறந்துகொண்டிருந்தவர்கள்— மொத்தத்தில் பயங்கரமான, மனத்தை உருக்கும் காட்சி அது!

பாதையில் யாரும் நடமாடவில்லை. யாரும் வெளியில் வரவே இல்லை. பெண்களும், குழந்தைகளும் வீட்டிற்குள் அடைந்து கிடந்தனர். ஆண்கள் அத்தனை பேரும் கலகக்காரர்களின் சங்கத்தில் சேர்ந்து பழிவாங்க "சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டு" ஒளிந்து இருந்தனர்.

"தெற்கே வழியில் கலகம்," "பரசல் கடவில் கலகம்," "கோவிந்தப் பிள்ளைக்கு வெட்டுக் காயம்," "குஞ்சுக் குஞ்சு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்," "சங்கரப் பிள்ளையும் அச்சுதனும் இறந்தார்கள்"— வீடுகளில் ஒளிந்துகொண்டிருந்த பெண்களுக்குக் கிடைத்த செய்திகள் இவை.

நாயர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஈழவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளை ஆக்கிரமித்தார்கள். இரு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளிலிருந்து எழுந்த சோகத் தொனி, ஆயுதங்கள் எழுப்பின பயங்கரமான சப்தத்திலும் யுத்த கோஷங்களிலும் கலந்தது. குளத்திலிருந்து ஜலம் எடுத்துக் கொண்டிருந்த ஒரு நாயர் பெண்ணை ஈழவக் கலகக்காரர்கள் தூக்கிக்கொண்டு எங்கோ ஓடிவிட்டார்கள். கலகத்துக்குப் பயந்து வீட்டில் ஒளிந்துகொண்டிருந்த ஓர் ஈழவப் பெண்ணை நாயர் வகுப்பைச் சேர்ந்த கலகக்காரர்கள் பகிரங்கமாக மானபங்கம் செய்தார்கள். கலகம்! கலகம்! நாயர் - ஈழவர் கலகம்!

"இந்தக் கலகத்திற்கு ஜவாப்தாரிகள் ஈழவர்கள்தான். இந்தக் கலகத்தில் ஈழவர்கள் நாயர் சமூகத்திற்குச் செய்த தீங்குகளை என்றும் மன்னிக்க முடியாது. கலகத்தை அடக்கவும், அக்கிரமம் செய்தவர்களைத் தண்டிக்கவும் அதிகாரிகள் இனித் தாமதித்தால் கலகம் தேசம் எங்கும் பரவும் என்பதை நாம் சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்" என்று ஒரு நாயர் பத்திரிகை கோஷித்தது.

"நாயர் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் அளவு கடந்த கொடுமையும், ஆணவமும்தான் கலகத்திற்குக் காரணம். சுதந்திர உணர்ச்சியுடன் வளர்ந்து வரும் ஈழவ சமுதாயத்தை நசுக்கிவிடலாம் என்று நாயர் சமூகத்தைச்

சேர்ந்தவர்கள் நினைத்தால் அவர்கள் ஏமாற்றம் அடைவார்கள். உடனே இந்தக் கலகத்தை அடக்குவதும்; ஈழவர்களுக்குத் தீங்கு இழைத்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதும் சர்க்காரின் விலக்க முடியாத கடமை" என்று ஓர் ஈழவர் பத்திரிகை கர்ஜித்தது.

ஒரு நாயர் பிரசங்கி கலகக்காரர்கள் கூட்டத்தில் பேசினன்: "வீரம் செறிந்த நாயர் சமூகத்தைச் சேர்ந்தவர்களே, எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! வேலுத் தம்பியின் ரத்தமும், ராஜா கேசவ தாஸனுடைய ரத்தமும் உங்கள் உடம்பில் ஓடுகிறது என்ருல் வீரத்துடன் நீங்கள் போராட வேண்டும்! நாயர் உயரட்டும்! நாயர் ஜயிக்கட்டும்! நாயர் ஆளட்டும்!"

ஓர் ஈழவப் பிரசங்கி கலகக்காரர்களின் கூட்டத்தில் சொன்னன்: "சிங்கங்களே, கர்ஜியுங்கள்! சிங்கத்தின் ரத்தம் உங்கள் தேகத்தில் பாய்ந்து ஓடுகிறது என்ருல், நாயர் ஆதிக்கத்திற்கு எதிராகப் போர் புரியுங்கள்! நாயர் ஆதிக்கத்தை ஒழியுங்கள்! சுதந்திரம்தான் அமிர்தம், சுதந்திரம்தான் ஜீவன்; அடிமைத்தனம் மரணத்தைவிடக் கொடிது. எதிர்த்துப் போர் புரியுங்கள்! எதிர்த்துப் போர் புரியுங்கள்!"

கலகம்! கலகம்! நாயர் - ஈழவர் கலகம்!

பாச்சு, பரமு ஆகியவர்களின் வீடுகளின் பின்புறத்தில் சிறிய மைதானமும், அதற்கு மத்தியில் ஒரு மாமரமும் இருந்தன. அந்த மாமரத்தடியில் பரமுவை எதிர்பார்த்துக்கொண்டு பாச்சு நின்றுகொண்டிருந்தான்.

சிரிக்க வைக்க......

பரீக்ஷை செய்து உண்மையென்று அறிந்த விஷயம் ஒன்று உண்டு. அதாவது, உலகத்தில் எந்த இடத்திலும், எந்த பாஷை பேசுகிறவர்களிடத்திலும், எந்த இனத்தவர்களின் மத்தியிலும் நீங்கள் நாடகத்தில் நடிக்கும் போது நாடகம் பார்ப்பவர்களை சிரிக்க வைப்பதற்கு ஒரு நல்ல உபாயம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது என்ன தெரியுமா? நாடக மேடையில், நீங்கள் நடந்து கொண்டே "நான் கல்யாணமானவன்" என்று மட்டும் சொல்லிவிட வேண்டியது!

—டெக் காவனுக்

அதோ, பாச்சு நிற்கும் இடத்திற்கு ஓடி வருகிருன் பரமு!

அந்த நண்பர்கள் அளவு கடந்த மகிழ்ச்சியுடன் ஆலிங்கனம் செய்துகொண்டனர். "பாச்சு, அம்மா இதைக் கண்டால் என்னை அடிப்பாள்" என்ருன் பரமு.

"என் அம்மா இதைப் பார்த்தால் எனக்குச் சோறு போடமாட்டாள், பரமு!"

"நாம் இந்த மாமரத்தின் மறைவில் நிற்போம்!"

அவர்கள் மாமரத்திற்குப் பின்னே வெண் மணலில் உட்கார்ந்தனர். "பரமு, என் தந்தை ஆஸ்பத்திரியில் இருக்கிருர். அவருக்கு வெட்டுக் காயம்" என்ருன் பாச்சு.

"என் தந்தையும் ஆஸ்பத்திரியில் இருக்கிருர். நாயர் என் தந்தையைக் குத்தினதாக அம்மா சொன்னுள்," என்ருன் பரமு.

"என் தந்தையை ஈழவர் வெட்டினதாக அம்மா சொன்னுள்!"

சிறிது நேரம் அவர்கள் மௌனமாக இருந்தனர். "நாயர்களும் ஈழவர்களும் ஏன் ஒருவரை ஒருவர் வெட்டுகிறார்கள், குத்துகிறார்கள்?" என்று பரமு கேட்டான்.

"அது எனக்குத் தெரியாது. ஈழவர் நாயர்களின் விரோதிகள் என்று அம்மா சொன்னாள்."

"நாயர்கள் ஈழவர்களின் எதிரிகள் என்று என் அம்மா சொன்னாள்."

சிறிது நேரம் யோசித்துவிட்டு பாச்சு கேட்டான்: "எதற்காக பரமு, நாயர்களும் ஈழவர்களும் சண்டை போடுகிறார்கள்?"

"அது எனக்குத் தெரியாது."

இருவரும் மௌனமாக இருந்தனர். "நாளையதினம் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டாமா, பரமு?" என்று கேட்டான் பாச்சு.

"ஆம், போகவேண்டும். நாம் சேர்ந்து போனால், அம்மா என்னை அடிப்பாள். இனி மேல் பாச்சுவுடன் சேரக் கூடாது என்று அம்மா சொன்னாள்."

"அது என்ன, பரமு? இனி மேல் பரமுவுடன் பள்ளிக்கூடத்திற்குப் போகக் கூடாது என்றும், விளையாடக் கூடாது என்றும் என் அம்மா சொன்னாள்."

"அப்படியானால் நாம் என்ன செய்யலாம், பாச்சு? நாம் எவ்வாறு பள்ளிக்கூடத்திற்குப் போவோம்?" என்று வருத்தத்துடன் கேட்டான் பரமு.

"நாம் ஒன்றாகப் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும்."

"அடித்தால்?"

"அடி படுவோம்."

இன்பத்துடன் பரமு சொன்னான்: "நாம் ஒன்றாகப் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும். அடித்தால் அடிபடுவோம்."

"அதுதான் வழி" என்று அளவு கடந்த மகிழ்ச்சியுடன் சொன்னான் பாச்சு.

"அப்படியானால் கை அடி!" பரமு கையை நீட்டினான். பாச்சு கை அடித்தான். போர் வீரர்களைப் போல் அவர்கள் தலையை உயர்த்தினர்.

"பரமு, நாம் கரணம் அடிப்போம்" என்றான் பாச்சு.

"சரி!"

இருவரும் வெண் மணலில் கரணம் அடித்தனர். இருவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

✻

அதிசயமான ஸ்ட்ரைக்!

உலகத்தில் எல்லா இடங்களிலும் வேலைநிறுத்தங்கள் நடைபெறுவது போல சிசிலி என்ற சின்னஞ்சிறு தீவிலும் நடைபெற்றது. அங்கே பாலர்மோ நகரில், குப்பைத் தொட்டிகளைச் சுத்தம் பண்ணும் நகர சுத்தித் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் ஒன்று நடந்தது. அந்த வேலைநிறுத்தத்தின்போது நகரசுத்தித் தொழிலாளர்கள் அனுஷ்டித்த ஓர் உபாயம்தான் மிகவும் ஆச்சரியகரமானது. அதாவது, அவர்கள் முதல்நாள் தாங்கள் குப்பைத் தொட்டிகளிலிருந்து அப்புறப்படுத்திய குப்பை கூளங்களை எல்லாம், வேலைநிறுத்த தினத்தன்று, பழையபடியும் குப்பைத் தொட்டிகளில் கொண்டுவந்து போட்டுவிட்டார்கள். கடைசியில் அவர்கள் வேலைநிறுத்தத்தில் வெற்றி பெற்று, சம்பள உயர்வும் பெற்றார்கள்.

—கரேபோர், பாரிஸ்

செழிப்பான கூந்தல்

ஸ்திரீகளின் எல்லா ஆபரணங்களையும் விடச் சிறந்ததென்று, எக்காலத்திலும், எந்நாட்டிலும், கலைஞர்களால் கற்பனை செய்யப்பட்டும், கவிஞர்களால் பாடப்பட்டும் வந்திருக்கிறது. மேகத்திலிருந்து எட்டிப் பார்க்கும் சந்திரனுக்குக் கரிய கூந்தல் அணிந்த முகத்தைக் கவிஞர்கள் ஒப்பிட்டிருக்கிறார்கள்.

ஜாப்கோ ஹேர் குரோயர்

செழிப்பான கூந்தலை விருத்தி செய்து முகமண்டலத்திற்கு அபார சோபையை அளிக்கிறது

ஜயபாரதம் கோ.,

மதராஸ்—பெங்களூர்—எர்ணாகுளம்

கட்டிடங்களுக்கு

எஃகு



டாடா எஃகு

டாடா அயர்ண் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

தலைமை சேல்ஸ் ஆபீஸ் :

102 A நேதாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா

கடைசி வார்த்தைகள்

கு. அ.

* *

உலகப் பிரசித்திபெற்ற தத்துவ ஞானிகள், அரசியல் தலைவர்கள், போர் வீரர்கள், கவிஞர்கள் முதலிய பலருடைய சுருக்கமான வாழ்க்கை வரலாறுகளும், அவர்களுடைய கடைசி உரைகளும் கலாக்கிரமப்படி இங்கே தொகுத்துக் கொடுக்கப்பெற்றுள்ளன. மரணத்துக்கு முன்பாக இந்த மகாபுருஷர்கள் என்ன கூறினார்கள் என்பதை அறிந்து கொள்ளுவது மிகவும் சுவாரஸ்யமான விஷயமாகும்.

கன்பூஷியஸ் (கி. மு. 553—480)

இவர் உலகப் பிரசித்திபெற்ற மேதை; சீனாவில் இற்றைக்கு ஏறக்குறைய 2500 வருஷங்களுக்குமுன் பிறந்தவர். சீன பாஷையில் இவருடைய பெயரை காங்-பூ-ஷீ என்று உச்சரிப்பார்கள். காங்-பூ-ஷீ என்றால் 'வாத்தியாரைய்யா காங்' என்று பொருள், இவர் எந்த மதத்தையும் சேர்ந்தவரல்ல; எந்த மதத்தையும் இவர் ஸ்தாபிக்கவில்லை. ஆனாலும் இவருடைய உபதேசங்களுக்கு சீனாவில் இன்றும் அமோகமான மதிப்பு இருந்து வருகிறது. இவர் சொந்தமாக நூல்கள் எழுதியதுடன், பல பழைய நூல்களையும் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். —சிறு வயதில் வாத்தியாராக இருந்தார்; பிறகு குற்ற இலாகா மந்திரியானார். மக்களுக்கு ஒழுக்கத்தையும் நீதியையும் கற்பித்தார்; பெரிய கலைஞராகவும் விளங்கினார்.

கன்பூஷியஸின் அந்திம காலத்தில் இவரை ஷீகுங் என்பவர் பார்க்க வந்திருந்தார். அப்போது கன்பூஷியஸ் ஒரு தடியை ஊன்றிக்கொண்டு வீட்டிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தார். இவரைப்பார்த்து ஷீகுங், "இன்றைக்கு ஏன் இவ்வளவு தாமதம்?" என்று கேட்டார். அதற்குக் கன்பூஷியஸ் சொன்ன பதில்:

"அந்தோ, மலை சரிந்து கொண்டிருக்கிறது; தூண் விழுந்து கொண்டிருக்கிறது; தத்துவ ஞானி பயணமாகிக்கொண்டிருக்கிறார்."

கன்பூஷியஸ் கடைசியாகப் பேசிய பேச்சு இதுதான். பிறகு தம் 73-ம் வயதில் காலமாகிவிட்டார்.

சாக்ரட்டீஸ் (கி. மு. 469—399)

இவர், யாதொரு புத்தகமும் எழுதாமல் பெரிய தத்துவஞானி என்று புகழ் பெற்ற கிரேக்க தேசத்தின் ஈடு இணையற்றமேதை. இவருடைய தந்தையாரின்பெயர் ஸோப்ரானிஸ்கஸ். சிறு வயதில் இவர் ராணுவத்திலும் சேவை செய்தார். பிறகு பொதுக்காரியங்களில் கலந்துகொள்ளாமல் விலகிக் கொண்டார். சாதாரண மக்களோடு பழகி அவர்களைப் பல கேள்விகள் கேட்பது மூலமாக அவர்களுக்கு நீதி போதனை செய்து வந்தார். இவர் கேள்வி கேட்கும்போது, உண்மையை எவராலும் மறைக்க முடியாது. இவருக்குப் பல விரோதிகளும் கிளம்பினார்கள். அரிஸ்டோபேன்ஸ் என்ற கிரேக்கநாடக ஆசிரியன், இவரை மத விரோதி என்றும், குதர்க்க

வாதி யென்றும் வாலிபர்களைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கு கிறவ ரென்றும் கூடப் பழித்து எழுதினன். அரசாங்கத்தினர் தொழும் தெய்வங்களை நம்பாதவ ரென்றும், வாலிபர்களைக் கெடுக்கிறார் என்றும் இவர் மீது அனீடஸ் என்பவன் குற்றம் சாட்டினன். 'பொது மக்கள் நீதி மன்றம்' என்று சொல்லப்பட்ட சபையில் விசாரணை செய்து சாக்ரட்டீஸுக்கு மரண தண்டனை விதித்து விட்டார்கள். சிறைப்பட்ட ஒரு மாதத்துக்குப் பின், தம் கையாலேயே விஷத்தை வாங்கிச் சாப்பிட்டு சாக்ரட்டீஸ் மரண மடைந்தார். சாகும் தருவாயில் சாக்ரட்டீஸ், கிரிடோ என்பவனைப் பார்த்துக் கூறியதாவது:

"கிரிடோ! அஸ்குலேபியஸ் கோவிலுக்கு நேத்திக் கடனாக ஒரு சேவலை யளிக்க வேண்டி யிருக்கிறது. அதை எனக்காக நீர் ஞாபகமாகக் கொடுத்துவிட வேண்டும்; அசட்டையாக இருந்து விடாதீர்."

சாக்ரட்டீஸ் எவ்வளவு கடமை உணர்ச்சி யுடையவர், சொன்ன சொல்லைக் காப்பாற்றும் சத்திய புருஷர் என்பவற்றை இவருடைய கடைசி வாசகத்தால் அறியலாம். இந்த மகானுடைய சிஷ்யர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் பிளேட்டோ, ஸெனோபன் என்ற இரண்டு தத்துவ ஞானிகள்.

ஆர்க்கிமிடீஸ் (கி. மு. 287—212)

இவர் கிரீஸ் தேசத்தில் பிறந்தவர்; கணித சாஸ்திரத்திலும் பௌதிக சாஸ்திரத்திலும் தேர்ச்சி பெற்ற அறிஞர். ஒரு வஸ்து தண்ணீருக்குள் மூழ்கும்போது அது, தன் நீள அகலத்துக்குள் அடங்கும் அளவுள்ள தண்ணீரின் எடையை இழந்துவிடுகிறது என்ற உண்மையை இவர்தான் முதல் முதலில் கண்டுபிடித்தார். ஆகாயத்திலே அந்தரத்தில் இருக்கத் தமக்கு இடம் கிடைத்தால், இந்த உலகத்தையே பெயர்த்து வேறு இடத்தில் வைத்துவிடத் தம்மால் முடியும் என்று இவர் கூறினர். க்ஷேத்திர கணிதத்தில் (Geometry) இவர் பல உண்மைகளைக் கண்டுபிடித்தார். ஒரு சிப்பாய் இவரைக் கொன்றுவிட்டான். அந்தச் சந்தர்ப்பத்தில் கடற் கரையில் உட்கார்ந்து கொண்டு இவர் மணலில் வட்டங்களை வரைந்து கணித சாஸ்திரத்தை ஆராய்ந்துகொண் டிருந்தார். இவரை சிப்பாய் கொல்லும் போது தம்முயிரைப் பெரிதெனக் கருதாமல், தம் சாஸ்திர ஆராய்ச்சியிலேயே இவர் கவனத்தைச் செலுத்திக்கொண் டிருந்த விபரத்தை அறிவிக்கின்றன கீழ்க்காணும் இவருடைய கடைசி வார்த்தைகள்:

"என்னுடைய வட்டங்களைக் கலைத்து விடாதே!"

ஏசு கிறிஸ்து (கி. மு. 4—கி.பி. 29)

கிறிஸ்தவ மதத்தின் ஸ்தாபகர். பாலஸ்தீனத்திலுள்ள பெத்தலஹேம் என்னும் ஊரில் 1952 வருஷங்களுக்கு முன் தச்சுவேலை செய்யும் குடும்பத்தில் கன்னி மேரி என்ற மாதரசியின் வயிற்றில் உதித்தவர். சிறு வயதில் கிராமப் பள்ளியில் படித்தார். தம் குலத் தொழிலான தச்சு வேலையையும் செய்தார். இவருக்கு 27 வயது நிரம்பும் வரையிலும் இவரைப் பற்றிய விவரங்கள் ஒன்றும் தெரிய வில்லை. பாலஸ்தீனத்தின் தெற்கத்திச் சீமையில் மதகுரு ஒருவரின் குமாரராகிய ஜான் என்பவர் தம் பிரசாரத்தின் வாயிலாக ஒரு புரட்சி இயக்கத்தை நடத்திக் கொண்டு வந்தார். அந்தப் பிர

சாரம் எல்லோரையும் கவர்ந்தது; ஏசு நாதரையும் கவர்ந்தது. பிறகு ஏசு நாதர் ஜார்டனில் ஞான ஸ்நானம் பெற்றார்; தம்மைக் கடவுளின் குமாரர் என்று கருதினார்; அன்பு, அஹிம்சை, சத்தியம் முதலிய நற் குணங்களைப் போதித்தார்; பண்டைய மூடப் பழக்கங்களைக் கண்டித்தார். இதனால் இவர் மீது குற்றம் சாட்டினர் சிலர். இவர் அரசியல் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்துவதாகவும் கூறினர். ஆகவே விரோதிகள் பலர் ஒன்று சேர்ந்து இவரைக் கொல்ல முயன்றனர். இவருடைய 12 சிஷ்யர்களில் ஒருவனாகிய ஜூடாஸ் இஸ்காரியட் என்ற மகாபாதகன் இவரை முப்பது வெள்ளிக்காசுகளுக்காகக் காட்டிக் கொடுத்தான். ரோம் ஏகாதிபத்தியக் கவர்னராகிய பைலேட் என்பவனின் சம்மதம் பெற்று இவரை ஒரு வெள்ளிக்கிழமை யன்று சிலுவையில் அறைந்து கொன்று விட்டார்கள். மரிக்கும் தருவாயில் ஏசு கிறிஸ்து கூறிச் சென்ற சொற்களாவன:

"பிதாவே! இவர்களை மன்னியும்! இவர்கள் தாங்கள் இன்னது செய்கிறோம் என்பதை அறியாதிருக்கிறார்கள்."

மார்க்கோ போலோ (1254-1324)

இத்தாலியில் உள்ள வெனிஸ் நகரத்தில் பிறந்தவர். 1271-ம் வருஷத்தில் இவர் தம் தந்தையுடன் சீனாவுக்கு வந்தார். சீனாவில் மங்கோலிய அரசன் குப்ளை என்பவனுடைய அன்புக்குப் பாத்திரமானார். மங்கோலியர்களின் மொழியையும் பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொண்டார். மங்கோலிய அரசன் இவரைத் தம் தூதராக சீனாவின் பல மாகாணங்களுக்கும் அனுப்பி யிருக்கிறான். பிறகு இவர் கிழக்கு சீனாவில் உள்ள யாங்ட்செள மாகாணத்துக்குக் கவர்னரானார். 1295-ல் இவர் இத்தாலிக்குத் திரும்பினார். இவர் இந்தியாவுக்கும் வந்திருக்கிறார். தம்சுற்றுப் பிரயாணக் குறிப்புகளை இவர் எழுதி வைத்திருக்கிறார். சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு இந்தப் புத்தகம் பெரிதும் பயன்படுகிறது.

மார்க்கோ போலோ தம் மணப் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தபோது, அவருடைய நண்பர்கள் சிலர் வந்தனர். அவர்கள் மார்க்கோ போலோவைப் பார்த்து, "உங்களுடைய புத்தகத்தில், நம்பகமில்லாதது போலக் காணப்படும் சில செய்திகளை எடுத்துவிட வேண்டும்" என்றார்கள். அதற்கு மார்க்கோ போலோ, "நான் பார்த்தவற்றுள் பாதியைக்கூட எழுத வில்லையே" என்று கூறினார். இந்தக் கடைசி வார்த்தைகளைக் கூறி விட்டு இறந்தார் மார்க்கோ போலோ.

லியோனார்ட்டர் டா வின்சி (1452—1519):

இத்தாலியில் வின்சி என்ற இடத்தில் பிறந்த ஓவிய நிபுணர். சித்திரக் கலையில் பெரிய மேதை என்று இவரைக் குறிப்பிடுவார்கள்; ஆனால், இவர் மனைச் சிற்பம், விஞ்ஞானம், கணிதம், பெளதிக சாஸ்திரம், தத்துவம், கவிதை, சங்கீதம் முதலிய அநேக கலைகளிலும் வல்லவர். ஆண்ட்ரியா டெல் வெர்ரோச்சியோ என்பவரிடம் சித்திரக் கலை பயின்றார். சில காலம் மிலான் பிரபுவின் கீழ் எஞ்சினியராக இருந்தார். இவருடைய சித்திரங்களில் மிகப் பிரசித்தி பெற்றவற்றுள் மானோலிஸாவின் உருவப் பட

மும் ஒன்று. கிறிஸ்து சமயப் பெரியார்களின் உருவங்களையும், இவர் கற்பாறைகளில் செதுக்கியுள்ளார். மிலானில் ஒரு மாதா கோவிலில் இவர் வரைந்த 'கடைசி விருந்து' என்னும் சித்திரம் இன்று அழிந்து போய் மங்கிய நிலையிலிருந்தாலும் அதைச் சித்திரக் கலையின் பொக்கிஷமாகக் கருதிக் காப்பாற்றுகிறார்கள். இவர் சித்திரக்கலையைப் பற்றி ஒரு புத்தகமும் எழுதியிருக்கிறார். பாரசூட்டைக் கண்டுபிடிப்பதற்கு அஸ்திவாரம் போட்டவர் இவரே. இன்னும் பற்பல கலைத் துறைகளில் பற்பல உண்மைகளை இவர் முதல் முதலாகக் கண்டு பிடித்தார். இவர் சாகும் தருவாயில் அழுது கொண்டே சொன்னதாவது:

"நான் கடவுளையும் மனிதனையும் அவமதித்து விட்டேன்! கலைத் துறையில் நான் எவ்வளவு உழைத்திருக்க வேண்டுமோ அவ்வளவு உழைக்கவில்லை யல்லவா?"

ராபிலெய் (1495-1553)

பிரெஞ்சு தேசத்து ஹாஸ்ய எழுத்தாளர். இவருடைய முழுப் பெயர் பிராங்காய் ராபிலெய் என்பதாகும். சினேன் என்னும் ஊரில் ஒரு வைத்தியரின் குமாரராகப் பிறந்தார். ஆரம்பத்தில் பாதிரியாராக இருந்து, பிறகு அந்த வேலையை விட்டு விட்டு மான்ட் பெல்லியர் என்ற ஊரில் வந்து வைத்திய சாஸ்திரம் படித்தார். பிறகு லையான்ஸ் நகருக்குத் திரும்பினர். பல புத்தகங்களையும் இவர் எழுதினர். பழைய படியும் கொஞ்ச காலம் பாதிரியாராக இருந்தார். பாதிரியார் வேலையை ராஜினமா செய்து விட்டு பாரிஸ் நகருக்கு வந்து அங்கே இறந்தார். பாதிரிகளையும் வறட்டுப் பண்டிதர்களையும் கேலி செய்தும் வசை கூறியும் தாக்கியும் பல வழிகளிலும் கடுமையாக எழுதியிருக்கிறார். இவருடைய கடைசி வார்த்தைகளாவன:

"திரையைத் தொங்கவிடுங்கள். கேலிக் கூத்து ஓய்ந்தது."

மௌனி வில்லியம் (1553-1584)

ஹாலந்து தேசத்தில்பிறந்தவர். ஹாலந்து, ஸீலந்து, பிரீஸ்லாந்து, உரெஷ்ட் முதலிய பிரதேசங்களையும் ஒன்றாக இணைத்து ஐக்கிய நெதர்லாந்துக் குடியரசை ஸ்தாபித்தவர்; அதன் தலைவராகவும் இருந்தவர். ஸ்பானிய எதிர்ப்புக் கட்சியின் தலைவர். நெதர்லாந்திலுள்ள பிராடெஸ்டண்ட் கிறிஸ்தவர்களை ஒழிக்க ஒரு சதி நடந்தது. அந்தச் சதியை நடக்க விடாமல் தடுக்க இவர் மௌனமாக முயன்று வந்தார். அதனல் இவருக்கு மௌனி வில்லியம் என்று பெயர் வந்தது. இவர் கத்தோலிக்கக் கிறிஸ்தவர். அப்படியிருந்தும் பால்தஸார் ஜெரார்ட் என்ற ஒரு கத்தோலிக்கக் கிறிஸ்தவனே இவரைச் சுட்டுக் கொன்றுவிட்டான். தம் உடம்பில் குண்டு பாய்ந்ததும் கீழ்க்கண்ட வார்த்தைகளைக் கூறிவிட்டு மௌனி வில்லியம் காலமானர்:

"கடவுளே! என் மீது கருணை கொள்ளுங்கள்! கடவுளே! இந்த அப்பாவி மக்களிடத்திலும் கருணை கொள்ளுங்கள்!"

ஸர் வால்டர் ரலே (1552-1618)

இங்கிலாந்தில் ஹேய்ஸ் பார்ட்டன் என்னும் ஊரில் பிறந்தவர். ராணுவ வீரராக இருந்தவர்; இலக்கிய அறிஞரும் கூட. ஆங்கில அரசியின் அபிமானத்தையும், ஆதரவையும் பெற்றவர் இவர். வட அமெரிக்காவுக்கும் போனர். அங்கே வெர்ஜீனியா

என்னும் மாகாணத்தையும் உண்டாக்கினர். இங்கிலாந்துக்குத் திரும்பும்போது முதல் முதலாக அந் நாட்டுக்கு உருளைக் கிழங்குச் செடிகளையும், புகையிலைச் செடிகளையும் அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்தார். அதற்கு முன்னல் இங்கிலாந்தில் உருளைக்கிழங்கும், புகையிலையும் கிடையாது. ஜேம்ஸ் அரசர் காலத்தில் இவரை ராஜ விஸ்வாசம் இல்லாதவர் என்று கூறி 12 வருஷங்கள் சிறையில் அடைத்து வைத்தார்கள். அப்போது உலக சரித்திரத்தை எழுதத் தொடங்கினர். அந்த வேலை அரை குறையிலேயே நின்றுவிட்டது. சில காலத்துக்குப் பிறகு இவருக்கு மரண தண்டனை விதித்து, இவரது தலையை வெட்டி விட்டார்கள். அந்தக் கடைசி நேரத்தில் இவர் தம்மைச் சிரச்சேதம் செய்ய வந்த சேவகன் தயங்கி நிற்பதைப் பார்த்துக் கூறியதாவது:

"ஏன் வெட்டாமல் நிற்கிருய்? வெட்டி விடப்பா!"

ஆலிவர் கிராம்வெல் (1599 - 1658)

இங்கிலாந்தில் ஹன்டிங்டன் என்னும் இடத்தில் பிறந்தவர். ஸ்காத்லாந்து ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர். கேம்பிரிட்ஜில் கல்வி பயின்ருர். பார்லிமெண்ட் அங்கத்தினரானர். அதில் அரசரையே எதிர்த்து நின்ருர். தமக்கெனப் படை திரட்டிக் கொண்டார். ஸ்காத்லாந்திலும் அயர்லாந்திலும் இங்கிலாந்தை எதிர்த்துக் கிளம்பிய பிரளயங்களை அடக்கி யிருக்கிருர். கடைசியில் இங்கிலாந்தின் சர்வாதிகாரியானர். இங்கிலாந்து மன்னருக்கு அளித்த மரண தண்டனை உத்தரவில் கையெழுத்திட்டார். பார்லிமெண்டைக் கலைத்துவிட்டு, புதிய அங்கத்தினர்களைக் கொண்டு பார்லிமெண்டைக் கூட்டினர். பிறகு அதையும் கலைத்துவிட்டார். கடைசி காலத்தில் எண்ணற்ற ஆசைகளுடனும் கவலைகளுடனும் இறந்தார். இறக்கும்போது இவர் சொன்னதாவது:

"குடிப்பதும் தூங்குவதுமல்ல என் உத்தேசம். விரைவில் போய் விடுவதற்கு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வதே என் உத்தேசம்."

இவரை வெஸ்ட்மின்ஸ்டர் அப்பேயில் புதைத்தார்கள். பிறகு இவர் சடலத்தைத் தோண்டி யெடுத்தார்கள். அதைத் தூக்கிலும் போட்டார்கள்! தூக்கு மேடைக்கு அடியிலேயே புதைத்தும் விட்டார்கள்!

ஜார்ஜ் பாக்ஸ் (1642 - 1691)

'க்வேக்கர்ஸ்' என்ற உதவி ஸ்தாபனத்தின் ஸ்தாபகர். இங்கிலாந்தில் பென்னி ட்ரெய்ட்டன் என்னும் ஊரில் ஓர் ஏழை நெசவுக்காரரின் மகனுகப் பிறந்தார். சிறு வயதில் செருப்புத் தைக்கும் தொழில் செய்து வந்தார். பிறகு மூடத்தனமான மதப் பழக்கங்களை எதிர்த்தும் போராடினர். 'உள்ளொளி'யே முக்கியம் என்று மக்களுக்குப் போதித்தார். இவர் பேசும் முறையெல்லாம் வேத சாஸ்திர உபதேசங்களின் பாணியில் இருந்ததால் இவரை மக்கள் கேலி செய்தார்கள். இவர் பல வெளி நாடுகளுக்கும் சுற்றுப் பிரயாணம் செய்து தம் கொள்கைகளைப் பரப்பினர்; பல சிஷ்யர்களையும் சம்பாதித்தார். கடைசியில் ஜலதோஷத்தின் காரணமாக இறந்தார். இறக்கும் போது இவர் கூறியதாவது

"இப்போது நான் தெளிவோடு இருக்கிறேன்; மிகவும் தெளிவோடு இருக்கிறேன்......நல்லது; தெய்வாம்சம் எல்லோரிடத்திலும், சாவின் மீதும் கூடப் படர்ந்து பரவியுள்ளது."

வால்டேர் (1694 - 1778)

பிரெஞ்சு தேசத்துத் தத்துவ ஞானி; எழுத்தாளர்; பாரிஸ் நகரில் இருந்த ஒரு வக்கீலின் குமாரர். இவருடைய எழுத்துக்கள் கடுமையான தாக்குதல்களாக இருக்கவே, இவர் ஒரு வருஷச் சிறை வாசத்தையும் அனுபவிக்க நேர்ந்தது. பல நாடகங்களையும் எழுதியிருக்கிறார். மூட நம்பிக்கைகளையும், பூசாரித்துவத்தையும், புரோகிதத்தையும் வன்மையாகக் கண்டித்து எழுதியவர்களில் இவர் பிரபலமானவர். தம் பிற்காலத்தை ஸ்விட்ஜர்லாந்தில் கழித்தார். வால்டேரை மிகப் பெரிய சீர்திருத்தக்காரர் என்றும் புரட்சிக்காரர் என்றும் போற்றுகிறார்கள். பழைய வைதிக நெறிக்கு மாறுபட்டு இவர் செய்த 'பாப கிருத்திய'ங்களுக்கு மன்னிப்பு அளித்துக் 'கடைத்தேற்றும்' பொருட்டு இவருடைய மருமகன் கௌல்தியர் என்னும் ஒரு பாதிரியாரை வரவழைத்தான். அவர் வந்ததும் வால்டேர் அன்பாக வரவேற்றார். ஆனால், பாதிரியார் ஏசுநாதரின் தெய்வீகத் தன்மையை ஒப்புக் கொள்ளும்படி வால்டேரிடம் கூறினார். வால்டேர் மிகவும் எரிச்சலோடு அவருக்குப் பின் கண்டபடி பதில் சொல்லிவிட்டு, அன்றே இறந்துவிட்டார்.

"என்னை அமைதியாகச் சாக விடுங்கள்."

பெஞ்சமின் பிராங்க்ளின் (1706-1790)

இவர் அமெரிக்க எழுத்தாளர்; அரசியல் வாதி. பாஸ்டனில் பிறந்தார். இவருடைய தகப்பனார் மெழுகுவத்தி செய்து விற்றுப் பிழைத்து வந்தார். பெஞ்சமின் பிராங்க்ளின் ஏதோ கொஞ்சம் பள்ளிக்கூடத்தில் படித்தார். பிறகு தம் 12-ம் வயதில் தம் தமையனுடன் சேர்ந்து ஒரு பத்திரிகாலயத்திலும் அச்சகத்திலும் பயிற்சி பெற்று வந்தார். பிறகு கையில் காசில்லாமல் பிலடெல்பியாவுக்கு வந்து அச்சு வேலை செய்து வந்தார். பின்பு இங்கிலாந்துக்குப் போய் வந்து சொந்தப் பத்திரிகை நடத்தினார். இதற்குப் பிறகு பொது வேலையில் ஈடுபட்டு உயர்ந்த அரசாங்க உத்தியோகங்களையும் வகித்தார். அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் தயாரித்ததில் இவருக்கும் பங்கு உண்டு. கடைசியாக ஒரு மந்திரி பதவியையும் அடைந்தார், மின்னலில் மின்சார சக்தி இருப்பதை முதன் முதலில் இவர்தான் கண்டு பிடித்தார். தம்முடைய சுய சரித்திரத்தை இவர் எழுதியிருக்கிறார். இவருடைய கடைசி வார்த்தைகள்:

"சாகக்கூடிய மனிதன் செய்வது எதுவும் எளிய காரியமாகப் போய் விடுவதில்லை."

ஜார்ஜ் வாஷிங்டன் (1732-1799)

அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி; அமெரிக்கக் குடியரசை நிலை நாட்டியவர்களுள் ஒருவர். இங்கிலாந்திலிருந்து குடியேறிய ஒரு குடும்பத்தில் பிரிட்ஜஸ் கிரீக் என்னும் இடத்தில் பிறந்தார். ஆரம்பத்தில் பிரெஞ்சுக்காரர்கள் அமெரிக்க நாட்டுக்குள் பிரவேசித்து ஆக்கிரமிப்பதை எதிர்த்துப் போராடினார். கடைசியில் அமெரிக்க சுதந்திரத்துக்காக, அமெரிக்காவை அப்போது

ஆண்டுவந்த ஆங்கில அரசாங்கத்தை எதிர்த்துப் பலகாலம் விடா முயற்சியுடன் போராடினர். போராட்டத்தில் வெற்றி பெற்று, அமெரிக்கா சுதந்திர நாடான பிறகுதான் அவர் தம் சேனைத் தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்தார். 1789-லும், 1793-லும் இரண்டு தடவைகள் இவர் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்க மக்களின் அபிமானத்தைக் கவர்ந்த ஒப்பற்ற முதல் தலைவர் இவர். இவருடைய கடைசி மொழி:

"ரொம்ப நல்லது."

நெப்போலியன் போனபார்ட் (1769-1821)

இவன் உலகப் பிரசித்தி பெற்ற ராணுவ வீரன். மகா அலெக்ஸாண்டருக்குப் பிறகு உலகப் படையெடுப்புக்குப் பிரயத்தனம் செய்தவன் இவனே. இந்த வகையில் இவன் ஹிட்லருக்கு முன்னோடியாகவும் இருந்திருக்கிறான். இவன் பிரான்சின் ஆளுகையில் இருந்த கார்ஸிகா என்னும் தீவில் அஜாக்கியோ என்னும் ஊரில் பிறந்தான். 1785-ல் பிரெஞ்சு ராணுவத்தில் சேர்ந்தான். அரசாங்கத்தின் சார்பில் கலகங்களை அடக்கவும் அந்நிய நாட்டுப் படையெடுப்புகளுக்காகவும் அனுப்பப்பட்டான். இத்தாலி, எகிப்து முதலிய நாடுகளை வென்ற பிறகு இவன் பிரெஞ்சு தேசத்தின் அரசனாகி விட்டான். ஆரம்பத்தில் இவனை மொத்தமாகச் சேர்ந்து எதிர்த்த பிரிட்டிஷ் சேனை, ருஷ்யச் சேனை, ஆஸ்திரியச் சேனை முதலியவற்றில் பின் இரண்டை முறியடித்து விட்டான். 1812-ல் இவன் ருஷ்யாமீது படையெடுத்துச் சென்று, மாஸ்கோ வரையிலும் போய், பனியின் கொடுமையால் பின் வாங்கினான். இவனுடைய சேனையில் 10-ல் 9 பங்கு வீரர்கள் பனியில் மடிந்தனர். 1813-ல் லீப்ஸிக் என்னும் இடத்தில் ருஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய மூன்று நாட்டுப் படைகளும் இவனை முறியடித்து விட்டன. பிரான்சின் அரச பதவியை இழந்தான். எல்பா என்ற தீவுக்கு அரசனாக இருந்து ஆள இவன் அனுமதிக்கப்பட்டான். ஆனால் பழையபடியும் இவன் பிரான்சுக்கு வந்ததும் இவனை அமோகமாக வரவேற்றார்கள். பழையபடியும் பிரான்சின் தலைமைப் பதவியை ஏற்றாலும், வாட்டர்லூவில் நடந்த போரில் ஆங்கிலேயர்கள் உள்ளிட்ட நேசப் படைகளிடம் இவன் தோல்வியடைந்துவிட்டான். பிறகு இவனை ஸெயின்ட் ஹெலினா தீவில் சிறையில் வைத்தார்கள். பலநாடுகளையும் வெற்றி கொண்ட இந்த வீரன் தன் தாயாரிடத்தில் மிகுந்த பக்தி உடையவன். இவனுடைய ஏக புத்திரன் தொட்டிலில் குழந்தையாகப் படுத்து உறங்கும்போதே அவனை ரோம்நாட்டு அரசனாகப் பிரகடனப் படுத்திவிட்டார்கள். ஸெயின்ட் ஹெலினாதீவில், சிறையிலேயே இறந்தான் நெப்போலியன். இறந்த நாளன்று காலையில் அவன் கடைசியாக வாய்க்குள்ளாகவே பின்வருமாறு முணுமுணுத்துக் கொண்டிருந்தான்:

"பிரான்சு தேசமே!...சேனையே! ......தலை சிறந்த சேனையே!...... ஜோஸபைன்*!"

அன்று மாலையில் சூரியாஸ்தமனத்தின்போது நெப்போலியன் இறந்து விட்டான்.

---

* ஜோஸபைன் நெப்போலியனின் முதல் மனைவி. பின்பு அவன் இவளோடு விவாகரத்து செய்துகொண்டான்.

தாமஸ் ஜெப்பர்ஸன் (1743-1826)

அமெரிக்காவின் மூன்றாவது ஜனாதிபதி: அரசியல் அறிஞர்; ஷாட்வெல் என்னும் ஊரில் பிறந்தவர். அமெரிக்காவில் புரட்சி இயக்கத்தில் பங்கு எடுத்துக் கொண்டார். அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்தார். வெர்ஜீனியா மாகாணக் கவர்னராகவும், பிரான்சில் அமெரிக்கப் பிரதிநிதியாகவும், அமெரிக்க அரசாங்கக் காரிய தரிசியாகவும், உதவி ஜனாதிபதியாகவும் இருந்து ஜனாதிபதியானவர். லூஷியானாப் பிரதேசத்தை பிரான்சிடமிருந்து அமெரிக்காவுக்கு வாங்கிக் கொடுப்பதில் உழைத்தவர். குடியரசுக் கட்சியின் தலைவர். இவருடைய நிர்வாகத்தில் மனிதர்களை அடிமைகளாகக் கொண்டுவந்து விலைக்கு விற்கும்வியாபாரத்துக்குத் தடை விதிக்கப்பட்டது. கடைசி காலத்தில் பொது வாழ்விலிருந்துவிலகி, கல்வி அபிவிருத்திக்காகப் பாடுபட்டார். சாகும்போது இவர் சொன்னது:

"என் உயிரை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்கிறேன்; என் மகளை என் தேசத்துக்கு அர்ப்பணம் செய்கிறேன்."

பீதோவன் (1770—1827)

ஜெர்மனிக்கு இவன்தான் தியாகப் பிரமம்; உலகப்பிரசித்தி பெற்ற சாஹித்யகர்த்தா. இவனுடைய முழுப் பெயர் லுட்விக் வான் பீதோவன் என்பதாகும். போன் என்னும் ஊரில் பிறந்தான். ஐந்தாவது வயதிலேயே இசைப் பயிற்சியைத் தொடங்கினான். வியன்னா நகரத்தில் குடியேறி வசித்துவந்தான். 40-ம் வயதில் முழுச் செவிடாகிவிட்டான். தன் இசையைத் தானே கேட்பதற்கு முடியாத நிலையிலிருந்தாலும், எல்லோருடைய உள்ளங்களையும் கவரும்படியான வர்ணமெட்டுகளைச் சிருஷ்டித்தான். இவனுடைய அந்திய காலம் மிகவும் பரிதாபகரமாகக் கழிந்தது. இவன் கலியாணமும் செய்துகொள்ளவில்லை. ஒருநாள் இடியும் மின்னலுமாகப் புயல் மழை பெய்து கொண்டிருந்த போது இவன் காலமானான். இறக்கும்போது இவன் சொன்னது:

"தெய்வலோகத்தில் எனக்குக் காது கேட்கும்†"

வில்லியம் ஹாஸிலிட் (1778—1830)

இவன் பிரசித்திபெற்ற ஆங்கில விமரிசகன்; வியாசகர்த்தா. மெயிட்ஸ்டோன் என்னும் இடத்தில் ஓர் ஐரிஷ் குடும்பத்தில் பிறந்தான். சிறுவயதில் சித்திரக்காரனாக இருந்து பிறகு அதை விட்டு விட்டு இலக்கியத்துறையில் புகுந்தான். பல இலக்கிய நூல்களுடன், நெப்போலியனின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியிருக்கிறான். வறுமையின் கொடுமையினாலேயே இறந்தான். ஆனால் இவன் சாகும்போது, சார்லஸ் லாம்ப் என்ற ஆங்கில எழுத்தாளனிடம் பின்வருமாறு சொன்னான்.

"சந்தோஷகரமான வாழ்க்கையை வாழ்ந்து அனுபவித்துவிட்டேன்."

† ஒரு புத்தகத்தில் பீதோவனுடைய கடைசி வார்த்தைகள் வேறுவிதமாகக் காணப்படுகின்றன. சாகும்போது இவனுக்கு முன்பு ஒயின் பாட்டில்களைக் கொண்டுவந்து வைத்தார்களாம். அப்போது "பரிதாபம்! பரிதாபம்! காலம் கடந்துவிட்டதே!" என்று கூறிவிட்டு இவன் இறந்ததாகவும் கூறப்படுகிறது.

ஜான் கீட்ஸ் (1795-1821)

லண்டனில் பிறந்த கவிஞன். சிறுவயதில் வைத்திய சாஸ்திரம் படித்து, கொஞ்சகாலம் வைத்தியனாகவும் இருந்தான். பிறகு இவன் கவனம் இலக்கியத் துறையில் திரும்பியது. இவனுக்கு ஹேஸ்லிட், வேர்ட்ஸ்வொர்த் போன்ற புலவர்களின் நட்பும் கிடைத்தது. இவனுக்கு க்ஷய ரோகம் வந்துவிடவே, ஆரோக்கியத்துக்காக ஐரோப்பாவுக்குப் போனான். கடைசி காலத்தில் பணக் கஷ்டத்தால் மிகவும் அவதிப்பட்டான். ரோம் நகரில் தன் 26-ம் வயதில் காலமானான். சிங்காரமான அழகிய கவிதைகளை இயற்றிய இந்த இளங் கவிஞனைப் பெரிய கவிஞர்களோடு ஒன்றாக வைத்து எண்ணுகிறார்கள். சாகும் போது, இவன் வாயிலிருந்து வந்த கடைசிவார்த்தைகளும் கவிதையைப்போலவே இருக்கின்றன:

"என்மீது புஷ்பங்கள் வளருவதைப் போலத் தோன்றுகிறது எனக்கு."

பைரன் (1788-1824)

இவன் லண்டனில் பிரபுக் குடும்பத்தில் பிறந்த கவிஞன். ஹாரோவிலும் கேம்பிரிட்ஜிலும் கல்வி பயின்றான். சிறுவயதிலேயே கவிதைகள் இயற்றினான். பிறகு அந்நிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தான். முதலில் மேரி சாவொர்த் என்ற பெண்ணைக் காதலித்தான்; காதல் கைகூடவில்லை. பிறகு மில்பாங்கி என்பவளை மணந்தான். அவளோ ஒரு வருஷகாலம் கடந்ததும் இவனை விட்டுவிட்டு எங்கோ போய்விட்டான். அதன் பிறகு இவனுடைய தனிப்பட்ட வாழ்க்கை சம்பந்தமாக ஏற்பட்ட அபகீர்த்தியைத் தாங்க முடியாமல் இங்கிலாந்தைவிட்டு ஐரோப்பாவுக்குப் போனான். போன சில நாட்களுக்குப் பிறகு திடீரென்று இவனுக்குப் புகழ் ஏற்பட்டது. தலைசிறந்த கவிஞனாக இவனைப் போற்றினார்கள். இத்தாலியிலும் கிரீஸிலும் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டான். கிரேக்கர்களின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணம் செய்தான். மிஸ்ஸோலோங்கி என்னும் ஊரில் ஜுரத்தினாலும், வலிப்பினாலும் இறந்துவிட்டான். ஆங்கிலத்தில் கம்பீரமான கவிதைகள் புனைந்தவர்களில் தலை சிறந்தவனாக விளங்கும் இந்த வீரப் புலவனின் கடைசி வார்த்தைகளாவன:

"நான் இப்போது தூங்க வேண்டும்"

எட்கார் அலன் போ (1809-1849)

அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் பிறந்த எழுத்தாளன். அதிமானுஷ்யக் கதைகளையும், துப்பறியும் கதைகளையும் எழுதுவதில் சமர்த்தன். அழகான கவிதைகளையும் இயற்றியிருக்கிறான். இவனுடைய ஆங்கில நடையழகு யாரையும் கவரவல்லது. தாங்க முடியாத வறுமையின் காரணமாக இவனுடைய மனைவியும் இறந்தாள்; இவனும் பால்டிமோர் என்னும் நகரில் தெருவிலே செத்துக்கிடந்தான். இவனுடைய கடைசி வார்த்தைகள்:

"கடவுளே! எனக்கு அருள் புரியும்."

ஹென்றி தோரு (1817-1862)

இவன் அமெரிக்க எழுத்தாளன். கன்கார்டு என்ற ஊரில் பிறந்தவன். தாவர சாஸ்திர ஆராய்ச்சியிலும் ஈடுபட்டவன். வியாசங்களும் கவிதைகளும் எழுதியிருக்கிறான். இவனுடைய முழுப்பெயர் ஹென்றி

டேவிட் தோரு. கடைசிக் காலத்தில் இவன் தன்கையால் கட்டிய குடிசையில் வாழ்ந்து வந்தான். இவனுடைய கடைசி வார்த்தைகள்:

"யாதொரு மனவருத்தமுமின்றி நான் இந்த உலகத்தை விட்டுப் பிரிகிறேன்."

ஓ. ஹென்றி (1862-1910)

இவன் அமெரிக்க எழுத்தாளன். இவனுடைய புனை பெயர் தான் ஓ. ஹென்றி என்பது. இவனுடைய உண்மைப் பெயர் வில்லியம் சிட்னி போர்ட்டர். சிறிது காலம் ராணுவஸ்டோரில் வேலை பார்த்தான். பாங்கியிலும் இருந்தான். ஒரு மோசடிக் குற்றத்தில் தண்டனை பெற்று மூன்று வருஷம் சிறையிலிருந்தான். பல பத்திரிகைகளில் ஆசிரியனாக இருந்திருக்கிறான். இவனுடைய சிறு கதைகள் ஹாஸ்யமாகவும் ஆச்சரியத்தை அளிக்கும் முடிவுகளுடனும், இருக்கும். இவனுடைய கடைசி வார்த்தைகள், மக்களிடையே வழங்கும் ஒரு பாடலின் சொற்களாகவே இருந்தன:

"விளக்கேற்றுங்கள், இருட்டிலே நான் வீட்டுக்குப் போக விரும்பவில்லை."

சுப்பிரமணிய பாரதியார் (1882-1921)

தமிழகத்தின் முதல் தேசியக் கவி. தமிழ் நாட்டில் ஓர் ஆயிர வருஷ இடைக்காலத்துக்குப் பிறகு பிறந்த குறிப்பிடத் தக்க சிறந்த கவிஞர். இவர் திருநெல்வேலி ஜில்லாவில்எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயரின் குமாரராகப் பிறந்தார்; இவருடைய அன்னையாரின் பெயர் லக்ஷ்மியம்மாள். பாரதியார் தம் 5-வது வயதில் தாயாரையும், 15-வது வயதில் தந்தையாரையும் இழந்தார். திருநெல்வேலியில் உள்ள கல்லூரியில் மெட்ரிகுலேஷன் வரையிலும் படித்தார். தம் வாழ்நாட்களை எட்டயபுரத்திலும், புதுச்சேரியிலும், சென்னையிலும் கழித்தார் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். பாரதியாருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள்.

1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 11-ம்தேதியன்று சென்னையில் பாரதியார் காலமானர். அன்று இரவு, மங்கலான வெளிச்சத்தில் உடல் நோயுடன் பாரதியார் படுத்துக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு மருந்து கொடுக்கப்போன பாரதியாரின் இளைய புதல்வி சகுந்தலா, மருந்து என்று நினைத்து, தவறுதலாகப் பார்லி கஞ்சி வைத்திருந்த கிளாஸை எடுததுக் கொடுத்து விட்டார். முதலில் மருந்து வேண்டாமென்று சொன்ன பாரதியார், எதையோ நினைத்தவராய் அந்தக் கிளாஸை வாங்கிக் குடித்தார். ஒரு வாய் குடித்துவிட்டு,

"நீ கொடுத்தது மருந்து இல்லையப்பா, கஞ்சி."

என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடினார்; சிறிது நேரத்தில் காலமாய்விட்டார்.

ரூஸ்வெல்ட் (1882—1945)

அமெரிக்காவின் 32-வது ஜனதிபதி; நியூயார்க் நகரில் பிறந்தவர். இவருடைய முழுப் பெயர் பிராங்க்ளின் டிலானே ரூஸ்வெல்ட் என்பது. கப்பல் படை இலாகாவில் உதவி காரியதரிசியாகவும், நியூயார்க்கின் கவர்னராகவும் இருந்திருக்கிறார். 1932-ல் ஜனநாயகக் கட்சியின் அபேக்ஷகராக நின்று ஜனதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார். தம் நிர்வாகத்

தில் அமெரிக்காவின் பொருளாதார நிலையை உயர்த்தினர். 1936-ல் இரண்டாவது முறையாகவும் தேர்தலில் நின்று ஜனதிபதியானர். பிறகு 1940-லும் தேர்தலில் வெற்றி பெற்று மூன்ரும் முறையாக ஜனதிபதியானர். 2-வது மகா யுத்தம் நடந்து கொண்டிருந்த போது இவர் ரத்தக் கொதிப்பினல் மரண மடைந்தார். இவருக்கு ஒரு மகளும், நான்கு பையன்களும் இருக்கிருர்கள். இவர் மரணமடையும் போது கூறியதாவது :

"தீபத்தை அணையுங்கள்."

மகாத்மா காந்தி (1869—1948)

இந்திய தேசிய சுதந்திர இயக்கத்தின் தந்தை. பிரமுகர்களின் கட்சியாக இருந்த காங்கிரஸைப் பொதுஜன இயக்கமாக மாற்றிய தலைவர். ஏசு நாதருக்குப் பிறகு, மனித குலத்தின் ரக்ஷகராகத் தோன்றி, அன்பு, அஹிம்சை, சத்தியம், சமத்துவம் முதலியவற்றை வாழ் நாளெல்லாம் போதித்து வந்த மகான். லண்டனில் வக்கீல் படிப்பு படித்து, தென்னுப்பிரிக்காவில் வக்கீலாகவும், மக்கள் தலைவராகவும் இருந்து இந்தியாவுக்கு வந்தார். இந்தியாவுக்கு வந்ததிலிருந்து மரண பரியந்தமும் இந்தியாவின் தனிப் பெரும் தலைவராக விளங்கினர். ஒரு வகுப்பு வாத வெறியனல் சுடப்பட்டுக் கீழே விழும்போது "ஹே ராம்" என்று கூறினர்.

போர்பந்தரில் அவதாரம்: 2-10-1869

டில்லியில் அமரத்துவம்: 30-1-1948

✲

மகாநாடு என்ருல் என்ன?

அடுத்த கூட்டம் எங்கே கூடுவது என்பதைத் தீர்மானிப்பதற்குக் கூடும் கூட்டத்துக்குத்தான் மகாநாடு என்று பெயர். —டப்ளின் ஒப்பீனியன்

பிலாட்டிங் பேப்பரின் சரித்திரம்

பிலாட்டிங் பேப்பர் எனப்படும் மை ஒத்தும்காகிதம் முதல் முதலாக 15-ம் நூற்ருண்டில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கலாம். ஏனென்ருல், அதைப் பற்றிய குறிப்பு ஒன்று 1465-ம் வருஷத்தில் எழுதப்பட்டுள்ளது. அதன்பிறகு, 1535-ல் காலமான வில்லியம் ஹார்மன் என்பவர் பின்வருமாறு எழுதியிருக்கிருர்: "பிலாட்டிங் பேப்பர், ஈரமையை உறிஞ்சுவதால், மை உலருவதற்கு ஏதுவாக இருக்கிறது" இதன்பின் 1666, 1667, 1668 ஆகியவருஷங்களில் தயாரிக்கப் பெற்ற பிரிட்டிஷ் அரசாங்க வரவுசெலவுக் கணக்கிலும் பிலாட்டிங் பேப்பரைப்பற்றிய குறிப்பு இருக்கிறது. 1675-ல் ஒரு புத்தகம் வெளிவந்தது. அதில், "புழுதியைக் கொண்டோ, மணலைக் கொண்டோ மையை ஒத்தவேண்டாம். அது பழைய வழக்கம். மணலைப் போட்டால், மையின் அழகான நிறம் மங்கி மறைந்து விடுகிறது. பழுப்பு நிறமான பிலாட்டிங் பேப்பரையே உபயோகியுங்கள்" என்று எழுதப்பட்டுள்ளது

—வாடர்லூ ஹவுஸ் மாகஸின்

ஓர் அறிவிப்பு!

ஸவுத்கோஸ்ட் ரெஸ்டரண்டு என்னும் ஒரு ஹோட்டலில் கீழ்க்கண்ட அறிவிப்பு எழுதப்பெற்ற போர்டு ஒன்று தொங்கவிடப்பட்டிருக்கிறது:

மீனுக்கும் வறுவலுக்கும் 2 ஷில்லிங். குழந்தைகளுக்கு 1 ஷில்லிங்.

உல்லாஸ தம்பதிகள்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திரா ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள்:
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை.

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.
ASK-6-TM

சார்லி சாப்ளின்

ஜி. செல்லையா

சினிமா நடிகராகவும், அரசியல் வாதியாகவும் உள்ள உலகப் பிரசித்திபெற்ற ஹாஸ்ய நடிகர் சார்லி சாப்ளின். இவருடைய புகழைப் பற்றி எல்லோரும் கேள்விப்பட்டிருக்கலாம்; அத்துடன் இவருடைய விசித்திரமான வாழ்க்கை வரலாற்றையும் எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டும். படியுங்கள்.

கூடிய சீக்கிரத்தில் அமெரிக்கா கின் ஏதேச்சாதிகாரசர்க்கார்,கிரீ வில் 'முதல் நம்பர் அரசியல் ஸின் பொம்மை அரசாங்கம் விரோதி' என்ற பெயரைச் சம் முதலியவற்றின் தோழமை பாதிக்கப்போகிறாராம் ஒருவர். அமெரிக்க சர்க்காரிடத்தில் கெட்ட பெயர் வாங்கும் ஒருவரிடத்தில் ஏதாவது ஒரு நல்ல அம்சம் இருந்தாக வேண்டும் என்பது என் சமீப காலத்திய அபிப்பிராயம். ஏனென்றால் அமெரிக்காவின் ஆதரவைப் பெற்று வருகிறவர்கள் எல்லோரும் ஓர் அதிசயம் போல் பெரிய கேடிப் புள்ளிகளாக இருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், சியாங்கேஷேக்

சார்லி சாப்ளின்

அமெரிக்கா இருந்து வருவதே அமெரிக்காவின் சுயரூபத்தைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டப் போதுமானது.

மேலே கூறிய 'நல்ல அம்சம்' உடையவராகத்தான் இருக்க வேண்டும் என்று நான் தீர் மானித்த அந்த நபர்தான் உலகப் பிரசித்தி பெற்ற ஹாஸ்ய நடிகர் சார்லி சாப்ளின்.

அமெரிக்காவில், அமெரிக்க நல னுக்குக் குந்தகம் விளைவிப்பவர் களைக் கண்டு பிடிப்பதற்கென்று ஜே. பார்னல் தாமஸ் என்பவரின் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக் கப் பட்டது. அந்தக் கமிட்டி யினர் கம்யூனிஸ்ட் வேட்டை யிலும் இறங்கினர். அங்குள்ள ஹாலிவுட் சினிமா ஸ்டுடியோ விலும்கூட கம்யூனிஸ்ட் ஆதிக் கம் வலுத்துவிட்டது என்று கருதினர். பல படவுலக ஜடா முனிகளை யெல்லாம் கம்யூனிஸ்ட் கள் என்று குற்றம் சாட்டினர். ஆனால் அவர்களெல்லோரும் பற் பல காரணங்களைக் கூறித் தப் பித்து விட்டனர். அந்தக் கமிட்டி வேலை செய்து வரும்போது சார்லி சாப்ளின் மிகவும் துணிச் சலுடன் அமெரிக்க நாட்டின் முதலாளித்துவத்தைத் தாக்குவ தற்கென்று ஒரு படத்தைத் தயா ரித்து வெளியிட்டு விட்டார். அது, சமீபத்தில் சென்னையில் ஓடிய மான்ஷியர் வெர்டோ என்ற படம்தான்.

மான்ஷியர் வெர்டோ படத் தின் கதை ஏறக்குறைய நம் நாட்டுச் சந்தணத்தேவன், ஜம்பு லிங்கம் முதலியவர்களின் கதை யைப் போன்றது தான். துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனத்தைத் தன்னுடைய சொந்த பொறுப் பாக ஏற்றுக் கொண்டவன் சந்த ணத்தேவன். பணக்காரர்களின் உடைமைகளைப் பறித்து ஏழை களுக்குக் கொடுப்பதன் மூலம் சமூகத்தில் சமத்துவத்தைத் தன் னந்தனியே நின்று நிலை நாட்டி விடலாம் என்று துணிந்து, அவ் வண்ணமே வேலை செய்தவன் ஜம்புலிங்கம். இந்த இருவரும் பணம்படைத்தவர்களின் கொடு மையைக் கண்டு சீறி எழுந்தவர் கள். மான்ஷியர் வெர்டோவும் இவர்களைப் போல முதலாளித் துவ விரோதியானாலும், இவர் களுக்கும் வெர்டோவுக்கும் வித்தியாசம் உண்டு. வெர்டோ ஆரம்பத்தில் முதலாளித்துவத்தை நயவஞ்சமாக ஏமாற்றி, தன் குடும்பத்தைக் காப்பாற்றியவன்; ஆனால் சந்தணத் தேவனும் ஜம்பு லிங்கமும் தம் குடும்பங்களைப் பற்றிக் கவனித்ததாகத் தோன்ற வில்லை.

மான்ஷியர் வெர்டோ பிரான்ஸ் தேசத்தில் ஒரு பாங்கி குமாஸ்தா. 1929-ல் பொருளா தார நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாகத் தன் வேலையை இழந்து, தன் குடும்ப சம்ரக்ஷ ணைக்கு வேறு வழியின்றி கஷ்டப்பட்டான். கடைசியில் பணக்காரப் பெண்களைக் கல்யாணம் செய்து பிறகு அவர்களை ஏமாற்றிக் கொலை செய்து, அவர்களுடைய பணத்தை எடுத்துக் கொண்டு ஓடி வருவதையே தொழிலாகக் கொண்டு விட்டான். இப்படி இவனுக்கு இரையான பெண் கள் மொத்தம் பதினாலு பேர். இந்தக் கொலைகாரப் புத்தி யிருந் தாலும் இவனுக்கு உயிர்ப் பிராணிகளிடத்தில் அளவற்ற கருணை உண்டு. கீழே கிடக்கும் கம்பளிப் பூச்சிகூட காலில் அகப்பட்டு நசுங்கி விடாதபடி, அதை எடுத்துச் செடியின் மேல்

விட்டு விடுவான். ஒரு பூனையைத் தொந்தரவு செய்வதைக் கூடப் பார்க்கச் சகிக்க மாட்டான்!

ஆனால் நாளாவட்டத்தில் முதலாளித்துவக் குடும்பங்களில் உள்ளவர்களைக் கொலை செய்வதன் மூலம் தேசத்தின் கஷ்டம் நீங்கி விடவோ, தேசத்தில் பொருளாதார சீர்திருத்தம் ஏற்பட்டுவிடவோ முடியாது என்று கருதி, ஸ்தாபன ரீதியான ஐக்கிய முயற்சியினால்தான் சமூகத்தை மாற்றி யமைக்க முடியும் என்று கண்டு கொள்ளுகிறான்.

இந்த விசித்திரமான, ஆபத்தான பேர்வழியை மிகவும் சிரமத்துடன் கண்டு பிடித்து அரசாங்கம் மரண தண்டனை விதித்து விடுகிறது. நீதி மன்றத்தில், வெர்டோ, முதலாளித்துவத்தைக் கண்டித்துப் பேசுகிறான்; முதலாளித்துவத்தினால்தான் உலகில் அநீதிகளும் யுத்தங்களும் நடை பெறுகின்றன என்று, கூறுகிறான். அரசாங்கம் யுத்தத்தில் ஏராளமான மக்களைக் கொல்லும்போது, தான் யோக்கியமாக வாழ வழி கிடையாது, கொலைத் தொழில் செய்ததில் தவறு ஒன்றுமில்லை என்றும் கூறுகிறான்.

மான்ஷியர் வெர்டோ படத்தில், மான்ஷியர் வெர்டோவாக சார்லி சாப்ளின் நடித்திருக்கிறார். கடந்த 35 வருஷங்களாக உலகப் பிரசித்திப் பெற்ற நடிகராக திகழ்கிறார் சாப்ளின். உலகத்தில் அவருடைய பிரக்கியாதி பரவாத இடம் கிடையாது.

1889-ம் வருஷத்தில் சார்லி சாப்ளின் லண்டன் நகரத்தில் மிகவும் தரித்திரமான ஒரு குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு சிட்னி சாப்ளின், வீலர் ட்ரைடன் என்ற இரண்டு சகோதரர்கள் உண்டு. சகோதரர்கள் மூவரும் ஒரே தாயின் வயிற்றில் வேறு வேறு தகப்பன்மாருக்குப் பிறந்தவர்கள். தாயார் விதவையாகி விட்டாள்; வீட்டிலோ தாங்க முடியாத வறுமை. இந்த நிலையில் சாப்ளின் தம் குழந்தைப் பருவத்தை ஒரு ஏழை விடுதியிலேயே கழிக்க வேண்டியதாய் விட்டது. வீட்டை விட்டு போகும்போது மூன்று சகோதரர்களும் வீட்டிலிருந்த ஒரே ஒரு ஜோடி ஜோடுகளை ஆளுக்குக் கொஞ்சம் பங்கு போட்டுக் கொண்டார்களாம். மூன்று பேரும் இரண்டு ஜோடுகளை எப்படிப் பங்கு போட்டுக் கொண்டார்கள் என்ற விபரம் தெரியவில்லை!

சார்லி சாப்ளின் ஏதோ கொஞ்ச காலம் பள்ளிக்கூடத்தில் படித்தார். மேற்கொண்டு தொடர்ந்து படிக்க முடியாது போய்விட்டது. உடனே ஜீவனோபாயத்தை நாடி தம் ஏழாம் வயதிலேயே ஒரு ஆங்கில நாடகக் கம்பெனியில் சேர்ந்தார். பிறகு பல நாடகக் கம்பெனிகளிலும் சேர்ந்து நடித்திருக்கிறார். அந்த நாடகக் கம்பெனிகளுடன் ஊர்கள் தோறும் சுற்றி யிருக்கிறார். அந்தச் சிறு வயதிலேயே இவருடைய நடிப்பைக் கண்டு எல்லோரும் பாராட்டினர்.

1910-ல் இவர் முதல் முதலாக அமெரிக்காவுக்குப் போனார். *1913*-ம் வருஷத்தில் பிரெட் கார்னோ என்பவரின் நாடகக் கம்பெனியில் சேர்ந்து இவர் நடித்துக்கொண் டிருக்கும் போது இவருக்கு வயது 24. இதே சந்தர்ப்பத்தில்தான் மாக் ஸென்னட் என்பவர் இவரைப் பட உலகத்தில் கொண்டுவந்து

அறிமுகப்படுத்தினர். அப்பொழுதுதான் சினிமாக் கலை முதல் முதலாக அமெரிக்காவில் பரவி வந்தது. சினிமா என்றால் வெறும் ஊமைப் படந்தான். பேசும்படம் 1929-ல் தான் தோன்றியது.

சார்லி சாப்ளின் சினிமாப் படத்தில் நடிக்கத் தொடங்கிய புதிதில் அவருக்கு வாரத்துக்கு 150 டாலர் சம்பளம் போட்டுக் கொடுத்தார்கள்.

அவர் நடித்த முதல்படம் 1913-ல் வெளிவந்தது. அந்த ஊமைப்படத்தில் சார்லி சாப்ளினுக்குஒரு விசித்திரமான பாத்திரம் கொடுக்கப்பட்டது: ஒரு ஏணி; அதில்கால்வைத்தால் வழுகி விழவேண்டியிருக்கும். அப்படிப்பட்ட ஏணியில் ஏறிப்போக வேண்டும். ஏறிப்போகிறவனுக்கு முதுகு வலி. அத்துடன் கையில் ஒரு பெட்டியையும், தலையில் ஒரு நிலக்கரித் தட்டையும் எடுத்துச் செல்லவேண்டும். இந்தப் பாத்திரத்தில்தான் நடித்தார் சார்லி சாப்ளின். தம்மை இந்தப் பாத்திரமாக நடிக்கச் சொன்னதைக்கண்டு தாம் மிகவும் கோபப்பட்டதாக ஒரு சமயத்தில் சாப்ளின் கூறியிருக்கிறார். ஆனால் முதல் படத்தில் இவரது நடிப்பைக்கண்டு மக்களெல்லாம் பாராட்டினார்கள்; இவருடைய நடை உடை பாவனைகளையும் பின்பற்றத் தொடங்கினர். அமெரிக்காவை ஒரேநாளில் இப்படி வெற்றி கொண்டதைக் கண்டு சார்லி சாப்ளினே பிரமித்துப் போய்விட்டாராம். இதன் பிறகு 1918-ல் வெளிவந்த ஒரு படம் இவருக்கு மேலும் அதிகப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது. 1921-ல் ஒரு படத்தில் தம் பால்ய வாழ்க்கையையே நடித்துக் காட்டினார். ஏழைகளிடத்திலும் அனாதைச் சிறுவர்களிடத்திலும் இவருக்கு மட்டற்ற அன்பு உண்டு. அதனால் அவர்களுடைய வாழ்க்கையையே படங்களில் நடித்துக் காட்டிக்கொண்டு வந்தார்.

1921-ம் வருஷத்தில் இவர் லண்டனுக்கு வந்தார். லண்டன் மக்களால் இவருக்கு அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஏராளமான மக்கள் வந்து கூடியிருக்கும் அந்தக் கூட்டத்தைக் கண்டு, "எனக்கு மிகவும் நாணமாக இருக்கிறது" என்றார் சாப்ளின். பிறகு ஐரோப்பாவையும் சுற்றிப்பார்த்தார். சாப்ளின் ஒரு நாட்டிலிருந்து ஒரு நாட்டுக்குப் போவதற்கு அனுமதிச் சீட்டு வாங்கிக் கொள்ளவில்லை; காரணம், அவர் ஏற்கெனவே அகில உலகப் பிரசித்தி பெற்றிருந்ததுதான். ஐரோப்பாவில் முதல் மகாயுத்தம் முடிவுற்றிருந்த சந்தர்ப்பம். மகா யுத்தத்தினால் ஐரோப்பாவில் ஏற்பட்ட நாசங்களைக் கண்கூடாகக் கண்டார் சாப்ளின். 'பெரிய மனிதக் கூட்டம் முட்டாள்தனமாக நடக்கவும் கூடும்; பெரிய இடங்களில் மோசடித்தனங்கள் இருப்பதையும் காணலாம். அதிகார ஆசையின் கீழ் நவீன உலகம் நசுங்கிச் சாகிறது'—இப்படிப்பட்ட அபிப்பிராயங்களையே பிறகு சாப்ளின் தயாரித்த படக் கதைகளில் வற்புறுத்தித் தெரிவித்தார்.

1925-ல் பொன்னாசை என்ற படம் வெளி வந்தது. இதில் அமெரிக்காவைப் பீடித்திருந்த மட்டுக்கு மீறிய டாலர் மோகத்தைக் கேலி செய்திருந்தார்.

பிறகு கொஞ்ச காலத்தில் பேசும் படம் வந்தது. சாப்ளி



மகாத்மா காந்தியுடன் சார்லி சாப்ளின்

னுக்கு பேசும் படம் வந்தது பிடிக்கவில்லை. சினிமாக் கலை சைகை ஜாடைகளால் விஷயத்தை விளக்கும் கலைதான் என்பது அவருடைய அபிப்பிராயம். "அபிநயம் தான், மனித இயக்கத்தின் கவிதையாகும். வாய்ப் பேச்சு (விஷயத்தை எடுத்துக் கூற முடியாமல்) ஒடுங்கும் போது அபிநயம் (நமக்கு உதவத்) தொடங்குகிறது" என்று கூறினார் சார்லி சாப்ளின். 1931-ல் வெளிவந்த நகர விளக்குகள் என்ற படத்தில் சாப்ளின் பேசவே இல்லை. அதற்கு 5 வருஷங்களுக்குப் பிறகு வந்த நவயுகம் என்ற படத்திலும் அவர் பேசவில்லை; வெறும் நடிப்புத் தான்.

நவயுகம் படத்தில் யந்திர நாகரிகத்தைப் பரிகாசம் செய்திருந்தார். நவீன நாகரிகத்தை யந்திரம் ஆட்கொள்ளுவதை அவர் வெறுத்தார். யந்திர நாகரிகத்தினால் எண்ணற்ற தொழிலாளிகள் வெறும் பைத்தியங்களாகப் போய்விடுகிறார்கள் என்பது அவர் கருத்து.

1940-ல் மகா சர்வாதிகாரி என்ற படத்தை வெளியிட்டார். இதில் ஹிட்லரையும் முஸோலினியையும் கேலி செய்திருந்தார். முதல் தடவையாக இந்தப் படத்தில்தான் சார்லி சாப்ளின் பேசியிருக்கிறார். படத்தின் முடிவில் மொத்தம் ஆறு நிமிஷ நேரம் தொடர்ந்து பேசினார்.

மகாசர்வாதிகாரிக்குப் பிறகு, அதாவது சுமார் 7 வருஷங்களுக்குப் பிறகு வெளியான சாப்ளி

னுடைய படம் மான்ஷியர் வெர்டோதான்.

சமீபத்தில் ஜே. பார்னல் தாமஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டியினர் அமெரிக்க சினிமா ஸ்டுடியோக்களில் கம்யூனிஸ்ட்கள் வேலை செய்து வருவதைப் பற்றி விசாரணை செய்யத் தொடங்கினர். அப்போது சாப்ளின் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்ற அறிவிப்பு வந்ததும், சாப்ளின் அமெரிக்கத் தலைநகராகிய வாஷிங்டன் நகருக்குப் புறப்பட்டார். புறப்படும்போது மான்ஷியர் வெர்டோ படத்தையும் கையோடு கொண்டுபோய் அதை வாஷிங்டனில் கமிட்டி அங்கத்தினர்களுக்குக் காட்டுவதற்காக முயன்றார். ஆனால், இந்தப் படக் காட்சியின் மூலம் சாப்ளின் தம் சொந்த நலனைச் சாதித்துக் கொள்ள முயலுவதாகக் கருதி, படத்தைக் காட்டக் கூடாது என்று தடுத்து விட்டார்கள்.

அமெரிக்க சர்க்காருக்கு சாப்ளின்மீது இப்போது கடுங் கோபம். அமெரிக்க முதலாளித்துவத்தைத் தாக்கும் ஒரு படத்தை, அமெரிக்காவிலேயே தயாரித்து வெளியிடுவதைக்கண்டு, அவரை 'நாட்டை விட்டு விரட்டலாமா?' என்னும் அபிப்பிராயம்கூட இருந்து வருகிறதாம். லண்டனில் பிறந்தவர் அமெரிக்க நாட்டின் பிரஜையாக இருந்துவருவதை இனி அனுமதிக்கக் கூடாது என்றும் கருதுகிறார்களாம். இந்த எதிர்ப்புகளை யெல்லாம் சமாளித்துப் போராடுகிறாராம் சாப்ளின்.

சமீபத்தில் சுமார் 15 நாட்களுக்கு முன் ஒரு செய்தி வந்தது. அதாவது பிரான்ஸ்தேசத்தில் ஒருவர் இருக்கிறாராம். அவருக்கும் மான்ஷியர் வெர்டோ என்ற கதா பாத்திரத்துக்கு அநேக ஒற்றுமைகள் இருக்கின்றனவாம். அந்த பிரெஞ்சுக்காரருடைய பெயரும் ஹென்றி வெர்டோ. படத்தில் வரும் கதா பாத்திரத்தின் பெயரும் ஹென்றி வெர்டோ; இருவரும் பாங்கி குமஸ்தாக்கள். இருவருக்கும் தலைக்கு ஒரு மனைவியும் தலைக்கு ஐந்து குழந்தைகளும் இருக்கிறார்கள். இந்தப் படம் வெளிவந்ததின் காரணமாக உண்மை வெர்டோவுக்கு மிகவும் அபகீர்த்தி உண்டாகி விட்டதாம். பத்திரிகைக்காரர்களும், போட்டோக்காரர்களும் அவரைச் சுற்றுகிறார்களாம். இதனால் தம்முடைய அந்தஸ்தும், அமைதியான வாழ்க்கையும் பாழாய்ப் போய்விட்டது என்று அவர், 15 லட்சம் பிராங்குகளுக்கு (பிராங்க் — பிரெஞ்சு நாணயம்) சாப்ளின் மீது மான நஷ்ட வழக்குத் தொடுத்திருக்கிறார்! கதையில் வரும் பாத்திரம் யாரையும் குறிப்பிடாத கற்பனைப் பாத்திரமானாலும் இத்தனை ஒற்றுமைகளும் இருக்க முடியாதே என்ற பலத்த சந்தேகம் அவருக்கு!

இப்படிப் பட்ட வழக்குகளைக் கண்டு சார்லி சாப்ளின் சளைப்பவர் அல்ல. எத்தனையோ எதிர்ப்புகளையும் பிடிவாதமாக அவர் சமாளித்திருக்கிறார். பிடிவாதம் அவருடைய உடன் பிறப்பு. இதற்கு உதாரணமாக சுமார் 40 வருஷங்களுக்கு முன் அவருடைய வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை மூரிங் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்:

எக்ஸீடர் என்பது இங்கிலாந்தில் ஒரு நகரம். அந்த நகருக்கு சாப்ளின் வேலை பார்த்து வந்த பிரெட் கார்னோவின் நாடகக் கம்

பெனி போயிருந்தது. சாப்ளி னுக்கு அப்போது வயது 18. சாப்ளின் ஒரு பால் பண்ணைக் குள் நுழைந்து ஒரு ஷில்லிங் குக்கு பாலடைக் கட்டியை வாங்கிக் கொண்டு வந்தார்; வாங்கிக் கொண்டு வரும் போது ஒரே குஷி! ஒரே ஆர்ப்பாட்டம்! அதைக் கொண்டு வந்து, அந்தக் கம்பெனியில் பிரதான ஸ்தானம் வகித்து வந்த மூரியல் பால்மர் என்ற பெண்மணிக்குப் கொடுத் தார். அதை அவள் எடுத்து ருசி பார்த்து விட்டுக் கீழே வைத்து விட்டாள். ஏனென்றால் அது புளிப்பாக இருந்தது. "நீயே இதை எடுத்துக் கொள்" என்று சாப்ளினைப் பார்த்துச் சொன் னான் அந்தப் பெண். சாப்ளி னுக்கு மானம் போய் விட்டது போல் இருந்தது. தாம் செல வழித்த காசை வீணாக இழந்து விடவும் தயாராக இருந்தாரே ஒழிய, அந்தப் பாலடைக் கட்டி யைத் திரும்பவும் எடுத்துக் கொள்ள அவர் சம்மதிக்கவில்லை. கடைசியில் சாப்ளினுக்காக வேண்டி, பழைய படியும் அதை எடுத்துக் கொண்டாள் அந்தப் பெண்!

'இந்த மாதிரிப் பிடிவாதமும் விட்டுக் கொடுக்காத குணமும் இன்று வரை சாப்ளினிடம் இருந்து வருகின்றன. யாதொரு அவசியமும் நிர்ப்பந்தமும் இல்லா மல தம் பணத்தை அள்ளிக் கொடுத்திருக்கிறார் சாப்ளின். ஆனால், தம்மை ஏமாற்றியோ, அல்லது தமக்கு அதிக விலைக்கு சாமன்களை விற்றோ, கேவலம் 10 டாலருக்கு ஒரு கடன் பில் வந் தாலும், அந்தப் பணத்தைச் சாப் ளின் கொடுக்கமாட்டார்: அதற் காக மாதக் கணக்கில் போராட வேண்டி ஏற்பட்டாலும் போரா டச் சலிக்க மாட்டார்.

சாப்ளினுடைய சகோதரர் கள் இருவரும் சாப்ளினுட னேயே வேலை செய்து வருகிறார் கள். மூவரும் வேறு வேறு தகப்பன்மாருக்குப் பிறந்திருந் தாலும் தோற்றத்தில் ஒன்று போலவே இருப்பார்கள். சாப் ளினுடைய விவகாரங்களைப் பற்றி அவர்கள் வாயைத் திறக் கவே மாட்டார்கள், சாப்ளின் எந்த இடத்திலும் நூற்றுக்கு நூறு சுதந்திர புருஷாரகவே வாழ விரும்புகிறார். முன்னால் இவ ருடைய படம் ஒன்றில் நடிப்பதற் காக ஜோன்பாரி என்ற பெண்ணு டன் ஒப்பந்தம் செய்திருந்தார். இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு ஜோன்பாரிக்கு ஒரு குழந்தை பிறந்தது. அது சாப்ளினுக்குப் பிறந்த குழந்தைதான் என்று கூறினள் ஜோன்பாரி. சாப்ளி னுக்கோ சந்தேகம்! தகராறு ஏற்பட்டு விட்டது. தம்முடைய பெயர் இப்படிப்பட்ட மட்ட மான தகராறுகளில் அகப்பட்டு அம்பலத்தில் அடிபடுவதைப் பற்றி அவர் கவலைப்படவே இல்லை. கடைசியில் கோர்ட் டிலே வழக்குத் தொடர்ந்தால் தான் சாப்ளினை வழிக்குக் கொண்டு வரலாம் என்று ஜோன் பாரி தீர்மானித்தாள். சாப்ளின் எதற்கும் தயாராக இருந்தார். பயமுறுத்தலுக்கு அஞ்சக் கூடாது என்பது சாப்ளினுடைய் தீர்மானம்.

சாப்ளின் தம் மனைவி லீடா கிரேயுடன் விவாகரத்து செய்து கொண்டார். சாப்ளினுக்குப் பிடித்த மில்லாத காரியங்களைச் செய்ததுடன் பணிவாக நடந்து கொள்ளாமலும் இருந்தாள் கிரே. ஆகவே தான் விவாகரத்து செய்து கொள்ள வேண்டி ஏற் பட்டது.

அதன் பிறகு பாலெட் கோதார்டு என்னும் பெண்ணை மணந்தார். அவள் மிகவும் சாமர்த்தியமான பெண். சாப்ளினுடைய குணாதிசயங்களை அவள் நன்கு தெரிந்து கொண்டிருந்தாள். குடும்ப வாழ்க்கை சந்தோஷகரமாகவே இருந்து வந்தது. இந்தச் சமயத்தில்.........

பெபின் பீச் என்னும் இடத்தில் சாப்ளினுடைய வீடு ஒன்று இருக்கிறது. அங்கே போயிருந்தார் சாப்ளின். ஒரு நாள் திடீரென்று அங்கே வந்து சேர்ந்தாள் சாப்ளினுடைய மனைவி, பாலெட் கோதார்டு. வந்து பார்க்கும் போது சாப்ளின் மட்டும் அங்கு இல்லை; ஒரு பெண்ணும் அங்கு இருந்தாள். இதைக் கண்டதும், 'இரண்டு பேரில் உமக்கு எவள் வேண்டும்?' என்று சாப்ளினைப் பார்த்துக் கேட்டாள் கோதார்டு. சாப்ளினும் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்து விட்டார்...பாலெட் கோதார்டு பேசாமல் வெளியேறினாள்; சாப்ளின் தெரிவித்த அபிப்பிராயம் அப்படி இருந்தது! சில நாட்களில் இருவருக்கும் இடையிலிருந்த தொடர்பு அறவே விட்டுப் போய்விட்டது.

பிறகு ஊனா ஓ நீல் என்னும் இளம் யுவதியைக் கல்யாணம் செய்து கொண்டார். 60 வயது நிரம்பப் போகும் சாப்ளினுக்கு அருகில் இந்தப் பெண் நின்றால் தகப்பனும் மகளும் போல் தோன்றும். இருவரும் காதல் ஒருமித்து சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்கள்.

சாப்ளினுக்குத் தம் குழந்தைகள் இருவரிடமும் மிகுந்த அன்பு. எந்நேரமும் அந்தக் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருப்பதில் சாப்ளினுக்குப் பிரியம் அதிகம்.

சாப்ளினுடைய வாழ்க்கை ஒரு விசித்திரமான வாழ்க்கை. இளம் வயதில் பரமதரித்திரத்தோடு உழன்றவர் இன்று கோடீஸ்வரனாக விளங்குகிறார். சுமார் ஒருகோடி டாலராவது அவரிடம் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். தம்முடைய அபிப்பிராயத்தை யார் தடுத்தாலும் அவர் வெளியிடாதிருக்க மாட்டார். மகாயுத்த சமயத்தில் இரண்டாவதுபோர் முனை ஆரம்பிக்கவேண்டும் என்று இவர் அமெரிக்காவில் பிரசாரம் செய்யும்போது அமெரிக்கப் பத்திரிகைகளெல்லாம், 'இப்படிப் பிரசாரம் செய்ய சாப்ளினுக்கு என்ன உரிமை இருக்கிறது?' என்று கூறின. ஆனால் சாப்ளின் தாம் வாயில்லாச் சீவனாக இருக்கமுடியாது என்று கர்ஜித்தார்; போராடினார். இந்தப் போராட்டகுணம், பிடிவாதம், சுதந்திரமான போக்கு, உலகத்தில் ஏழைமக்களின் கஷ்டங்களைக் கண்டு சீறிஎழுந்த ஆவேசம், எல்லாவற்றிற்கும் மேலாக அபாரமான அறிவு—இவை எல்லாம் சேர்ந்து இன்று அவரை அகில உலக நடிகராக மட்டுமல்லாமல் அகில உலக அரசியல் வாதியாகவும் செய்துவிட்டன. இப்படி எந்த நடிகரும் பெயரெடுத்ததில்லை. சாப்ளினிடைய குணாதிசயங்களில் ஒருவேளை குறைபாடுகள் இருந்தாலும், அவருடைய நேர்மையான போக்கு பல படிப்பாளிகளைக் கவர்ந்திருக்கிறது; அவருடைய ஹாஸ்ய நடிப்போ உலகமக்கள் அனைவரையுமே கவர்ந்துவிட்டது.

டால்டாவில்

வறுத்த பூரிகள்

எப்பொழுதும் நன்றாக வாய்க்கின்றன

கோதுமை மாவிலோ, மைதாமாவிலோ அல்லது இரண்டையும் கலந்தோ பூரிகள் செய்யலாம். ருசியான பூரிகள் செய்ய, மாவில் சிறிது டால்டாவை கலநது வேண்டிய ஜலம் சேர்த்துக்கொண்டு பதமாவதுவரை நன்றாக பிசையவும. முட்டியால் மாவை அமுக்கி சிறிது ஜலம் தெளித்து ஒருமணிநேரம மூடிவைக்கவும். பிறகு சிறிய பந்துகளாக உருட்டி அப்பளக்குழவியால் பரத்தி சூடான டால்டாவில் போடவும். வறுக்கும்பொழுது சட்டுவத்தால் சுற்றிவர பூரிகளை மெதுவாக அமர்ததிக்கொண்டிருக்கவும். உப்பினதும் பூரிகளை மறுபக்கம் திருப்பவும். சுமாராக சிவந்ததும் வாணலியிலிருந்து எடுத்து, காகிதத்தில் எண்ணெயைவடித்து, சூடாக பரிமாறுங்கள். டால்டாவில் வறுத்த பூரிகள் சத்துள்ளவை.

சமையல் சம்பந்தமான பிரச்னைகளைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டுமா? எங்களுக்கு எழுதுங்கள் :

தி டால்டா
அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 75-50 TM

வாழ்க்கையில் புதிய ஒளி

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

சந்தோஷமும் ஆரோக்கியமும்
நிரம்பிய குடும்பத்தின் அழகே அலாதியானதுதான்.
ஜீவாம்ருதம் தேக புஷ்டியையும் வீரிய விருத்தியையும்
அளிப்பது. ஆண், பெண் இருபாலரும் சாப்பிடக்கூடியது. இது
நரம்புகளை வலுப்படுத்தி, வாழ்க்கையில் புதிய இன்பத்தைத் தரவல்லது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17

வாயில் ஊறும் துர்நீர் சரீர சுகத்தைக் கெடுக்கிறது

சரீர தத்துவ சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள திராவக நீர்கள் சரீரத்தில் தேவைக்கு அதிகமில்லாது சமனப் படுத்தக்கூடிய "பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னிஷியா", "பிலிப்ஸ் டூத் பேஸ்டில்" 75 சத விகிதம் கலந்திருக்கிறது. அதனால்தான் பிலிப்ஸ் டூத் பேஸ்ட் நாசத்தைத் தடுத்து பூரணப்பாதுக்காப்பளிக்கிறது



நாசத்தைத் தடுப்பது
பிலிப்ஸின் குணம்

No. 2



படம் : எஸ், கந்தசாமி, சேலம்

"கம்பத்தின் முன் நின்று
கண்டேன், கோதண்டமெனச்
செம்பொற் கிரிவளைத்த
சேவகனை"



படம் : கே. முத்துராமலிங்கம், கரூர்

அசலும்......

படம்: கே. முத்து ராமலிங்கம், கரூர்

...... [illegible]



படம்: கே. முத்துராமலிங்கம், கரூர்

'எம் பேரு அநுசூயை இல்லே'

படம்: ஆர். பூர்ணையா, கோவை

'போட்டோ பிடிச்சா ஆயுசு குறையாதா?'

படம்: ஆர். லக்ஷ்மி, டில்லி

'வட்ட வட்ட ஊரணியாம்
வடக்கே பார்த்த ஐயனூராம்,
கிழக்கே பார்த்த ஐயனாரே,—எங்கள்
கிளைகளெல்லாம் வாழவேணும்'



படம்: எல். ராமச்சந்திரன், நாகர்கோவில்

'வானுலக வீதி யெல்லாம்
தூள் பறக்கவே
வருகுதுபார் பொய்க்குதிரை
தான் சிறக்கவே'

காட்டுமிராண்டிகளின் படையெடுப்பால் அவதிப்படும் காஷ்மீரக் குழந்தைகள்

காஷ்மீரத்தின் அவதியை ஒழிக்கக் கச்சை கட்டிய பாதுகாவலன்

மாப்பஸானும் செஹாவும் சிறுகதை இலக்கியத்தின் தந்தைகள் என்று குறிப்பிடப்படும் மேதைகள். ருஷ்ய ஆசிரியரான செஹாவ் மனித குணங்களை மிக நுணுக்கமாக ஆராய்ந்து எழுதி அபூர்வமான தத்துவங்களைப் புகட்டுபவர். வாத்தியாரம்மாளின் உள்ளத்தில் காதல் அரும்பும் விஷயத்தை அழகாகச் சித்திரித்துள்ளார் ஆசிரியர். ஹானேவின் மீது அவள் கொண்ட காதலினால் அவளும் உலகமும் மாறித் தோற்றும் விந்தை மிக அற்புதமாக உள்ளது.

வாத்தியாரம்மாள்

ஆண்டான் செஹாவ்

எட்டரை மணிக்கு அவர்களுடைய வண்டி ஊரைவிட்டு வெளியே வந்தது.

சாலையெல்லாம் வறண்டுபோய் வெப்பமாக இருந்தது. ஏப்ரல் மாதம். வெயில் 'தகதக' வென்று அடித்துக்கொண்டிருந்தாலும் கிடங்குகளிலும் மரங்களிலும் உள்ள பனி கரையாமல்தான் இருந்தது. இருள் மூடிப்போயிருந்த குளிர்காலம் வெகுகாலம் நீடித்திருந்து மிகுந்த சங்கடத்தை அளித்தது. அது இன்னும் கழிந்தும் கழியாமலும் இருக்கும்போதே, திடீரென்று வசந்தம் வந்துவிட்டது. அப்போது எங்கும் 'வெதுவெது' வென்று இருந்தது. வசந்தத்தின் உயிர்ப்பாகிய இளங் காற்றினால் கதகதப்புப் பெற்று காட்டிலைகள் எல்லாம் கண்ணாடியைப்போல் பளபளத்தன. ஏரிகளைப்போன்றிருந்த சதுப்பு நீர் தேங்கிய குட்டைகளின் மேலாகக் கருகிறத்தில் கூட்டம் கூட்டமாகப் பறவைகள் பறந்து சென்றன. ஆகாயம், ஆழம் காணமுடியாத ஒன்ருகக் காம்பீரியத்துடன் காட்சி யளித்தது. ஆனால், இவை எல்லாம் வண்டியினுள் அமர்ந்திருக்கும் மார்யா வாஸில்யேவ்னுவுக்குப் புதுமையானவையாகவோ, அன்றி உற்சாகம் கொடுப்பனவாகவோ படவில்லை. பதின்மூன்று வருஷங்களாக அவள் பள்ளிக்கூட உபாத்தியாயினியாக இருந்து வருகிருள். சம்பளம் வாங்குவதற்காக அவள் இத்தனை வருஷ காலமும் எத்தனை தடவைகள் அந்த நகருக்குள் போய் வந்திருப்பாள்! அவள் போய் வரும் காலம் இப்போதைப்போல வசந்தமாக இருந்தாலும், அல்லது மழை கொட்டும் இலையுதிர் காலத்தின் மாலைப்போதாக இருந்தாலும், அல்லது பனிக்காலமாக இருந்தாலும் — எல்லாம் அவளுக்கு ஒன்றுதான். ஏனென்ருல் அவள் எப்போதும் விரும்புவது இது ஒன்றைத்தான் — அதாவது எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நகருக்குப் போய்வரும் தன் பிரயாணம் முடிந்துவிட வேண்டும். அவ்வளவுதான்.

அந்தப் பிரதேசத்தில் அவள் எத்தனையோ வருஷக் கணக்காக வசித்து வருவதுபோல அவளுக்குப் பட்டது. ஒரு நூறு வருஷ காலம் வாழ்ந்துவிட்டதைப் போல அவளுக்குத் தோன்றியது. நகரத்திலிருந்து பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் ரஸ்தாவிலுள்ள ஒவ்வொரு கல்லும், ஒவ்வொரு மரமும் அவளுக்கு நன்ருகத் தெரியும். தெரியாமலிருக்க முடியுமா? அவளுடைய இறந்த காலம் இங்கேதான் கழிந்தது. நிகழ்காலமும் இங்கேதான். எதிர்காலத்திலோ பள்ளிக்கூடம், நகருக்குச் சென்று திரும்பும் சாலே, பழையபடியும் அதே பள்ளிக்கூடம், அதே சாலே......இவைகளைத் தவிர்த்து அவள் வேறென்றையும் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க வில்லை.

பள்ளிக்கூட வாத்திச்சியாக வருவதற்கு முன்பே அவள் தன் சென்ற காலத்தைப்பற்றி நினைத்துப் பார்க்கும் வழக்கத்தை விட்டுவிட்டாள்; அந்தக் காலத்தையே மறந்துவிட்டாள். ஒரு காலத்தில் அவளுக்குத் தாயும் தந்தையும் இருந்தார்கள். அவர்கள் மாஸ்கோவிலே சிவப்பு வாசல் ஓரமாக இருந்த ஒரு பெரிய மாடியில் வசித்து வந்தார்கள். அந்த வாழ்க்கையில் ஏதோ கனவுபோன்ற தெளிவற்ற ஒரு ஞாபகம்தான் இப்போது அவளிடம் எஞ்சி நின்றது. அவளுக்குப் பத்து வயதாக இருக்கும்போது தகப்பனர் இறந்துபோனர்; தாயார் அப்புறம் சிறிது காலத்துக்குள் காலமாய்விட்டாள்......அவளுக்கு ஒரு சகோதரன் உண்டு. அவன் ஓர் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிறன். ஆரம்பத்தில், அவர்கள் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொள்ளுவார்கள். அப்புறம் அவன் அவள் கடிதங்களுக்குப் பதில் போடுவதை நிறுத்திவிட்டான். ஆகவே, அவளும் கடிதம் எழுதுவது கிடையாது. அவளுடைய பழைய சொத்துக்களில் இப்போதிருக்கக்கூடியது அவள் தாயாரின் போட்டோப் படம் ஒன்றுதான். அந்தப் படம் கூட பள்ளிக்கூடத்தில் ஈரம் பட்டுப்பட்டு மங்கலாகப் போய்விட்டது. அந்தப் படத்தில் தலே மயிரும் புருவங்களும் தவிர இப்போது வேறென்றும் இல்லே. எல்லாம் அழிந்துபோய்விட்டது.

அவர்கள் வண்டி இரண்டு மைல் தூரம் போனதும் வண்டியோட்டிக்கொண்டு போன கிழட்டுச் செம்யோன் திரும்பிப் பார்த்துக்கொண்டு,

"நகரத்திலே அவர்கள் ஒரு சர்க்கார் குமாஸ்தாவைப் பிடித்திருக்கிருர்கள். அவனே இங்கிருந்தே அழைத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். சமாச்சாரம் என்ன தெரியுமா? அவன் சில ஜெர்மன்காரர்களோடு சேர்ந்துகொண்டு மேயர் அலெக்ஸியோவை மாஸ்கோவில் வைத்துக் கொன்றுவிட்டானும்" என்றுன்.

"உனக்கு இதைச் சொன்னது யார்?"

"ஐவான் ஐயொனேவின் சாராயக் கடையில் வைத்து அவர்கள் இதைப் பேப்பரிலிருந்து வாசித்துக்கொண்டிருந்தார்கள்."

மறுபடியும், அவர்கள் வெகு நேரம் மௌனமாக இருந்தார்கள். மார்யா வாஸில்யேவ்ன தன் பள்ளிக்கூடத்தைப் பற்றியும், பரீட்சையைப் பற்றியும் யோசித்துக்கொண்டிருந்தாள். பரீட்சை வெகு சீக்கிரமாக வந்து

கொண்டிருந்தது. அதற்கு அவள் ஒரு பெண்குழந்தையையும் நாலு பையன்களையும் அனுப்ப ஏற்பாடு செய்திருந்தாள். அவள் பரீட்சையைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும்போது அவள் வண்டியோடு ஒரு குதிரைவண்டி வந்து சேர்ந்துகொண்டது. நாலு குதிரைகள் பூட்டிய வண்டி அது. அதில் ஹானோவ் உட்கார்ந்து கொண்டிருந்தான். அந்தப் பக்கத்தில் அவன் ஒரு பெரிய நிலச்சுவான்தார். போன வருஷத்தில் அவன்தான் வாஸில்யேவ்னா பள்ளிக்கூடத்தின் பரீட்சாதிகாரியாக இருந்தான். அவளுக்குப்பக்கமாக அவன் வந்ததும் அவளை இன்னார் என்று தெரிந்துகொண்டு மரியாதைக்கு அடையாளமாகத் தலை குனிந்தான்.

"நமஸ்காரம். எங்கே வீட்டுக்கா?" என்று கேட்டான் ஹானோவ்.

இந்த ஹானோவுக்கு வயது நாற்பதாகிறது. முகத்திலே ஒரு அக்கறையோ கவனமோ கிடையாத ஒரு தோற்றம். கட்டுவிட்டுப்போன நிலையைக் காண்பிக்கும் அவன் முகத்தில் முதுமையின் சாயல் படிய ஆரம்பித்தது என்றாலும் அவன் இன்னும் அழகாகத்தான் இருந்தான். பெண்களுக்கும் அவனைப் பார்த்தால் பிடித்தம்தான்.

அவன் தன்னந் தனியாக தன்னுடைய பெரிய வீட்டிலே வசித்து வந்தான். இப்போது அவன் ஒரு வேலையிலும் இல்லை. அவன் தன் வீட்டில் ஒன்றுமே செய்வதில்லை யென்றும், அறையிலே சீட்டியடித்துகொண்டே முன்னும் பின்னும் நடப்பதும், தன் கிழட்டு வேலைக்காரனோடு சதுரங்கம் விளையாடுவதும்தான் அவனுடை வேலை என்றும் ஜனங்கள் சொல்லுவது வழக்கம். அவன் நிறையக் குடிக்கிறான் என்றும் கூட அவர்கள் சொல்லிக்கொள்ளுவார்கள். உண்மை என்னவாக இருந்தபோதிலும், அவன்போன வருஷம் பரீட்சைக்குக் கொண்டுவந்த காகிதங்களிலெல்லாம் 'ஒயின்' வாடையும் 'செண்ட்' வாடையும் அடிக்கத்தான் செய்தன. பரீட்சை சமயத்தில் அவன் எப்போதும் புது உடைகளையே அணிந்திருப்பான். அதனால் மார்யா வாஸில்யேவ்னாவுக்கு அவனுடைய தோற்றம் கவர்ச்சியாகப்பட்டது. பரீட்சை சமயத்தில் அவன் அவளுக்கு அருகில் உட்கார்ந்திருக்கும் போதெல்லாம் அவளுக்குச் சங்கடமாக இருக்கும். பள்ளிக்கூடத்தில் உணர்ச்சியோ உற்சாகமோ அற்றிருக்கும் பரீட்சாதிகாரிகளையும், துடிதுடிப்பு நிறைந்த பரீட்சாதிகாரிகளையும் அவள் பார்த்திருக்கிறாள். ஆனால் அவள் பார்த்த இந்த அதிகாரிக்கோ ஒரு கடவுள் வாழ்த்துப் பாட்டுகூடப் பாடம் கிடையாது. எதைப்பற்றிக் கேள்வி கேட்பது என்றும் அவருக்குத் தெரியாது. மிகமிக அதிக மரியாதையோடும் கௌரவத்தோடும் நடந்துகொள்ளுவார். எதுவும் கொடுக்க மாட்டார். ஆனால் 'மார்க்' மட்டும் ஏராளமாகப் போடுவார்.

அவன் மார்யா வாஸில்யேவ்னாவைப் பார்த்து முன் சொன்னதைத் தொடர்ந்து, "நான் பாக்விஸ்த் வீட்டுக்குப் போகிறேன். ஆனால், நீங்கள் பேசுவதைப் பார்த்தால் அவன் வீட்டிலே இல்லை யென்றே தெரிகிறது" என்றான்.

கிராமத்தை நோக்கிச் செல்லும் ஒரு விலக்குப் பாதையில் வண்டியைத் திருப்பினார்கள்.

ஹானேவின் வண்டி முன்னல் செல்ல, பின்னுக செம்யோன் வண்டியை ஓட்டிக்கொண்டு போனன். அந்த மண் பாதை வழியாக பாரமான வண்டியை சிரமப்பட்டு இழுத்துக்கொண்டு நான்கு குதிரைகளும் தன்னடையிலேயே சென்றுகொண்டிருந்தன. செம்யோன் இங்கும் அங்கும் வண்டியைச் சாலையோரங்களிலே ஓட்டிக்கொண்டு போனன். ஒரு சமயம் ஒரு பனிச் சருக்கல் வழியாகவும், மறுசமயம் ஒரு குட்டையின் வழியாகவும் வண்டியைத் திருப்பித் திருப்பி ஓட்டிக்கொண்டும், வண்டியை விட்டு அடிக்கடி கீழே குதித்து குதிரையை 'வாக்'காகத் திருப்பி இழுத்துவிட்டுக் கொண்டும் போனன். மார்யா வாஸில்யேவ்னு இன்னும் பள்ளிக்கூடத்தைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தாள். கணக்குக் கேள்விகள் கடினமாக இருக்குமா, சுலபமாக இருக்குமா என்பதைப் பற்றியே அவளுக்குச் சிந்தனை. ஜில்லா போர்டைப் பற்றி நினைத்தாலோ அவளுக்கு ஒரே எரிச்சல். முந்தாநாள் அவள் ஜில்லாபோர்டு ஆபீஸுக்குப் போயிருந்தபோது அங்கே ஒருவரும் இல்லை 'என்ன. ஆபீஸாம், லக்ஷணம்! ஒரு ஒழுங்கு முறை கிடையாது!' கடந்த இரண்டு வருஷங்களாக அவள் தன் பள்ளிக்கூட 'வாச்மே'னை வேலையை விட்டு நீக்கிவிடும்படி சொல்லிக்கொண்டிருக்கிறுள். அந்த வாச்மேன் ஒரு வேலையும் செய்வதில்லை. இவளிடத்தில் முரட்டுத் தனமாக நடந்து கொள்ளுவதோடு பள்ளிக்கூடப் பையன்களையும் அடித்துவிடுகிருன். இதை ஒருவருமே கவனிப்பது கிடையாது. பிரஸிடெண்டை ஆபீஸில் பார்ப்பது ரொம்பவும் கஷ்டம். அவரைப் பார்த்துவிட்டோம் என்றே வைத்துக் கொள்ளுவோம். அவர் கண்ணீர் சொரிய தமக்கு ஒரு நிமிஷம்கூட அவகாசம் இல்லையே என்று அழுவார். இன்ஸ்பெக்டர் அதிகமாகப் போனல் மூன்று வருஷத்திற்கு ஒரு முறை பள்ளிக்கூடத்திற்கு வருவார். தம்முடைய வேலையைப் பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது. ஏனென்றல் அவர் கலால் வரி இலாகாவில் வேலை பார்த்து, அப்புறம் செல்வாக்கின் காரணமாகப் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டரானவர். பள்ளிக்கூடக் கவுன்சிலின் கூட்டம் மிகவும் அபூர்வமாகக் கூடும். அது எங்கே கூடுகிறது என்று ஒருவருக்கும் தெரியாது.பள்ளிக்கூடக் கார்டியனே எழுதப் படிக்கத் தெரியாத ஒரு விவசாயி. தோல் பதனிடும் தொழிற்சாலைக்கு அவர் மேலதிகாரி. அஞ்ஞானம், முரட்டுத்தனம் முதலியன அவருக்கே உரியவை; வாச்மேனுக்கோ ரொம்பவும் நெருங்கிய சிநேகிதர்—இப்படி யெல்லாம் இருக்க, பாவம், அவள் யாரிடத்தில் போய் புகார் செய்துகொள்ளுவாள்? அவள் விண்ணப்பங்களை யாரிடம் சமர்ப்பித்துக் கொள்ளுவது? அது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

அவள் ஹானேவைக் கடைக்கண்ணுல் பார்த்து, 'உண்மையாகவே அவன் அழகாக இருக்கிருன்,' என்று மனதுக்குள்ளே சொல்லிக் கொண்டாள். சாலை போகப் போக மிகவும் மோசமாகப் போய்க்கொண்டிருந்தது ...மரக் காட்டுக்குள் வண்டியை ஓட்டினர்கள். பழையபடியும் பின்னுக்குத் திரும்புவதற்கு அங்கே இடமேயில்லை. வண்டிப்

பைதாக்கள் உள்ளே ஆழமாய்ப் புதைந்துகொண்டன. தண்ணீர் சள சளவென்று தெறித்து விழுந்தது. சிறு சிறு மரக் கொப்புகள் முகத்தில் சுளீரென்றடித்தன.

"என்ன ரோடு இது!" என்று சொல்லிவிட்டு ஹாஜேவ் சிரித்தான்.

வாத்தியாரம்மாள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். இந்த அதிசயமான மனிதன், எதற்காக இங்கே வசித்து வருகிறான் என்று அவளுக்குப் புரியவில்லை. 'அவருடைய பணம், விசித்திரமான தோற்றம், நாகரிகமான பொறுமை—இவற்றால் இங்கே என்ன பயன் ஏற்படப் போகிறது? இந்தக் களி மண்ணிலே இந்தத் தீவாந்திரமான இடத்திலே அப்படியிருந்து என்ன பிரயோஜனமாம்? இங்கே யிருப்பதில் அவருக்கு விசேஷமாக ஏதாவது லாபமா என்றால் அது ஒன்றும் கிடையாது. இங்கே, திக்கு முக்காடிக் கொண்டு செம்யோனைப் போலவே அசௌகரியங்களைச் சகித்துக்கொண்டு அவன் வண்டியோட்டிக்கொண்டு போவானேன்? பீட்டர்ஸ்பர்க்கிலாவது அல்லது வெளியே எங்காவது வசிக்கத் தகுதி யிருக்கும்போது இங்கே யிருப்பானேன்? அவனைப் போல ஒரு பணக்காரன் நினைத்தால் இந்த மோசமான சாலையை நல்ல சாலையாக ஆக்குவது ஒன்றும் பெரிய காரியமல்ல. அதனால், அவனுடைய வண்டிக்காரனும், செம்யோனும் கஷ்டத்தினால் முகவாட்டமடைவதைப் போக்கலாம் அல்லவா?' இப்படிப் பலர் நினைப்பார்கள். ஆனால் அவனோ பேசாமல் சிரித்துவிட்டு இதையெல்லாம் ஒன்றும் கவனிக்காமல் போய்விடுவான். இதைவிட விசேஷமான ஒரு வாழ்க்கையை அவன் விரும்பவில்லை. மிகவும் அன்பும், மிருதுபாவமும், சுபாவத் தன்மையும் நிறைந்தவன் அவன். இந்தச் சங்கடமான வாழ்க்கையைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது, பரீட்சையின்போது அவனுக்குக் கடவுள் வாழ்த்துக்கள் எப்படித் தெரியாமல் போய்விட்டதோ அப்படித்தான் இதைப் பற்றியும் தெரியாமல் போய்விட்டது. பள்ளிக்கூடத்திற்கு ஒன்றும் அவன் கொடுப்பது கிடையாது. பூகோள உருண்டைகள் (குளோப்புகள்) தான் கொடுத்திருந்தான். அதனால் அவன் தன்னை ஒரு பிரயோஜனம் உள்ள மனிதன் என்றும், பொது மக்களின் கல்விக்காகப் பாடுபடும் ஊழியன் என்றும் மனப்பூர்வமாகவும் உண்மையாகவும் நினைத்துக் கொண்டான். அந்தப் பூகோள உருண்டைகளால் என்ன பிரயோஜனமோ?

"அப்படியே நில்லு, வாஸில்யேவ்னா!" என்றான் செம்யோன்.

வண்டி 'விரு'ட்டென்று முன்னால் சறுக்கி ஓடியது; குடை சாய்கிற நிலைமை. இந்தச் சமயத்தில் ஏதோ கனமான வஸ்து வாத்தியாரம்மாள் காலின் மேல் உருண்டு விழுந்தது. அது அவள் அன்று வாங்கிய கடைச் சாமான்களின் பொட்டலம்தான். அந்தக் களிமண் பாதையில் ஒரு செங்குத்தான ஏற்றம் இருந்தது. வளைந்து வளைந்து செல்லும் சேறு நிறைந்த வண்டித் தடங்களில் தண்ணீர் கலங்கி சள சளவென்று ஓடிக்கொண்டிருந்தது. தண்ணீர்தான் சாலையைக் கறும்பித் தின்றுவிட்டது

போலத் தோன்றியது. இந்தச் சாலை வழியாக எப்படித்தான் வண்டி ஓட்டிக்கொண்டு போவது? குதிரைகள் மூச்சு விட முடியாமல் திணறின. ஹானோவ் வண்டியைவிட்டிறங்கி நீளமான தன் மேல் கோட்டுடனேயே சாலையின் ஓரத்திற்குப் போனான். அவன் முகம் சிடு சிடுவென்றிருந்தது.

"என்ன ரோடு இது!" என்று சொல்லிவிட்டுப் பழையபடியும் சிரித்தான். "வண்டிக்கு வெகு சீக்கிரம் தலைவலி பிடித்துவிடும்" என்றான்.

"இந்தக் காலத்தில் உனக்கு யார் வண்டி கொண்டு வருவார்கள்? நீ வீட்டிலே கிடக்க வேண்டும்" என்று எரிச்சலோடு வாத்தியாரம்மாளைப் பார்த்துச் சொன்னான் செம்யோன்.

"வீட்டிலே எனக்குச் 'சிய்'யென்றிருக்கிறது, தாத்தா. எனக்கு வீட்டிலேயிருப்பது பிடிக்கவில்லை."

கிழட்டுச் செம்யோனுக்குப் பக்கமாக நிற்கும் ஹானோவ் அழகாகவும் வாலிப முறுக்கோடும் இருந்தான். ஆனாலும் ஏதோ ஒன்று அவன் தளர்ச்சியையும் பலவீனத்தையும் எடுத்துக் காட்டியது. அப்போது திடீரென்று காட்டு மரங்களில் ஒரு சலனம் உண்டானது. மாரியா வாஸில்யேவ்னாவுக்கு இந்த மனிதன் ஏன் இப்படி காரணமில்லாமல் வாடி மெலிந்து சாகிறான் என்று நினைக்கும் போது பயமாகவும் இருந்தது; இரக்கமாகவும் இருந்தது. அவனுக்குத் தான் மனைவியாகவோ சகோதரியாகவோ இருந்திருந்தால் அவன் உடம்பு பாழாகாமல் கவனித்துக்கொள்ள தன் வாழ்க்கைமுழுவதையும்செலவிட முடியுமே என்று அவளுக்குத் தோன்றிற்று. மனைவியா! இந்த மாதிரி வாழ்க்கையில் மனைவியாவது எப்படி! அவன் இங்கு தன் பெரிய வீட்டில் ஒண்டியாக வசித்து வருகிறான்; அவள் ஒரு தீவாந்தரமான கிராமத்தில் தனியாக வசித்து வருகிறாள். ஆனாலும், சில காரணங்களால் அவனும் அவளும் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவுபூண்டு சம பிராயத்தவர்களாக மாறி காலம் தள்ளுவது என்பதை நினைக்கக்கூட அசாத்தியமாகவும் அசட்டுத்தனமாகவும் இருந்தது.

பிரத்தியட்சத்தில், வாழ்க்கையமைப்பும் மனித உறவுகளும் ஒரே குழப்பமயமாய் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்தால் தீங்கு நிறைந்த ஒரு மர்மமாகவும், மனசு கூசியொடுங்கும் ஒரு விஷயமாகவும் தான் இருக்கிறது.

"இது புரிவதே இல்லை. அழகையும், இந்தக் களையையும், சோகமும் இனிமையும் ததும்பும் இந்தக் கண்களையும் பலவீனமான, துரதிர்ஷ்டக்காரர்களான இந்த உதவாக்கரை ஜனங்களுக்கு கடவுள் ஏன் கொடுக்கிறாரோ, தெரியவில்லை—அவர்கள் எதற்குத்தான் இப்படி வசீகரமாக இருக்கிறார்கள்!" என்று நினைத்தாள் வாத்தியாரம்மாள்.

ஹானோவ் வண்டியிலேறிக்கொண்டு, "இங்கே வலது பக்கமாகத் திரும்பவேண்டும்." என்று சொல்லிவிட்டு அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டான்.

வாத்தியாரம்மாள் பழையபடியும் தன் பள்ளிப் பிள்ளைகளைப்பற்றியும் பரீட்சையைப்பற்றியும்,

வாச்மேன், பள்ளிக்கூடக் கவுன்சில் முதலியவற்றைப் பற்றியும் யோசிக்கத் தொடங்கினுள்; அப்போது பின் நோக்கிச் செல்லும் வண்டியின் சப்தம் காற்ருேடு வந்து ஒலிக்கும் போது இந்த எண்ணங்களுடன் வேறு சில எண்ணங்களும் தோன்றின. அழகிய கண்களைப்பற்றியும், காதலைப் பற்றியும், இனி அடைவதற்கியலாத சந்தோஷத்தைப் பற்றியும் சிந்திக்க அவள் உள்ளம் ஆசைப்பட்டது.

'அவனுக்கு மனைவியாவதா?'

அன்று காலையில் மிகவும் குளிராக இருந்தது. கணப்பைப் பற்றவைக்க ஒருவரும் இல்லை. வாச்மேன் எங்கோ போய் விட்டான். விடிந்து வெளிச்சம் பட்டதும், பள்ளிப் பிள்ளைகள் பனிக்கட்டியையும் மண்ணையும் எடுத்துக் கொண்டு ஒரே இரைச்சலோடு வந்து விட்டார்கள். பெரிய சங்கடம்! அவளுடைய இருப்பிடத்தில் ஓர் அறையும் அதையடுத்து பக்கமாக ஒரு சமையற் கூடமும் உண்டு. தினசரி வேலை முடிந்ததும் அவளுக்குத் தலைவலி வந்துவிடும்; மத்தியானச் சாப்பாட்டுக்கப்புறம் நெஞ்செல்லாம் காந்தும். பள்ளிப் பிள்ளைகளிடமிருந்து விறகுக்காகவும், வாச்மேனுக்காகவும் அவள்பணவசூல்செய்து அதைப் பள்ளிக்கூட 'கார்டிய'னுகிய அந்தத் தின்று கொழுத்த குடியான மனுஷனிடம் கொடுக்க வேண்டும். அப்புறம் தனக்கு விறகு அனுப்பும்படி அவரைக் கெஞ்சி கேட்கவேண்டும். இரவில், அவளுக்குக் கனவில் தோற்றுவது பரீட்சைகள், விவசாயிகள், பனிச்சருக்கல்கள்—இவைகள் தாம். இப்படிப்பட்ட வாழ்க்கையின் காரணமாக அவள் கிழடு தட்டி, மெருகிழந்து, பார்ப்பதற்கும் ஆபாசமாகப் போய் ஈயத்தினுல் செய்யப்பட்டவள் போல் ஆய்விட்டாள். எப்போதும் அவள் உள்ளத்தில் பயம்தான். ஜில்லா போர்டு அங்கத்தினரோ அல்லது பள்ளிக்கூட 'கார்டிய'னே வந்து விட்டால் அவர்கள் முன்னிலையில் அவள் தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து விடுவாள்; திரும்பி உட்காரத் துணிவு வராது. அவர்களில் யாருடனுவது பேசினுல் மாமூல் முறைப்படி பணிவான சொற்களில் பேசுவாள். அவளுடைய வசிகரப் பண்பை எவரும் உணரவில்லை. அவளுடைய வாழ்க்கை இருள் மூடிப்போய் யாருடைய பாசமும் துணையுமின்றி, சிநேகிதர்களின் அனுதாபமோ, குஷாலாகப் பேசும் நண்பர்களோ இல்லாமல் கழிந்து கொண்டிருந்தது. இந்த நிலைமையில் அவள் காதல் கொள்ளத் தொடங்கி விட்டால் எவ்வளவு பயங்கரம், அது!

"வாஸில் யேவ்ஞ நில்லு!"

மறுபடியும் ஒரு செங்குத்தான ஏற்றம்......

அவள் பள்ளிக்கூட 'வாத்திச்சி' யானது அவசியத்தை முன்னிட்டுத்தானே ஒழிய வேலை செய்ய வேண்டுமென்ற ஆசையினுல் அல்ல. வேலையைப் பற்றியோ, அறிவு விளக்க சேவைக்குப்பாடு படுவதைப் பற்றியோ அவள் நினைத்ததே கிடையாது. அவளுடைய வேலையில் முக்கியமான விஷயம் பள்ளிப்பிள்ளைகளோ, அறிவு விளக்கமோ அல்ல வென்றும் பரீட்சைதான் என்றும் அவளுக்கு எப்போதும் படும். வேலையைப்பற்றியோ, அறிவுவிளக்கத்தைப் பற்றியோ யோசிக்க அவளுக்கு நேரம் ஏது? வாத்தியார்

களுக்கும், நல்ல சம்பளமில்லாத டாக்டர்களுக்கும் அவர்களுடைய உதவி உத்தியோகஸ்தர்களுக்கும் தங்கள் கஷ்டமான வேலையிலே, ஒரு லட்சியத்துக்காகவோ அல்லது ஜனங்களுக்காகவோ சேவைசெய்கிறோம் என்று நினைக்கக் கூடச் சௌகரியம் கிடையாது. அவர்களுடைய மூளையில் 'தினசரிச் சாப்பாடு', பிறகு, சரியாயில்லாத சாலைகள், சீக்கு சிப்பந்தி முதலிய கவலைகள்தானே நிரம்பி யிருக்கின்றன? அப்படிப்பட்ட கஷ்டம் நிறைந்த உற்சாகமற்ற வாழ்க்கையை, பொறுமை நிறைந்த வாயில்லாப் பூச்சிகளான மார்யா வாஸில்யேவ்னை போன்ற ஜட்கா வண்டிக் குதிரைகள்தான் நீண்ட காலம் சகித்துக்கொள்ள முடியும். துடிதுடிப்பும், உற்சாகமும் நிரம்பிய லட்சிய நோக்க முடையவர்கள் என்றால் வெகு சீக்கிரம் சோர்வு தட்டி இந்த வேலையை விட்டு ஓடிப் போய்விடுவார்கள்.

நேராக, குறுக்குப்பாதை வழியாகப் போய்விட வேண்டுமென்று செம்யோன் முதலில் ஒரு மைதானம் வழியாகவும், பிறகு கிராமக் குடிசைகளின் பின் புறமாகவும் வண்டியை ஓட்டிக்கொண்டு போனான். ஆனால், போகும் போது ஓரிடத்தில் குடியானவர்கள் அவர்களைப் போகவிடாமல் செய்வார்கள். மற்றோரிடம் பாதிரிச் சாமியாரின் இடமாக இருக்கும்; அங்கே அதைக் கடந்து செல்ல இயலாது. வேறோரிடத்தில், ஐவான் ஐயொனேவ் நிலச்சுவான்தாரிடம் கொஞ்சம் நிலத்தை விலைக்கு வாங்கி அந்த நிலத்தைச் சுற்றி ஒரு கிடங்கு வெட்டியிருந்தான். ஆகவே அவர்கள் திருப்பித்திருப்பி வண்டியை விட்டுக் கொண்டு போனார்கள்.

அவர்கள் நிஷ்னி கொரோடிஷி என்ற இடத்துக்கு வந்தார்கள். அங்கே ஒரு சாராயக்கடை. அதன் ஓரம் தரையெல்லாம் சாணியாகக் கிடந்தது. இன்னும் அங்கு பனி உறைந்திருந்தது. பெரியபெரிய புட்டிகளில் வேகம் நிறைந்த கந்தக அமிலத்தை அடைத்துக்கொண்டு வந்த வண்டிகள் அங்கே நின்று கொண்டிருந்தன. சாராயக் கடைக்குள் ஆட்கள் ஏராளமாக இருந்தார்கள். எல்லோரும் வண்டிக்காரர்கள். அங்கே 'வோட்கா' பானத்தின் வாடையும், புகையிலை, ஆட்டுத்தோல் முதலியவற்றின் வாடையும் அடித்துக்கொண் டிருந்தன. ஒரே பேச்சும், கதவு மூடித் திறக்கும் சப்தமும் கேட்டுக் கொண்டிருந்தன. ஒரு நிமிஷம் கூட ஓய்வில்லாமல் கடைக்குள்ளே 'கன்ஸர்ட்டினு' வாத்தியத்தை வாசிக்கும் சப்தம் சுவருக்கு இந்தப் புறமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. மார்யா வாஸில்யேவ்ன உட்கார்ந்து கொஞ்சம் 'டீ' சாப்பிட்டாள். பக்கத்து மேஜையில் குடியான ஜனங்கள் 'வோட்கா'வையும் பீரையும் குடித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் அப்போதுதான் டீ குடித் திருந்ததாலும், அங்கே புகை மூடி மூச்சுமுட்டியதாலும் அவர்கள் உடம்பு வியர்த்துக் கொண்டிருந்தது.

"நான் சொல்லுகிறேன், குஸ்மா!" "என்ன அங்கே?" "கடவுளே துணை", "ஐவான் டிமென்டையிச், அதை நான் சொல்லுகிறேன் உனக்கு" "பெரியமனுஷா, வெளியே

பார்!''—இப்படி ஒரே, குழப்ப மான கூச்சல்கள்.

அங்கே அம்மைத் தழும்பு விழுந்த ஒரு சிறிய மனிதன் இருந்தான். அவனுடைய தாடி மயிர் கறுப்பாக இருந்தது. நிறை யக் குடித்திருந்தான். திடீ ரென்று எதையோ கண்டு ஆச்ச ரியப்பட்டு, ஆபாசமாகப் பேசத் தொடங்கிவிட்டான்.

கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து கொண்டிருந்த செம்யோன் இதைக் கேட்டதும் கோபத்து டன், "எய், உன்னைத்தானே, அங்கே என்னத்தைப் போட்டுப் பேத்தறே? கொஞ்ச வயசுப் பெண் வந்திருக்கிறது தெரியல்லே?'' என்றான்.

"கொஞ்ச வயசுப் பொண்ணு!'' என்று வேறொரு மூலையில் உட் கார்ந்திருந்த ஒருவன் 'வலிச் சம்' காட்டினான்.

"சீ, பண்ணி"

"நாம் ஒண்ணும் சொல்ல லையே...'' என்று அந்தச் சின்ன மனிதன் குழப்பத்துடன் சொன் னான். "மன்னிக்கணும், நாம் நம் பணத்தைக் கொடுக்கிறோம்; கொஞ்ச வயசு அம்மா அவங்க பணத்தைக் கொடுக்கிறாங்க. நமஸ்காரம்'' என்றான்.

"நமஸ்காரம்'' என்று சொன் னாள் வாத்தியாரம்மாள். "நாங்க எல்லோரும் உங்களை நமஸ்காரம் பண்றோம்.''

மார்யா வாஸில்யேவ்னா திருப் தியோடு 'டீ'யைக் குடித்தாள். அவளும் குடியான ஜனங்களைப் போல சிவந்து போய்விட்டாள். பழையபடியும் விறகுக் கட்டை யைப் பற்றியும் வாச்மேனைப் பற்றியும் யோசிக்கத் தொடங்கி விட்டாள்...

"பெரிய மனுஷா, அங்கே இரு, இது வியாசோவியி விருந்து வரும் வாத்தியாரம்மாள்...... நமக்குத் தெரிந்தவங்கதான். நல்ல அம்மா'' என்று பக்கத்து மேஜையில் யாரோ பேசுவது அவளுக்குக் கேட்டது.

"அவங்களுக்கு என்ன குறை?''

சிலர் உள்ளே வருவதும், சிலர் வெளியே போவதுமாக இருந்த படியால் கதவை ஓயாமல் மூடுவ தும் திறப்பதுமாக இருந்தார்கள். மார்யா வாஸில்யேவ்னா பிறகும் அங்கே உட்கார்ந்துகொண்டு, அந்தப் பழைய விஷயங்களைப் பற்றியே நினைத்த வண்ணமாக இருந்தாள். 'கன்ஸெர்ட்டினா' வாத்தியக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. அங்கே தரை யில் வெயில் விழுந்தது. உடனே அவர்கள் எழுந்து காசு கொடுக் கும் மேஜையருகே போய், அப்பு றம் சுவருக்கு அந்தப் புறமாக மறைந்துவிட்டார்கள். பத்தியா னம் கடந்துவிட்டது. வாஸில் யேவ்னாவுக்குப் பக்கமாகக் கிடந்த மேஜையருகே உட்கார்ந் திருந்த குடியான ஜனங்கள் எழுந்து செல்லுவதற்குச் சித்த மானார்கள். அந்த அம்மைத் தழும்புக்கார மனிதன் எழுந்து ஒரு நிலையாக நில்லாமல் குழைந்து நெளிந்து கொண்டு மார்யா வாஸில்யேவ்னாவிடம் போய் தன் கையை நீட்டி அவள் கையைப் பிடித்துக் குலுக்கினான். அவனைப் பின்பற்றி மற்றவர்களும் கையைக் குலுக்கிவிட்டு ஒருவ ருக்குப்பின் ஒருவராக வெளியே சென்றுவிட்டார்கள். கதவு கிறீச்சிட்டுக் கொண்டு ஒன்பது தடவை மூடி மூடித் திறந்தது.

"வாஸில்யேவ்னா, புறப்படு'' என்று சொன்னான் செம்யோன்.

இருவரும் புறப்பட்டார்கள். மறுபடியும் அவர்கள் பழைய நடையிலேயே போனார்கள்.

"சிறிது காலத்துக்கு முன்பாக இங்கே, இந்த நிஷ்னி கொரோடிஷில் அவர்கள் ஒரு பள்ளிக்கூடம் கட்டிக்கொண்டிருந்தார்கள். ரொம்பப் போக்கிரித்தனமான காரியம் அது" என்று திரும்பிப் பார்த்துக்கொண்டு சொன்னான் செம்யோன்.

"ஏன்? என்ன விஷயம்?"

"பிரசிடெண்டு ஒரு ஆயிரத்தைத் தம்முடைய பையிலே போட்டுக்கொண்டாராம். இன்னொரு ஆயிரத்தைப் பள்ளிக்கூட 'கார்டியன்' போட்டுக்கொண்டாராம். வாத்தியாருக்கு ஐந்நூறு. ஜனங்களெல்லாம் இதைப் பேசிக்கொள்ளுகிறார்கள்."

"பள்ளிக்கூடம் கட்ட மொத்தச் செலவு ஒரு ஆயிரம் தான் பிடித்தது. வீண் புகார் சொல்லுவது தப்பு, தாத்தா, அதெல்லாம் வெறும் பேச்சு" என்றாள் வாத்தியாரம்மாள்.

"எனக்குத் தெரியாது....... ஜனங்கள் பேசிக் கொள்வதைத் தான் உனக்குச் சொன்னேன்."

ஆனால் வாத்தியாரம்மாள் சொல்லியதில் செம்யோனுக்கு நம்பிக்கை கிடையாது என்பதில் சந்தேகமில்லை. குடியான ஜனங்களும் அவளை நம்புவதில்லை. அவள் நிறையச் சம்பளம் வாங்குகிறாள் என்றும், அது மாதத்துக்கு இருபத்தொரு ரூபிள் என்றும் (ஐந்து ரூபிள்களுக்கே உண்மையில் வழி இல்லை) பிள்ளைகளிட மிருந்து விறகுக்காகவும், வாச்மேனுக்காகவும் வசூல் செய்யும் பணத்தில் பெரும் பகுதியை அவள் தன் சொந்தத்துக்கு வைத்துக்கொள்ளுகிறாள் என்றும் அவர்களுடைய உறுதியான அபிப்பிராயம். 'கார்டிய' னின் எண்ணமும் இதுதான். ஆனால் விறகுப் பணத்தில் நல்ல லாபம் அடித்தது அவர்தான்; 'கார்டிய'னாக இருப்பதற்கென்று சொல்லி, அதிகாரிகளுக்குத் தெரியாமல் குடியான ஜனங்களிட மிருந்து பணமும் வாங்கினார்.

மரக் காட்டைக் கடவுள் செயலாகக் கடந்து வந்தாய்விட்டது. இனி வியாசோவி வரைக்கும் சமதளமான வெட்ட வெளிதான்; இனி அதிக தூரமும் இல்லை. ஆற்றையும், ரயில்வே லயனையும் கடந்துவிட்டால் வியாசோவி கண்ணுக்குத் தென்படும்.

"வண்டியை எங்கேவிடுகிறாய்? வலது பக்கமாகப் பாலத்தைப் பார்த்து விடு" என்றாள் மார்யா வாஸில்யேவ்னா.

"ஏன், இந்த வழியாகவே சுகமாகப்போகலாமே? அப்படி ஆழமொன்றுமில்லை இங்கே."

"குதிரையைக் கொண்டு போய் ஆழ்த்தி விடாதே."

"என்ன?"

மார்யா வாஸில்யேவ்னா வலது பக்கமாக தூரத்தில் செல்லும் நான்கு குதிரைகளையும் பார்த்து,

"அதோ, ஹானோவ் பாலத்தைப் பார்த்து வண்டியை விடுவதைப் பார். அது அவர்தான் என்று நினைக்கிறேன்" என்றாள்.

"அவர்தான்; அப்போ அவர் பாக்விஸ்த்தை அவன் வீட்டில் பார்க்கவில்லை போலிருக்கிறது! என்ன பிடிவாதக்கார மனுஷர் இவர்! அங்கே வண்டியை ஓட்டிக் கொண்டு போனாரே, எதற்கு? இந்த வழியாகப் போனால் இரண்டு மைல் பக்கம்."

ஆற்றுக்கு வந்துவிட்டார்கள். கோடை காலத்தில், அது சிறு ஓடையாகத்தான் இருக்கும். காலைத் துழாவிக்கொண்டே நடந்து இலேசாகக் கடந்து விடலாம். அது வழக்கம்போல் ஆகஸ்டு மாதத்தில் வற்றிவிடும். ஆனால் வசந்த காலம் வந்ததும் வெள்ளம் வந்து விட்டதால் ஆற்றின் அகலம் இப்போது நாற்பதடியாகிவிட்டது. தண்ணீர் கலங்கலாக வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது; 'ஜில்'லென்று மிருந்தது. வலது பக்கமாக உள்ள கரையில் தண்ணீரின் பக்கமாக அப்போதுதான் வண்டிகள் சென்ற தடம் தெரிந்தது. அதுதான் ஆற்றைக் கடக்கும் இடம்.

செம்யோன் கோபத்தோடும், ஆத்திரத்தோடும் கடிவாளங்களை இழுத்துப் பிடித்துக் கொண்டு பறவை சிறகுகளை ஆட்டுவதைப் போலத் தன் கைகளை அசைத்துக் கொண்டே. "ம்ம், போ, தை" என்று அதட்டி வண்டியை ஓட்டினன்.

குதிரை வயிற்று மட்டத்துக்குத் தண்ணீருக்குள் வந்து நின்றது. பழைய படியும் மூச்சைப் பிடித்துக்கொண்டு வண்டியை 'பளிச்'சென்று இழுத்தது. அப்போது மார்யா வாஸில்யேவ்னு தன் காலில் ஜில்லென்று தண்ணீர் படுவதை உணர்ந்தாள்.

அவளும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, 'போ, போ' என்று குதிரையை அதட்டினுள்.

வெளியே வந்து இருவரும் கரையேறி விட்டார்கள்.

செம்யோன் குதிரையின் சேணத்தை நேராகச் சரிப்படுத்திக் கொண்டு, "கடவுளே, கடவுளே! பீடைபிடித்த ஜில்லா இது......" என்று முணு முணுத்தான்.

வாத்தியாரம்மாளின் பூட்சுகளில் தண்ணீர் நிரம்பிவிட்டது. அவள் உடை, கோட் முதலியவற்றின் கீழ்ப் பாகமும் சட்டையின் ஒரு கையும் நனைந்து தண்ணீர் சொட்டிக்கொண் டிருந்தது. சர்க்கரையும் மாவும் நனைந்து விட்டதுதான் மிகவும் சங்கடமான விஷயம். மார்யா வாஸில்யேவ்னு ஒன்றும் தோன்ருமல் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு, "ஐயோ, செம்யோன் எப்படிக் களைத்துப் போய்விட்டாய், நீ! உண்மையாகத்தான்! ......" என்ருள்.

இனி 'ரயில்வே கிராஸிங்'கை (சாலையும் ரயில்வே தண்டவாளங்களும் சந்திக்கும் இடம்) கடக்க வேண்டும். அப்போது ஸ்டேஷனி லிருந்து ஒரு ரயில் வண்டி புறப்பட்டு வந்துகொண்டிருந்தது. வண்டி கடந்து செல்லும் வரைக்கும், மார்யா வாஸில்யேவ்னு குளிரில் நடுங்கிக் கொண்டே தண்டவாளங்களின் ஓரத்தில் நின்றுகொண் டிருந்தாள். வியாசோவியின் தோற்றம் இப்போது கண்ணில்பட்டது. பச்சை நிறக் கூரையுடன் உள்ள பள்ளிக்கூடம், மாதாகோவில், மாலை வெயிலில் பளபளக்கும் அதன் சிலுவைகள் முதலியவை தெரிந்தன. ஸ்டேஷன் ஜன்னல்களும் கூடப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. எஞ்ஜினிலிருந்து இளஞ் சிவப்பான புகை வந்துகொண் டிருந்தது........எல்லாமே குளிரில் நடுங்கிக்கொண் டிருப்பதாக வாத்தியாரம்மாளுக்குப் பட்டது.

ரயில் வந்து விட்டது; மாதா கோவில் சிலுவைகளைப் போல ஜன்னல்களெல்லாம் ஒளியைப் பிரதிபலித்தன. இதைப் பார்க்க அவளுடைய கண்கள் கூசின.

இரண்டு முதல் வகுப்புப் பெட்டிகளின் நடுவேயுள்ள ஒரு பலகையில் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். ரயிலில் அவள் போகும்போது அவளை மார்யா வாஸில்யேவ்னு ஓர் ஓரமாகப் பார்த்துக் கொண்டாள். அவளுடைய தாயாரைப்போல இருந்தாள் அந்தப் பெண். என்ன ஒற்றுமை! அவள் தாயாருக்கும் இதே மாதிரிப் பளப்பளப்பான நீண்ட கூந்தல்தான். இதே மாதிரி நெற்றி, இதே மாதிரி தலையின் வளைவு. பதின்மூன்று வருஷங்களுக்குப் பிறகு முதன் முதலாக அவள் உள்ளத்தில் அவளுடைய தாயார், தகப்பனர், சகோதரன் முதலியவர்களோடு மாஸ்கோவில் உள்ள அவர்கள் மேல் மெத்தை, சிறு மீன்கள் நிறைந்த மீன் காட்சிச் சாலை ஆகியவைகளும் சேர்ந்த ஒரு தெளிவான சித்திரம் சிறு சிறு விஷயங்கள் உட்பட தலாம்பரமாய்க் காட்சி யளித்தது; பியானோ வாத்தியத்தின் ஒலியும், அவள் தந்தையின் குரலும் அவளுக்குக் கேட்டன. முன்னல் வெளிச்சமான ஓர் அறையில், தன் சொந்த ஜனங்களுக்கு நடுவே, நன்ருக உடுத்திக்கொண்டு, வாலிபமும் அழகும் நிறைந்திருந்தது போல இப்போதும் இருப்பதாக அவளுக்குப்பட்டது. திடீரென்று அவள் உள்ளத்தில் பேரானந்தம் பொங்கிவிட்டது. மிகவும் விச்ராந்தியுடன் கைகளால் கன்னங்களை அழுத்திக் கொண்டு, மிகுந்த வேண்டுதல் நிறைந்த மிருதுவான குரலில், "அம்மா!" என்று கூப்பிட்டாள்.

அவள் அழத் தொடங்கிவிட்டாள். எதற்காக அழ வேண்டுமென்று அவளுக்குத் தெரியவில்லை. அதே சமயத்தில் ஹானேவின் வண்டி அங்கு வந்துவிட்டது. அவளைப் பார்த்ததும், என்றுமே அனுபவித்தறியாத சந்தோஷத்தை அவள் கற்பனை பண்ணிப் பார்த்தாள். அவனைத் தனக்குச் சமானமானவனைப் போலவும் சிநேகிதனைப் போலவும் பாவித்து அவனைப் பார்த்துப் புன்னகை செய்து தலையை ஆட்டினுள். வானத்திலும், நாலா பக்கங்களிலும், ஜன்னல்கள், மரங்கள் முதலியவற்றின் மேலும் அவளுடைய சந்தோஷமும் வெற்றியும் மின்னிடுவதைப் போலஅவளுக்குத் தோன்றியது. அவளுடைய தாய் தந்தையர் ஒருவரும் சாகவில்லை என்றும் அவள் வாத்திச்சி யல்லவென்றும் அவளுக்குப் பட்டது. அந்தப் பழைய கதை ஒரு மோசமான கனவு. இப்போது அவள் கண் விழித்துவிட்டாள்.........

"வாஸில்யேவ்னு, வண்டியில் ஏறு."

எல்லாம் பளிச்சென்று மறைந்துவிட்டது. 'கிராஸிங்'கின் கதவு மெதுவாகத் திறந்தது. குளிரில் நடுங்கி விறைத்துப் போயிருந்த மார்யா வாஸில்யேவ்னு வண்டியில் ஏறிக்கொண்டாள். நாலு குதிரைகள் மாட்டிய அந்த வண்டி தண்டவாளங்களைக் கடந்து சென்றது. அதைப் பின் தொடர்ந்து செம்யோன் வண்டி சென்றது. அங்கே நின்ற 'ஸிக்னல் மேன்' (கிராஸிங்கைக் கவனித்துக் கொள்ளுபவன்) தன் தொப்பியை எடுத்து மரியாதை செய்தான்.

"இதோ வியாசோவி. வியாசோவிக்கு வந்துவிட்டோம்."

✻

கடிகாரம் ரயிலைவிட

வேகமாகச் செல்கிறது என்று
உங்களுக்குத் தெரியுமா?



ஆச்சரியமாகத்தான் தோன்றும் கடிகாரத்தின் பாலன்ஸ் வில் நீராவி இயந்திர சக்கரங்களைப் போலவே மணிக்கு அறுபது மைல் வேகத்தில் ஒடுகிறது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பாலன்ஸ் விலின் உழைப்பே அதிகமானது. நீராவி இயந்திர வண்டியைப் போலல்லாமல், கடிகாரம் பிரதி தினம் இருபத்தி நான்கு மணி நேரமும் விடாமல் தொடர்ந்து அவ்வப்பொழுது எண்ணெய் போட்டும் சுத்தம் செய்வது தவிர வேறெவ்வித கவனிப்புமின்றி வாரம் மாதம் வருஷக் கணக்கில் உழைக்கிறது. கடிகாரத்தைப்போல் வேறெந்த இயந்திரமும் இடைவிடாமல் நீடித்து உழைப்பதில்லை.



ஸில்விடார் ரிஸ்ட்
(கிரிஸ்டல் ஷேப்)
நிக்கல் ஸில்வர் கேஸ் ரூ. 62.

ஆகையால் பிரசித்தியடைந்த ஒரு ஸ்தாபனத்திடமிருந்து அவ்விதக் கருவி ஒன்றை வாங்குவது விவேகமானதே, 'வெஸ்ட் எண்ட் வாச் கோ' என்ற பெயரைத் தாங்கும் கடிகாரத்தை வைத்திருக்க உங்களுக்கும் நம்பிக்கைதான். அபரிமிதமான தேவைகளினாலும் மற்றும் போதுமான சரக்குகள் இல்லாததினாலும் விளம்பரம் செய்யப்படும் ஒவ்வொரு கடிகாரமும் சப்ளை செய்ய நாங்கள் வாக்குறுதி அளிக்க முடியாமலிருந்தாலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எங்களால் இயன்றதைச் செய்கிறோம் என்பதை வாடிக்கையாளர்களும் உணர்வார்கள்.

வெஸ்ட் எண்ட் வாச் கம்பெனி, பம்பாய் & கல்கத்தா.

WEST END WATCH Co.

BOMBAY **CALCUTTA**

காலையில் குதூகலத்துடன் எழுந்திருங்கள்

காலை நேரத்தில் குதூகலமாயிருப்பது சாத்தியமே. இரவில் படுக்கச் செல்லுமுன் "மில்க் ஆப் மெக்னீஷியா" உட்கொண்டால் புளியேப்பம், அஜீரணம், அமிதமாக ஆகாரம், பானங்கள் உட்கொண்டதால் ஏற்படும் உபாதைகளைநீக்கி நல்ல தூக்கம் அளிப்பதுடன் விரைவில் சுகம் உண்டாகிறது. நீங்கள் நன்ருகத் தூங்குகிறீர்கள். தூங்கும்பொழுது "பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னீஷியா" உபாதைகளைப் போக்கி, மலத்தை நளினமாகவும் பூரணமாகவும் இளக்குகிறது. ஆதலால் மறுநாள் காலையில் சுறுசுறுப்பாகவும், குதூகலமாகவு மிருக்கிறது.

Remember...

PHILLIPS

"MILK OF MAGNESIA"

Tonight!

LIQUID or TABLETS

No. 2

எண்ணெய் ஊற்று

★

'விஞ்ஞானி'

விஞ்ஞானம் இவ்வளவு தூரம் முன்னேற்றமடையாமல், குழந்தைப் பருவத்தில் இருந்த காலத்தில் மண்ணெண்ணெய் உற்பத்தியாகும் இடங்களைக் கண்டுபிடிப்பது மிகச் சிரமமான காரியமாக இருந்தது. இதைப் பற்றிச் சில வேடிக்கைக் கதைகள் கூட வழங்கி வருகின்றன. தங்கச் சுரங்கம் ஒன்று வெட்டுவதற்காக ஒருவர் முற்பட்டாராம். எங்கே வெட்டினால் தங்கம் கிடைக்கும் என்ற பிரச்னை எழுந்தது. தம்முடைய தொப்பியை ஆகாயத்தில் வீசி எறிந்தாராம்; தொப்பி மீண்டும் தரையில் விழுந்த இடத்தில் வெட்ட ஆரம்பித்தாராம். இம் மாதிரிக் கதைகளெல்லாம், முன் காலத்தில் விஞ்ஞான உதவியில்லாமல் மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பதைத் தெளிவாக்குகின்றன. இன்று எண்ணெய்க் கிணறுகள் வெட்டுவதற்கு விஞ்ஞானம் சுலபமான வழியைக் காட்டியிருக்கிறது.

எண்ணெய்க் கிணறு ஒன்று வெட்டுவது கஷ்டமான காரியமாகும். பல துறையில் தேர்ந்த விஞ்ஞானிகள் கூடி முடிவுக்கு வந்த பிறகுதான் அந்த வேலையைத் தொடங்குகிறார்கள். எண்ணெய் கிடைக்கும் என்று நம்பப்படுகிற இடங்களை ஆகாய விமானத்திலிருந்து படம் பிடிக்கிறார்கள். அந்தப் புகைப் படங்களை வைத்துக்கொண்டே நிலத்தின் தன்மையையும், எண்ணெய் ஊறக்கூடிய இடம்தானா என்பதையும், எண்ணெய்க் குழாய்களைப் பூமிக்குள் இறக்கி தொழிற்சாலைகள் கட்ட முடியுமா என்பதையும் ஆராய்கின்றனர். அவ்விடங்கள் தகுதியானவை என்று கருதினால்தான் விஞ்ஞானிகள் முயற்சி எடுத்துக் கொள்ளுகின்றனர். பெரும்பாலும் விஞ்ஞானிகள் பின்வரும் மூன்றைத் தான் கவனிக்கிறார்கள். நிலப் பரப்பின் தன்மையும், கற்பாங்கான இடங்களில் கற்பாறைகள் எண்ணெய் கசியும் தன்மையனவா, கசியும் எண்ணெய் தேங்கி நிற்க இடமுண்டா என்பனவும்தான் அம் மூன்றும்.

எண்ணெய் ஊறும் தளம் பல்லாயிரக் கணக்கான வருஷங்களுக்குப் முன் சமுத்திரத்தின் கீழ்த் தளமாக இருந்திருக்க வேண்டும். அக்காலத்தில் வசித்த பிராணிகளின் எஞ்சிய மிச்சப் பொருள்களிலிருந்துதான் எண்ணெய் வடிகிறது. வடிகிற எண்

எந்த இடத்தில் கிணறு வெட்டினால் நிறையத்தண்ணீர் ஊறும்என்பதை அறிந்துகொள்ள, தமிழ் நாட்டில் ஜோஸியர்களிடம் போய்க் கேட்கிறார்கள். ஆனால், எண்ணெய்க் கிணறுகளைக் கண்டுபிடிக்க இப்போது என்ன உபாயத்தைக் கையாளுகிறார்கள் என்பதை அறிவிக்கிறது இக் கட்டுரை. கரோனெட் டிலிருந்து.

ணெய் தேங்கி நிற்க, தக்க வசதி இருக்கிறது. மேலும் தேங்கி நிற்கும எண்ணெய் ஆவியாக மாறி விடாமலும் இயற்கைச் சாதனம் கவனித்துக் கொள்ளுகிறது.

மேற்சொன்ன விஷயங்களை ஆராயும் பொறுப்பு, பூதத்துவ சாஸ்திரிகளைச் சேர்ந்தது. பிறகு அங்குள்ள பூமியின் ஆகர்ஷண சக்தியைக் கணக்கிட்டுச்சொல்லு கிறார் பௌதிக சாஸ்திர நிபுணர். பூமியில் படிந்துள்ள பழம் பொருள்களின் தன்மைகளை விரித்துரைக்கிறார், பழம்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர். இந்த ஆராய்ச்சிக ளெல்லாம் திருப்திகரமாக முடிந்த பிறகு தான் சுரங்கம் வெட்டும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

எண்ணெய்க் கிணறுகள் வெட்டுவதில்கூட இக் காலத்தில் நாகரிக விஞ்ஞான இயந்திரங்களை உபயோகிக்கின்றனர். முன் பெல்லாம் ஒரே இடத்தில்நெருக்க மாகப் பல கிணறுகள் வெட்டி விடுவார்கள். அவை பார்ப்பதற்கு விகாரமாக இருக்கும்; தரை மட்டமும் வீணாகும். இப்பொழுது தெல்லாம் விசால மாக ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் இடையே நிறைய இடம்விட்டு வெட்டு கிறார்கள். அதுவும் கிணறுகள் இருக்கிறஇடமகூடத்தெரியாமல் ஒரே ஒரு எண்ணெய்க் குழாய் மாத்திரம் வெளியே தெரியும். நீண்ட இரும்புக் குழாய்களைப் பூமியினுள் செலுத்துகின்றனர். அந்தக் குழாய்களின் வழியாக எண்ணெய் உறிஞ்சப்பட்டு மேலே கொண்டுவரப் படுகிறது. குழாய்களைக் கீழே செலுத்த நவீன இயந்திர சாதனங்கள் உள்ளன.

முன்பெல்லாம் குழாயைப் பூமிக்குள் செலுத்தியவுடன், அங்கிருந்து எண்ணெய் குழாயின் வழியாகப் பீச்சடிக்கும். இந்த முறை பார்ப்பதற்கு நன்றாக இருக்கும்; ஆனால், எண்ணெய் வீணாகச் சிந்திப் போகும். ஆகவே இந்தப் பழைய முறை இன்று கைவிடப் பட்டுவிட்டது.

✱

அபூர்வச் செய்திகள்

ஒரு காலத்திலே, பிரான்ஸ் தேசத்தில் ஒவ்வொரு விருந்து மேஜையிலும் ஒரு தர்ம பாத்திரம் இருக்கும். வந்த விருந்தினர்கள் சாப்பாட்டில் ஒரு பகுதியை ஒதுக்கி அந்தப் பாத்திரத்தில் கொண்டுபோய்ப் போடுவார்கள். பிறகு அது ஏழைகளுக்குத் தானம் செய்யப்படும்.

* * *

சீனாவில் பணக்காரர்கள் வீட்டில் ஒரு அதிசய வழக்கம் உண்டு. அதாவது மாமிசம் சாப்பிடும் விருந்தினர்கள் எலும்புகளை வேண்டுமென்றே தரை முழுவதும் சிதறி வைத்தால்தான் வீட்டுக்காரனை மரியாதை பண்ணியதாக அர்த்தமாம்! அப்படிச் செய்வதன் மூலம், எலும்புகளை அப்புறப் படுத்த வீட்டுக்காரரிடம் ஏராளமான வேலைக்காரர்கள் இருக்கிறார்கள் என்ற விபரத்தை விருந்தினர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை வீட்டுக்காரருக்குக் காண்பிக்கலாம் அல்லவா?

தத்துவம்

வி. சக்கரை செட்டியார்

சாக்கிரடீஸ்—பிளேட்டோ *

'கிரேக்கநாடு மகிமையின் சொரூபம்' என்றான் ஒரு சிறந்த ஆங்கிலக் கவிஞன். இக் காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தின் தென் கிழக்குத் திசையில் இருக்கும் இந் நாடு பண்டைக் காலத்துப் பேராண்மையையும் அறிவையும் இழந்து கிடக்கிறது. இந் நாட்டிலிருந்தே பூர்வத்தில் தத்துவ ஞானமும் இயற்கைச் சுலேஞான மும் வெளிப்போந்து பரவிற்று. தற்காலத்தில் மேல் நாட்டார் அடைந்துள்ள நாகரிகம் என்று சொல்லப்படும் நிலைமையும், தத்துவ அறிவும், விஞ்ஞான சாஸ்திரத்தின் மூலமும, கிரேக்கப் புலவர்கள், அறிவாளிகள், ஆராய்ச்சியாளர்கள் மூலமும், கிறிஸ்தவ சகாப்தத்திற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் படைத்த செல்வத்தின் பயனாகும். இவை என்றும் வற்றாத ஊற்றாகும். புலவர்கள் கூறும் வண்ணம், மேல் நாட்டு நாகரிகம் மூவகைக் கயிறுகளால் ஆக்கப் பெற்றது. கிரேக்க, ரோம, எபிரேய மக்களின் முயற்சியின் பயனாக ஏற்பட்ட அறிவை, —இக, பர அறிவை—அடிப்படையாகக் கொண்டு ஐரோப்பிய நாகரிகம் பிரிக்கப் பட்டுள்ளது. இக் காலத்திலும்-இவ்விருபதாம் நூற்றாண்டிலும்- மேல் நாட்டு ஞானிகள் பிளேட்டோவின் நூல்களை ஆராய்ந்து வருகிறார்கள். இந் நூல்களில் காணக் கிடக்கும் அரிய பெரிய உண்மைகளைக் கொண்டு தற்கால விஞ்ஞான சாஸ்திரத்துக்கு ஆக்கம் தேடுகிறார்கள்; சாயமும் ஏற்றுகிறார்கள். இதுவுமன்றி, கிரேக்க நாட்டின் புலமை வாய்ந்த வரம் பெற்ற கவிகளின் காவியங்களும், செய்யுட்களும், நாடகங்களும், சரித்திர வரலாறுகளும் இன்னும் மேனாட்டுப் புலவர்களால் பாராட்டப்பெற்று அதிகக் கவனத்தோடும் உற்சாகததோடும் கற்கப்பட்டு வருகின்றன. அவை கல்லூரிகளிலும் முக்கிய பாடங்களாக வைக்கப்பட்டு வருகின்றன. ஓமரின் "இலியட்"டையும் "ஓடிசி"யையும் மாணவர்கள் அறிந்துள்ளார்கள். குறைந்த பட்சம் இக் காவியங்களின் பெயரை அறியாத படித்தவர்களைக் காண்பது அரிது.

மேல் நாட்டு நாகரிகம் இன்ன தன்மையது என்று அறிவதற்கு மாத்திரம் அன்று, நம்முடைய பண்டைக் காலததுத் தத்துவ ஞானத்தை ஒத்து அறிவதற்கும், இக் கால ஓட்டத்திற்கு இணங்கத் தத்துவ ஞானத்தை வளர்ப்பதற்கும், கிரேக்க நாட்டுப் பழைய ஞானம் உதவிபுரியும்.

சக்தியில் தொடர்ந்து தத்துவ சாஸ்திரக் கட்டுரைகளை ஸ்ரீ வி. சக்கரை செட்டியார் எழுதி வருவார். அந்த வரிசையில் இது முதல் கட்டுரை. சாக்கிரடீஸ் காலத்தின் தத்துவத்திலிருந்து ஆராய்ச்சி தொடங்குகிறது. ஸ்ரீ வி. சக்கரை செட்டியார் இன்று சென்னை மாகாணத் தொழிற்சங்க காங்கிரஸின் தலைவராக உள்ள முது பெருங்கிழவர்; சென்னை நகரின் மேயராகவும் இருந்திருக்கிறார். கடந்த 30 வருஷ காலமாகப் பொதுசேவையில் ஈடுபட்டவர். அவருடைய அறிவு மேம்பாட்டுக்குரிய இந்தத் தத்துவ ஆராய்ச்சியை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

* Socrates, Plato

இதை யாரும் மறுக்க முன்வர மாட்டார்கள் என்பது திண்ணம். இதுவுமன்றி, பண்டைக் காலத்தில் நமது நாட்டிற்கும் மேல் திசை நாடாகிய கிரேக்க நாட்டிற்கும் போக்குவரத்து இருந்து வந்தது. அதன் வாயிலாக நம்முடைய நாட்டு ஞானமும் அங்கே பரவி யிருக்க வேண்டும். பித்தகோராஸ்* என்ற பேர் பெற்ற ஞானி, கணித சாஸ்திரி, நம்முடைய நாட்டிற்கு வந்து, நம் நாட்டு ஞானிகளோடு அளவளாவிச் சென்றார் என்ற வரலாற்றை சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இது உண்மை என்று பண்டிதர்கள் மேல் நாட்டிலும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். சென்ற நூற்றாண்டிலும் கூட மேல் நாட்டின் சிறந்த தத்துவ சாஸ்திரியாகிய ஷாபன்ஒகர் † இந்நாட்டு சாஸ்திர ஞானத்திற்குத் தாம் பெரிதும் கடன் பட்டிருப்பதாகச் சொல்லி யிருக்கிறார். ஆங்கில நாட்டின் பேர் பெற்ற விஞ்ஞானி அக்ஸ்லி (Huxley) சமீபத்தில் கீதைக்கு ஒரு முகவுரையும் எழுதி, அக் கீதையில் சொல்லி யிருக்கும் நிஷ்காம கர்மத்தின் உண்மையை விளக்கி காட்டி யிருக்கிறார். இவ் வுண்மைகளை நோக்குமிடத்து நம் நாட்டு ஞானத்தை உண்மையில் அறிந்து நாம் அதைப் பரவச் செய்வதில் முன்வர வேண்டும். அதற்கு மூல பலமாகவிருக்க கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானத்தை அறிய வேண்டியது இன்றியமையாத காரியமாகும். எனவே, அந் நாட்டின் பேர்பெற்ற புகழையே ஆரமாக அணிந்த சாக்கிரடீஸ்-பிளேட்டோ ஆகியவர்களின் சரித்திரத்தையும் அவர்களின் தத்துவ ஞானக் கொள்கைகளையும் அதிக அடக்கமாக வரைகிறேன். இவ் வியாசம் எல்லோருக்கும் விளங்கும் பொருட்டு எளிய தெளிவான நடையில் எழுதுகிறேன். தத்துவ மறிந்தவர்களுக்கு மாத்திரமன்று-சாதாரண மக்களும் அதிகப் பிரயாசையின்றி அறிந்து கொள்வார்களென்று நினைக்கிறேன். அம்மாதிரியாகத்தான் சொற்ப அறிவாளிகளும் அறிந்துகொள்ள அழகிய நடையில் சாதாரண உவமானங்களைக் கொண்டு பிளேட்டோ எழுதி யுள்ளார்.

பிளேட்டோவின் மூலப் பொருளை அறிய வேண்டுமானால், அவருடைய வரலாற்றையும் சிறிது அறிய வேண்டும். தத்துவ ஞானிகள் மூலையில் உட்கார்ந்து மூக்கைப் பிடித்துக்கொண்டே ஞானம் அடைந்தார்கள் என்று சொல்லுவது முழுவதும் தவறென்றே சொல்ல வேண்டும்; உலக விஷயங்களில் தலை கொடுக்காமல் காலத்தைப் போக்கினார்கள் என்று பழி கூறுவது முற்றிலும் தவறு என்றே பிளேட்டோவின் ஜீவிய சரித்திரத்தினால் அறியலாம். அவருடைய தத்துவக் கொள்கைகளும் அவருடைய அனுபவத்தின் பயனாக ஆக்கப்பட்டுள்ளன. அவர் வரலாற்றைச் சிறிது அறியாமல் போனால் அவர்

---

* பித்தகோராஸ் (Pythagoras): மறுஜென்ம தத்துவத்தைப் பிரசித்தம் செய்த கிரேக்க தத்துவ ஞானி; க்ஷேத்திர கணிதத்திலும் வான சாஸ்திரத்திலும் வல்லவர். இவர் காலம்: கி. மு. 582 — 500

† ஷாபன்ஒகர் (Schopenhaur): ஆர்தர் ஷாபன்ஒகர் என்பவர் ஜெர்மன் தேசத்துத் தத்துவஞானி. டான்ஸிக் நகரில், டச்சு வம்சத்தில் பிறந்தவர். இந்திய தத்துவத்தை அனுசரித்தவை இவருடைய தத்துவ முடிவுகள். இவர் காலம்: 1788—1860.

—ஆசிரியர், சக்தி

கொள்கைகளை அறிய இயலாது. அவரது சரித்திரத்தையும் அவருடைய குருநாதரின் சரித்திரத்தையும் அதிகச் சுருக்கமாகச் சொல்லுவது அவசியம்.

கிரேக்க நாட்டின் சரித்திரத்தை அறிந்தால் அதில் ஒரு முக்கியமான அம்சத்தைக் காணலாம். அந் நாடு பல பகுதிகளாகப் பிரிந்திருந்தது. பட்டணங்களே சர்க்கார்களாக ஆண்டுகொண்டு வந்தன. பெரியதோர் ராஜ்யம் அங்கு கிடையாது. இந்த நகர அரசாங்கங்களுக்குள்ளே ஆதன்ஸ் (Athens) நகரம் முதல் இடத்தைப் பெற்றது. இந்த நகரத்துக்கும் ஸ்பார்ட்டா (Sparta) நகரத்துக்கும் போட்டியும் போரும் நடந்துகொண்டுவந்தன. சாக்கிரடீஸ்-பிளேட்டோவின் காலத்தில் இரு நகரங்களுக்கும் இடையில் கடுமையான போர் நடந்தது. கடைசியாக ஆதன்ஸ் நகரம் தோல்வி யடைந்தது. இது மாத்திரமன்று. வெகு சீக்கிரத்தில் கிரேக்க நாடு அன்னியர் ஆட்சிக்குள்ளாயிற்று. எனினும், ஆதன்ஸின் தத்துவ ஞானமும் இலக்கிய விருத்தியும் எங்கும் பரவி, தன்னை மேற்கொண்டவர்களின் மனத்தையும் கொள்ளைகொண்டன. அநேக நூற்றாண்டுகள் வரையில் ஆதன்ஸ் நகரம் பேர்பெற்ற சகல கலாசாலையாக விளங்கிற்று. வெற்றி யடைந்த ரோம மக்களும் அங்குசென்று தத்துவத்தையும் இலக்கியக் கல்வியையும் கற்றார்கள். இன்னும் கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் இரண்டு நூற்றாண்டுகளிலும் கிரேக்கதத்துவம், முக்கியமாக பிளேட்டோவின் தத்துவம், கிறிஸ்தவ சமய வேதாந்திகளால் கொண்டாடப் பெற்றது; கிறிஸ்தவ சமயமே ஒரு தத்துவ ரூபம் கொள்ள உதவியது என்று சொன்னால்மிகையாகாது. இதனால் கிறிஸ்தவம் கெட்டுவிட்டது என்றும் சிலர் கூறுகிறார்கள்; இல்லை, அது பலப்பட்டது என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். இது எப்படியாயினும், பிளேட்டோவின் தத்துவத்தின் ஆதிக்கம் பல துறைகளில் புகுந்து, அரசியல் வாதிகளையும், * சிசிரோ போன்றவர்களையும், கிறிஸ்தவ சமய ஞானிகளையும் தன் வயமாக்கிற்று.

பிளேட்டோவின் சிறந்த ஆசிரியர் அல்லது குரு, சாக்கிரடீஸ் (கி. மு. 469—399) பிளேட்டோவின் மூலமாகத்தான் அவர் குருவின் முக்கிய கோட்பாடுகள் நமக்குக் கிடைக்கின்றன. சாக்கிரடீஸ் பரம ஞானி யென்பதில் சந்தேகமே யில்லை. அக்காலத்தில் தீர்க்க தரிசனம் சொன்ன டெல்பிக் கோயிலின் வாக்கும் இவரே பரம ஞானி என்று கூறிற்று. அதற்குக் காரணம் விநோதமாயிருக்கிறது. தன்னை ஒன்றும அறியாதவன் என்று, தான் அறிந்திருக்கிறதனால், அவரே எல்லாரினும் மேம்பட்ட ஞானி என்று தீர்க்க தரிசனம் உரைத்தது. சாக்கிரடீஸ் முகத்தில் ஒரு அழகுமில்லை; பார்வைக்கு அவலக்ஷணமானவர். எனினும், அவரை அறிந்தவர்கள் அவருடைய ஆத்மா மகா உன்னதமான அழகு பொருந்திய நவமணி ஆரமே என்று அவருக்குப் பணிந்தார்கள். இவர் ஆதன்ஸ் நகரின் பல

---

* சிசிரோ (Cicero): ரோம் நாட்டின் தலைசிறந்த சொற்பொழிவாளர்; அரசியல் அறிஞரும்கூட. இவருடைய காலம்: கி. மு. 106—43.

போர்களில் கலந்து போர்க்களத்தில் வெகு வீரத்தோடு நடந்து கொண்டார்; தோல்வியையும் சமாளித்து, பெரும் புகழ் பெற்ருர். அக்காலத்தில் ஆதன்ஸ், பொது மக்களால், அதாவது பொதுஜனக் கூட்டத்தின் மூலம், ஆண்டு வரப்பட்டது. அம் மக்கள் சிலரைத் தங்கள் அதிகாரிகளாகத் தேர்ந்து எடுப்பார்கள். இவ் வதிகாரிகள் தங்கள் சுய நலத்தின் பொருட்டும், நகரப் பாதுகாப்பின் பொருட்டும் பல அக்கிரமங்களைச் செய்தார்கள். அவைகளுக்கு சாக்கிரடீஸ் உடன்படாமல் கண்டித்தும் எதிர்த்தும் வந்ததினல் அதிகாரிகள் அவரை அழிக்க முயன்ருர்கள். அவருடைய எதிரிகளில் மூவர் அவர் மேல் குற்றஞ் சாட்டி நீதி மன்றத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவர் தம்முடைய சம்வாதத்தினல் இளைஞர்களை மயக்கிவிட்டார்; சந்தேகத்திற்குள் ளாக்கினர்; அவர்களுடைய தெய்வங்களைப் புறக்கணித்தார்; அவர்களுடைய சாதாரணப் பழக்க வழக்கங்கள் அனைத்தையும் தாக்கிப் புரட்சியைக் கிளப்பிவிட்டார். நீதி மன்றத்தில் அஞ்சா நெஞ்சத்தோடு தம்முடைய தத்துவத்தை மெய்யென்று நிருபித்தார். ஆனலும் நியாயாதிபதிகளில் பெரும்பாலோர் அவரைக் குற்றவாளி யென்று கூறி மரண தண்டனை விதித்தார்கள். அவர் பேசிய தற்காப்பு வாதத்தை பிளேட்டோ எழுதிய ஆபாலஜி (Apology) என்ற நூலில் காணலாம். அவர் ஒன்றுக்கும் பயப்படாமல் சிறையிலே தம்முடைய மாணவர்களோடு சம்பாஷித்து—ஆத்மா சாகாத பொருள் என்றும், தாம் மரித்தபின், மரணத்திற்கு அப்பால் இருக்கும் பரம தெய்விக லோகத்திற்குள் பிரவேசிக்கப் போவதாகவும் கூறித் தம் நம்பிக்கையையும் விளக்கி, நஞ்சு கலந்த ரசத்தைக் குடித்து, இத் தேகத்தைத் துறந்து பரம கதியில் சேர்ந்தார். இம் மரணம் உலக சரித்திரத்தில் பேர் பெற்றது. இது ஜனநாயக ஆட்சியின் கொடுமையைக் காட்டுகின்றது. இவ் வாட்சியே பல அக்கிரமங்களைச் செய்யக் கூடும் என்று அநேகர் இன்றும் கூறி வருகிருர்கள். பொதுஜனப் பாதுகாப்பு என்று சொல்லிப் பொது ஜனத் தலைவர்கள் பல அட்டூழியங்களைச் செய்யத் துணிவார்கள் என்பது இந்த அநியாய மரணத்தினல் நிரூபணமாயிற்று. இம் மரணத்தைப் பார்த்த, தம் குருவின் மரணத்தைப் பார்த்த, பிளேட்டோ, ஜனநாயக ஆட்சியைப் பகைக்கலானர். இவர் எழுதிய பேர்போன 'குடியரசு' (The Republic) என்னும் நூலில் தம்முடைய இந்தக் கொள்கையை வற்புறுத்தி உண்மையான தத்துவ ஞானிகளே அரசாள வேண்டும் என்கிருர். இதைப் பற்றிப் பின்னல் கூறப்படும்.

பிளேட்டோ தம் பரம ஆசிரியரின் மரணத்திற்குப் பிறகு பல நாடுகளுக்குச் சென்று அநேக சாஸ்திரங்களையும் முக்கியமாக கணித சாஸ்திரத்தையும், க்ஷேத்திர கணித சாஸ்திரத்தையும் ஆராய்ந்து அறியலானர். பின் தம் சொந்த நகரத்துக்கு வந்து அங்கே ஆகாடமி என்று பேர் போன கல்லூரியை அமைத்தார். இந்த ஆகாடமி என்ற சொல்லிலிருந்துதான் ஆங்கிலத்தில் ஆக்காடமி (Academy) என்ற சொல்லும் வந்திருக்கிறது. இவர் காலத்திற்கு முன்பு வாழ்ந்த

பெரிகிளீஸ் * என்னும் பெரிய அரசியல் தலைவர், தம் பட்டணம் (ஆதன்ஸ்) ஞானத்திற்கும் கல்விக்கும் சுதந்திர ஆராய்ச்சிக்கும் முதன்மை ஸ்தானம் பெற வேண்டுமென்று விரும்பினர், அவருக்குப் பின் வந்த பிற்போக்காளர்கள், இச் சுதந்திரத்தை அழித்து, பெரிய படிப்பாளிகளை யெல்லாம் கொலை செய்தார்கள். பிளேட்டோவின் உறவின முறையார் பலர் மரண தண்டனைக்குள்ளாகி மடிந்தார்கள். இவற்றை யெல்லாம் கண்ட பிளேட்டோவின் மனம் முறிந்தது. ஆனாலும் அவருடைய கீர்த்தி பலநாடுகளிலும் மணக்கத் தொடங்கவே, சிசிலியென்னும் தீவின் அரசன் தன்னாட்டுக்கு வந்து நல்ல அரசியல் முறையை ஸ்தாபிக்க வேண்டுமென்று அழைத்ததின்பேரில் பிளேட்டோ அங்கு சென்றார். சென்று பாடுபட்டும், ஒன்றும் சாதிக்க முடியாமல் தம் நாட்டுக்கே திரும்பினர். பிளேட்டோ சிசிலித் தீவின் இளவரசனுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்தார். அவனோ வேடிக்கை விளையாட்டில் மூழ்கியவன். எனவே, பிளேட்டோ தம் முயற்சி பலிக்கவில்லை யென்று திரும்பிவிட்டார்.

பிளேட்டோ (கி. மு. 429-347) வின் தத்துவக் கொள்கைகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவேண்டும். இவ்வாசிரியர் எழுதிய நூல்கள் சம்பாஷணை ரூபமாக உள்ளவை. ஒரு இடத்தில் பல நண்பர்கள் கூடி சம்வாதஞ் செய்வார்கள். இக் கூட்டத்தில் சாக்கிரடீஸே நடுநாயகமா யிருந்து தம்மைச் சுற்றிலுமுள்ளவர்களிடத்தில் பல கேள்விகளைக் கேட்டு, அவர்களின் விடைகளைக் குறுக்கு விசாரணையினால் அலசிக் கடைசியாகத் தம் அபிப்பிராயத்தை உணர்த்துவார். அதை சாக்கிரட்டிக் முறையென்று சொல்லுவதுண்டு. இச் சம்பாஷணைகள் நாடக ரூபமாக இருக்கின்றன; ஐரானி (Irony) என்று சொல்லப்பட்ட விகடாலங்காரத்தையும் பெற்றுள்ளன. கிரேக்க மொழியில் அவருடைய வசன நடைக்கு நிகரில்லை என்று புலவர்கள் சொல்லுவது மிகையாகாது. இக் காரணத்தினால் எல்லோரும் அவருடைய தத்துவக் கொள்கைகளையும், அவருடைய நூல்களையும் அதிகப் பிரீதியோடு அறிந்து கொள்ளுவதில் ஆச்சரியமில்லை. தத்துவத்தைப் புகட்டுகிறவர்கள் நல்ல நடையில் மனதை வசீகரிக்கும்படி எழுதவேண்டியது முதற் காரியமாகும்.

---

* பெரிகிளீஸ் (Pericles) : கிறிஸ்து பிறக்க 429 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கிரேக்க அரசியல் ஞானி; கிரேக்க நாட்டை ஒரே சமஷ்டியின் கீழ்க் கொண்டுவர முயன்றார்; தோல்வியுற்றார். தாம் ஆதன்ஸ் அதிகாரியாக இருந்தபோது அந் நகரைப் பல கலைஞர்களைக் கொண்டு அலங்காரம் செய்தார்.

✲

சந்ததிகள் ஏசும்

சுதந்திரம் என்ற இனிய உணவைப் பெற்றும், அதை ஜீரணிக்க மாட்டாமல் இழந்துவிட்டோம் என்று நம் சந்ததிகள் நம்மைப்பற்றிப் பேசுவதற்கு இடம் கொடாதிருப்போமாக.

—மகாத்மா காந்தி

நான் கண்ட இந்தியா

***

ஸ்ரீமதி மவுண்ட்பேட்டன்

இந்தியாவைப்பற்றியும் இந்திய மக்களைப் பற்றியும் உள்ள நல்ல செய்திகளையும், இந்திய மக்களின் அமைதியான சேவையையும், கடமையை நிறைவேற்றுவதில் அவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டையும், அவர்களுடைய தீரமான செயல்களையும் பற்றி உலகத்துக்கு ஒன்றுமே தெரியாமல் இருக்கிறதே, இதைப்பற்றி யாரும் பேசக்கூடாதா, அல்லது எழுதக்கூடாதா என்று நான் ஆவலோடு எதிர் பார்த்ததுண்டு. இந்தியாவில் நடைபெற்று வரும் வகுப்புப் போராட்டங்களைப் பற்றித்தான் வெளியுலகமும் சரி, இந்தியாவும் சரி, தெரிந்துகொண்டிருக்கிறது என்பது என் கருத்து. இந்தியாவில் வகுப்புவாதப் போராட்டம் நடக்கிறது, இந்தியர்களால் ஒன்று சேர்ந்து வாழ முடியவில்லை, ஒன்று சேர்ந்து வேலை செய்ய முடியவில்லை, எந்தக் காரியத்தையுமே ஒன்றாக இருந்து நிறைவேற்றி வைக்க முடியவில்லை என்பதாகத்தான் ஒவ்வொருவரும் முக்கியமாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுதானா உண்மை? கஷ்டங்களையும், தரித்திரத்தையும், நோய் நொடிகளையும் எதிர்த்துப்போரிடும் பொதுஜனப் போராட்டத்தைப் பார்க்கும்போது நம் மனம் வேறொரு உண்மையைக் காணவில்லையா?

இந்தியாவின் பயங்கரமான ஒரு கோணத்தை உலகம் தெரிந்துகொண்டிருக்கிறது. ஆனால் இந்தியாவின் வேறொரு கோணத்தில், இரத்தக்களரியினிடையிலும்கூட பல ஸ்தாபனங்களும், பல தனிப்பட்ட நபர்களும் நிவாரண வேலையில் ஈடுபட்டு, கற்பனை பண்ணிக்கூடப் பார்க்கமுடியாத கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு வைத்திய உதவிகளையும், தொண்டர் படைகளின உதவிகளையும் அளித்து வருவதைக் காண்கிறோம்.

குர்காவனுக்கு அருகாமையில் உள்ள நூஹ் என்ற கிராமத்துக்கு நான் போயிருந்தேன். பஞ்சாப்பில் உள்ள மிக மோசமான கலகப் பிரதேசங்களில் அதுவும் ஒன்று. அங்கே மக்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களைக் கண்டால் உள்ளமே உடைந்துவிடும். மியோக்களுக்கும் (முஸ்லிம்களுக்கும்) ஜாட்களுக்கும் (இந்துக்களுக்கும்) உள்ள பழைய தகராறு இப்போது வகுப்புவாதச் சண்டையாக மாறி யிருக்கிறது. நூற்றுக் கணக்கான கிராமங்கள், ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கூட்டத்தின

இந்திய கவர்னர் ஜெனரலின் மனைவியராகிய ஸ்ரீமதி மவுண்ட்பேட்டன், மற்ற வைஸ்ராய்களின் மனைவிமாரைப்போல நடந்துகொள்ளாமல், பொதுமக்களின் மத்தியில் அடிக்கடி வந்து முகமலர்ச்சியுடன் கலந்து கொள்ளுகிறார். அவர், இந்தியாவில் வகுப்புக் கலகங்கள் மிகவும் உக்கிரமாக நடந்து கொண்டிருக்கும் போது, அகதி முகாம்களையும், பிற இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு, கலகங்களுக்கிடையிலும் இந்திய மக்கள் உன்னத குணங்களுடன் நடந்துகொண்டதைப் பாராட்டுகிறார். இக் கட்டுரை டெயிலி டெலிகிராப்பில் வெளி வந்ததன் சாரம்.

ரால் சுட்டெரிக்கப்பட் டிருக்கின்றன. நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்பட் டிருக்கிறார்கள்.

அகதிகள் முகாம்களில் தினந்தோறும் அகதிகள் வந்து குவிந்த வண்ணமாக இருக்கிறார்கள். முகாம் என்றால் அது ஏதோ நாலைந்து கூடாரங்களாகவே இருக்கும்; அல்லது ஒரு பழைய பள்ளிக்கூடமாக இருக்கும். அவசர நிலைமையைச் சமாளிப்பதற்காக அவ்வப்போது அங்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவேண்டும். மற்றப்படி அங்கே தண்ணீரோ, உணவோ, பிற சாதனங்களோ, அல்லது சுகாதார வசதிகளோ கிடையாது. இந்த முகாமில்தான் நான் ஓர் இளவயதினரான முஸ்லிம் டாக்டரைப்பார்த்தேன். அவர் டில்லியிலிருந்து வந்தவர். இந்த முகாமில் அவர் மிகவும் பயங்கரமான நிலைமைகளுக்கு மத்தியில் ஐந்து வாரகாலமாக வேலை செய்து வருகிறார். தம்மிடத்தில் நோயாளியாக வந்து சேரும் அகதி, முஸ்லிமா அல்லது இந்துவா என்று அவர் பகுத்துப் பார்ப்பது கிடையாது. அவருடைய பெயர் ஹாஷீமி என்பதாகும். மற்ற முகாமகளில் இந்து டாக்டர்கள் எப்படிப் பணியாற்றுகிறார்களோ அப்படியே இந்த முஸ்லிம் டாக்டரும் பணியாற்றி வருகிறார்.

டாங்க் என்பது ஒரு நகரம். இதுவும் மிகவும் பயங்கரமான கலவரப் பிரதேசம். இங்கே இந்து மதஸ்தர் ஒருவருடைய மனைவியைப் பார்த்தேன். அவளுடைய வீடு, பல அகதிகளும் வசித்துவரும் அந்த முகாம்-கூடாரந்தான். என்னிடத்தில் பல முஸ்லிம் அகதிகள் வந்து, இந்து மதத்தைச் சேர்ந்த அந்த அம்மாள் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் தாங்கள் எல்லோருமே உயிர் பிழைத்திருக்க முடியாது என்று மிகவும் நன்றியறிதலுடன் கூறினார்கள்.

அடுத்தபடியாக, காயமடைந்தவர்களுக்கும் நோய்வாய்ப் பட்டவர்களுக்கும் அளித்துவரும் சிகிச்சையைக் கவனித்தேன். ஐரோப்பாவில் அளித்து வரும் சிகிச்சை முறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தச் சிகிச்சை முறை படுமோசமானதாகக் காணப்பட்டது. இந்தியாவிலேயே பெரும்பாலான சிறு ஆஸ்பத்திரிகளில் மின்சார விளக்கு வசதியோ, தற்கால நவீன சுகாதார வசதியோ, கேவலம் குழாய்த் தண்ணீர் வசதியோகூடக் கிடையாது. அந்த நிலையில் இந்த அகதிமுகாம்களில் சிகிச்சை முறை மோசமாக இல்லாமல் வேறு எப்படி இருக்க முடியும்? குர்காவனில் காயங்களைக் கட்டுவதற்குத் துணிகளுக்குப் பதிலாகக் காகிதங்களையே உபயோகித்துக் கொண்டிருந்தார்கள்.

அத்துடன் மற்றொரு நல்ல விஷயம் என்னவென்றால், கலவரப் பிரதேசங்களுக்கு மத்தியில் பிரிட்டிஷ் வைத்திய மிஷன்களும் இந்திய வைத்திய கோஷ்டிகளுடன் சேர்ந்து இணைந்து வேலை செய்து வருகின்றன. பிரிட்டிஷ் வைத்தியக் கோஷ்டியினரில் குறிப்பிடத் தகுந்தவர் டாக்டர் தாமஸ் என்பவர். இவர் பாப்டிஸ்ட் கிறிஸ்தவ மிஷனைச் சேர்ந்தவர். இவருடைய தந்தையார் ஐம்பது வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு வந்தவர். டாக்டர் தாமஸுடன் வேலை செய்யும் பெண்மணி, பர்மிங்ஹாம் ஆஸ்

பத்திரியி லிருந்து இந்தியாவுக்கு வந்து பதினெட்டு வருஷங்களாகின்றன. இப்படிப்பட்ட மக்கள், இந்தியாவில் பெரிய பெரிய வேலைகளெல்லாம் செய்ய வேண்டியிருக்கும்போது இந்தியாவை விட்டு எந்தக்காலத்திலும் போகத் துணிவார்களா?

எஸ். இ. ஏ. சி. ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஆஸ்பத்திரித் தாதிகளைப் பார்த்தேன். இவர்கள் தூரதூரமாக உள்ள பிரதேசங்களிலெல்லாம் குறைந்த சம்பளத்தில் வேலை செய்து மிகவும் கஷ்ட ஜீவனம் செய்துகொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தியாவில் மற்றப் பொதுக் காரியங்களுக்காக அரசாங்கம் செலவிடும் பணத்தைவிட மிக மிகக் குறைந்த பணந்தான் சுகாதாரத்துக்கும் கல்விக்கும் செலவிடப்படுகிறது. 1942-ம் வருஷம் வரையிலும், சுகாதாரம், கல்வி, நிலங்கள் ஆகிய மூன்றும் ஒரே மந்திரியின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்தன. மாகாண சர்க்கார்களின் வரவு செலவுத் திட்டங்களிலோ, சுகாதாரத்துக்கும் கல்விக்கும் இன்னும் குறைவான முக்கியத்துவமே அளிக்கப் பட்டன. அதனால் இந்தப் பிரச்னைகளை நல்ல முறையில் தீர்க்க முடியாமல் போய் விட்டது. இந்தியாவில் பிறக்கும் 1000 குழந்தைகளில் 360 குழந்தைகள் ஐந்து வயது நிரம்பு முன்னரே இறந்து விடுகின்றன. பிரசவத்தின் போது, 1000 பெண்களுக்கு 20 பெண்கள் வீதம் செத்துப் போகிறார்கள். இந்தியாவில் க்ஷயரோகத்தினால் மட்டும் வருஷத்துக்குப் பத்து லட்சம் பேர் சாகிறார்கள்.

ஆஸ்பத்திரித் தாதிகளுக்கும் வாத்தியார்களுக்கும் மாதச் சம்பளம் ரூபாய் இருபத்தைந்து தான். வாத்தியார்கள் மைல் கணக்கில் நடந்தோ அல்லது சைக்கிள் மூலமாகவோ பள்ளிக்கூடங்களுக்குப் போகிறார்கள். பள்ளிக்கூடங்களுக்குவசதியான இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது.

இந்த நிலையிலும், சேவை மனப் பான்மையும், கடமையினிடத்தில் ஈடுபாடும் ஒவ்வொருவரிடத்திலும் காணப்படுவது தான் அதிசயமான விஷயம். உலகத்தில் வேறு எந்த இடத்திலும், மக்கள் இப்படிச் சுய நலமில்லாமல், நற்பண்பையும், பொறுமையையும் பரம்பரைக் குணமாக வாய்க்கப் பெற்றிருப்பதை நான் பார்த்ததே இல்லை. இந்தியாவில் பற்பல சந்தர்ப்பங்களிலும் இந்த உண்மையைக் கண்டறிந்திருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் இம்மாதிரி தியாக புத்தியும் சேவை மனப்பான்மையும் கொண்டிருக்கும் மக்களுக்கு ஒரு மகத்தான எதிர் காலம் இருக்கிறதென்று நான் கருதுகிறேன்.

இந்தியாவில் சுகாதாரமும் கல்வியும் அபிவிருத்தியடையும் என்று நம்புவதற்கேற்ற சந்தர்ப்பங்கள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன. இந்தியாவின் எல்லா வகுப்பினருக்கும் தலைவர்களாக உள்ளவர்களின் செல்வாக்கின் கீழ் ஒரு சிறந்த புது மாறுதலை ஏற்படுத்துவதற்கான பெரிய திட்டங்களை யெல்லாம் உருவாக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

வெகு சீக்கிரத்தில் ஒரு மத்திய இந்திய வைத்திய உதவிக் கவுன்சில் ஏற்படுத்தப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அந்தக் கவுன்சில் மூலம் வைத்திய

உதவியை உயர்ந்த முறையில் விஸ்தரித்து சுகாதார உதவி இலாகாக்களைப் பிரமாதமாக அபி விருத்தி செய்யமுடியும். வகுப்பு வித்தியாசம் காட்டாமல் இந்தியாவில் அநேக நல்ல காரியங்கள் செய்யப்பட்டு வருவதைப் பார்த்தால், ஒரு சுபசூசகம் மனதில் தென்படுகிறது.

வைத்திய சிகிச்சை முறைகளைக் கற்றுக் கொடுக்கும் டில்லி காலேஜில் வைத்திய சிகிச்சை நிபுணத்துவத்திற்காக ஒரு சர்வ கலாசாலைப் பட்டம் அளிக்கப் படலாம். இந்த விஷயத்தில் இங்கிலாந்தில் இன்னும் வெற்றி காண முடியாதிருக்கிறது. டில்லி காலேஜில் மத வேற்றுமை ஒன்றும் கிடையாது. அங்கே ஒரு முஸ்லிம் பெண்ணை மற்ற மாணவிகள் தங்கள் வகுப்புக்குத் தலைவியாகத் தேர்ந்தெடுத் திருக்கிறார்கள். மாணவிகளில் பெரும்பாலானவர்கள் இந்துக்கள். அந்த வகுப்பில் பார்ஸிகளும் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். அந்த மாணவிக ளெல்லோரும், தகுதியையும் பிரக்யாதியையும் உத்தேசித்தே அந்த முஸ்லிம் பெண்ணைத் தேர்ந்தெடுத்திருப்பதாக என்னிடம் தெரிவித்தார்கள். டில்லியி லுள்ள லேடி இர்வின் காலேஜில் மொத்தம் 250 மாணவிகள் குடும்ப விஞ்ஞானம் கற்று வருவதைப் பார்த்தேன். அவர்களில பெரும்பாலானவர்கள் முஸ்லிம் பெண்கள். அவர்கள் இந்துப் பெண்களுடன் சேர்ந்து ஒன்றாகவே சாப்பிட்டுக் கொண்டும் ஒன்றாகவே வைபவங்களில் பங்கெடுத்துக் கொண்டும் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்கள்.

மேற் கண்டதைப் போன்ற உதாரணங்கள் பல உண்டு. ஜீவாதாரமான பொது நல சேவைகளிலும், நிர்வாகத்திலும், வினியோகத் துறைகளிலும், மற்றும் இருதயம் வெடித்து விடக்கூடிய தடங்கல்களுக்கும் ஆபத்துக்களுக்கும் இடையிலும அவதிப் பட்டோம். போக்கு வரத்துப் பிரச்னை பெரும் பிரச்னையாக இருந்தது. இந்தக் கலவரங்களுக்கும் ரத்தக் களரிகளுக்கும் மத்தியிலுங்கூட கவனித்துப் பார்க்கும்போது மேற் கண்டவாறு எங்கும் ஒற்றுமை நிலவி யிருப்பது தெரியவந்தது.

ஒரு மதத்தினர் மற்றொரு மதத்தினரை மரணபயத்திலும்கூட தலையிட்டு, மீட்டுக் காப்பாற்றிய செய்திகள் கொள்ளை கொள்ளையாக உண்டு.

இந்தியாவுக்கும், இந்திய மக்களுக்கும் உண்மையாகவே ஒரு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று நான் நம்புவதற்குரிய காரணங்களில் மேற்கூறிய செய்திகளும் சில. அத்துடன் இந்தியாவின் மோசமான செய்திகளையே கேள்விப் பட்டு வந்த உலக மக்கள், இந்தியாவைப்பற்றிய நல்ல செய்திகளையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கூறுவதற்குக் காரணங்களாக உதவுகின்றவையும் மேற்கூறிய செய்திகள்தான். இந்தியாவின் இந்த நல்ல அம்சம் அரசியலைக் காட்டிலும் நிரந்தரமாக நின்று நிலவக் கூடிய ஒன்றாகும். ஏனென்றால், இந்த அம்சம மக்களின் உள்ளத்தில் ஆழ வேரூன்றி இருக்கிறது.

✱

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகா ணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

இந்த முக்கியமான கட்டுரையை முழு விபரங்களுடன் தெளிவாக எழுதியுள்ள ஆசிரியர் ஒரு சிறந்த அரசியல் அறிஞர். இன்று ஐரோப்பிய நாடுகளுக்கு வலிய வந்து கடன் கொடுக்க அல்லும்பகலும் முயன்று வருகிறது அமெரிக்கா. அமெரிக்கா, கடன் கொடுப்பதின் மூலம் என்னென்ன மோசமான காரியங்களை எல்லாம் தன் சுயநலத்துக்காகச் சாதித்துக் கொள்ள முயலுகிறது என்பதைக் கட்டுரையில் காணலாம்.

மார்ஷல் திட்டம்

"காலக்கோலன்"

கடந்த ஆறு மாத காலமாக "மார்ஷல் திட்டம்" என்ற சொற்றொடரை சர்வதேச விவகாரங்களைப் பற்றிய செய்திகளில் நாம் அடிக்கடி படிக்கிறோம். ஐரோப்பிய நாடுகளின் புனர் நிர்மாணத்திற்காக அமெரிக்க சர்க்கார் உதவியளிக்க முன் வந்துள்ள திட்டம் இது என்று நாம் பொதுப்படையாக அறிகின்றோம். ஆனால் அமெரிக்கா எதற்காக இவ்வாறு ஐரோப்பிய நாடுகளுக்கு உதவி அளிக்கும் திட்டம் ஒன்றைப் பற்றி விவாதித்து வருகின்றது, ஏன் ஐரோப்பிய நாடுகளைப் பற்றி அமெரிக்கா கவலைப்பட வேண்டும் என்பதை அறிய வேண்டியது அவசியம். மேலும் நமது நாட்டிலும் சிலர் அமெரிக்காவின் உதவியை நாட வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டு வருவதால், இன்றைக்கு உலகப் பொருளாதாரம் இருக்கும் நிலையில் அமெரிக்க உதவி எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

சென்ற மகா யுத்தத்தில் அநேக நாடுகள் பெரும் சேதமடைந்தன. தொழில் வளர்ச்சி அடைந்திருந்த பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் பல தொழிற்சாலைகள் நாசமடைந்து கிடந்தன. அந் நாடுகளின் மீது கடுமையான குண்டு வீச்சு நடந்த காரணத்தால் அந் நாட்டு மக்கள் மிகவும் துன்பப்பட்டனர். விவசாயம் சீர்குலைந்தது. உணவுப் பொருள் உற்பத்தியும் குறைந்து விட்டது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பலமே குன்றியது. வெளி நாடுகளிலிருந்து பிரிட்டனுக்குக் கிடைத்த வருமானம் தேய்ந்தது. குடியேற்ற நாடுகளில் பிரிட்டிஷ் முதலாளிகள் போட்டிருந்த மூலதனம் யுத்த காலச் செலவினால் குறைந்து போயிற்று. உதாரணமாக இந்தியாவிலிருந்து வருஷா வருஷம் தன்னுடைய மூலதனத்துக்கு வட்டியாக பிரிட்டனுக்குப் பணம் சென்றுகொண்டிருந்தது. ஆனால் யுத்த முடிவில் இந்தியாவுக்கு பிரிட்டன் 1200 கோடி ரூபாய் கடன் பட்டுக் கிடந்தது.

கப்பல் தொழிலில் பிரிட்டன் முதன்மை பெற்றிருந்தது. உலக வியாபாரத்தில் மாற்றப்படும் பண்டங்களில் பாதிக்கு மேல் பிரிட்டிஷ் கப்பல்களில் எடுத்துச் செல்லப்பட்டன. இதனால் பிரிட்

டனுக்கு கப்பல் கட்டணத்திலிருந்து நல்ல வருமானம் இருந்தது. யுத்தத்திற்குப் பின்னல் இந்த வருமானம் மிகவும் குறைந்து போயிற்று.

1938-ல் குடியேற்ற நாடுகளிலிருந்தும், மேலே குறிப்பிட்ட கப்பல் தொழில் ஆகியவற்றிலிருந்தும் பிரிட்டனுக்குக் கிடைத்த வருமானம் $17\frac{1}{2}$ கோடி பவுன் என்று மதிப்பிடப்பட்டது. 1946-ல் மேற்படி வருமானம் 6 கோடிக்குக் குறைந்து விட்டது.

சேதமடைந்த தொழிற்சாலைகளை சீர்படுத்தி மீண்டும் சாமான்களை உற்பத்தி செய்தால்தான் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் பலமடைய முடியும். இவ்வாறு புனர் நிர்மாணம் செய்வதற்குப் புதிய இயந்திரங்கள் வேண்டும், அல்லது அவற்றைச் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் வேண்டும்; தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு தொழிலாளிகள் வேண்டும்.

யுத்தத்தில் ஏற்பட்ட ஆள் சேதத்தாலும், பிரிட்டன் போன்ற நாடுகள் யுத்தம் முடிந்த பின்னரும் பெரும் இராணுவப் படையை வைத்திருப்பதாலும் ஆள் பஞ்சம் ஏற்பட்டது. தொழில்களைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்களை வாங்குவதற்கு ஐரோப்பிய நாடுகள் சக்தியற்றிருந்தன. தேவையான புதிய இயந்திரங்களை அமெரிக்காவிடமிருந்தே வாங்கவேண்டியிருந்தது. ஆனல் அதற்குப் பதிலாக உடனடியாக மாற்றுப் பண்டங்களைக் கொடுக்கவோ, கிரயமாக ரொக்கப் பணம் கொடுப்பதற்கோ ஐரோப்பிய நாடுகளுக்கு இயலவில்லை.

எந்த தேசமும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பண்டங்களுக்குத் தக்கபடி உள்நாட்டுப் பண்டங்களை ஏற்றுமதி செய்தால்தான் வெளிநாட்டு வியாபாரத்தைக் கடனில்லாமல் நடத்துவது சாத்தியமாகும். கடனுக சாமான்களை வாங்கினல், இந்தக் கடனைத் தீர்ப்பதற்காக ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். இல்லாவிட்டால் உள் நாட்டிலேயே பல தொழில்களில் வெளிநாட்டாருக்கு ஆதிக்கம் அளிக்க வேண்டி வரும். யுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பிய நாடுகள் இந்த சங்கடமான நிலைமையில் சிக்கிக் கொண்டன.

இவ்வித ஐரோப்பிய நெருக்கடியானது அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குச் சாதகமாயிருக்கின்றது.

யுத்த காலத்தில் அமெரிக்காவுக்கு நஷ்டம் ஏற்படவில்லை. அமெரிக்காவின் தொழிற்சாலைகள் தங்குதடையின்றி அபிவிருத்தி அடைந்தன. குண்டு வீச்சினல் அமெரிக்காவில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. அபரிமிதமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும் மற்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இந்தப் பொருள்களுக் கெல்லாம் நேசநாடுகள் உடனுக்குடன் கிரயம் கொடுக்க முடியாதபடியால், சாமான்கள் "இரவ"லாகக் கொடுக்கப்பட்டன.

யுத்தத்திற்கு முன்பே முதலாளித்துவ நாடுகளுக்குள் அமெரிக்கா முதன்மை ஸ்தானம் பெற்றிருந்தது. அச் சமயம் முதலாளித்துவ நாடுகளிலே ஏற்பட்ட பொருளுற்பத்தியில் 48·6 சதம் அமெரிக்காவில் ஏற்பட்டதாகும். அக்காலத்தில் அமெரிக்காவின் யுதத்தொழில்வளம் இரட்டித்தது.

அமெரிக்க நாட்டு மக்களுடைய வருமானமும், தேசத்தின் வருமானமும் அமோகமாக அதிகரித்தது. மிக மிக சுபீக்ஷ நாட்களாகக் கருதப்பட்ட 1929-ல் அமெரிக்காவின் தேசிய வருமானம் 8110 கோடி டாலர்கள். 1944-ல் இந்தத் தொகை 16,000 கோடி டாலராயிற்று. 1947-ல் 20,000 கோடிக்குக் குறைவில்லை என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

வெளி நாட்டு வியாபாரமும் அபிவிருத்தி அடைந்தது. யுத்தத்திற்கு முன்னால் 450 கோடி டாலர் மதிப்புள்ள சாமான்களை அமெரிக்கா ஏற்றுமதி செய்தது. 1946-ல் 2000 கோடி டாலர் மதிப்புள்ள சாமான்களை ஏற்றுமதி செய்தது. அந்த வருஷத்தில் உபரி ஏற்றுமதியினால் அமெரிக்காவுக்கு 1100 கோடி டாலர் கிடைத்தது.

உபரி ஏற்றுமதியினின்று கிடைக்கும் வருமானத்தைக் கடனாக வெளிநாடுகளுக்குக் கொடுக்கலாம்; சில தொழில்களில் மூலதனமாகப் போடலாம். இவ்வாறாக அமெரிக்க முதலாளித்துவத்தின் ஆதிக்கம் அதிகரிக்கின்றது.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள தொழில் அபிவிருத்தியின் பலனைப் பெரும்பாலும் பெரிய பெரிய ராக்ஷஸ கம்பெனிகளே அடைந்துள்ளன. 1946-ல் அவைகளுடைய மொத்த லாபம் 500 கோடி டாலர்; 1947-ல் 1250 கோடி டாலர் என்று மதிப்பிடப்படுகிறது.

இவ்வாறு அமோகமாக அமெரிக்காவில் உற்பத்தி அதிகரித்து வந்துள்ளது. ஆனால் இப்படி உற்பத்தியான பொருளை விற்பனை செய்வதற்கு அமெரிக்க முதலாளிகள் அயல் நாட்டு மார்க்கெட்டுகளைத்தான் எதிர்பார்க்கின்றனர். ஏனெனில் அமெரிக்கா உற்பத்தி செய்து குவிக்கும் சாமான்களை உள் நாட்டில் விற்பதற்கு வழியில்லை. அமெரிக்கத் தொழிலாளிகளின் கூலி உயர்வு விலைவாசி ஏற்றத்தை எட்டிப் பிடிக்க முடியவில்லை. விலைவாசிகள் 50 சதம் உயர்ந்திருப்பதாகவும், கூலி 20 லிருந்து 30 சதம் மட்டும் உயர்ந்திருப்பதாகவும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இதனால் தொழிலாளிகள் தங்கள் கூலியைக் கொண்டு சாமான்களை வாங்கித் தம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் உண்மையான வருமானம் குறைந்துள்ளது என்பது விளங்கும். 1946-லிருந்து 1947 வரை வியாபாரம் ஆகாதபடி குவிந்து போன ஸ்டாக் 10 சதவிகிதம் அதிகரித்தது. குறிப்பாக ஜனங்கள் தங்கள் சாமான்களை நேரடியாக வாங்கும் சில்லரைக் கடைகளில் 'ஸ்டாக்' 50 சதவிகிதம் அதிகரித்தது.

ஆதலால் அமெரிக்க முதலாளிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் சாமான்களை விற்று, வியாபார நெருக்கடி ஏற்படாதபடி தவிர்க்க வேண்டுமென்றால் வெளி நாடுகள் அப் பொருள்களை வாங்கும் என்ற உத்திரவாதத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, அப் பொருள்களை வாங்குவதற்கான "சக்தி"யை ஐரோப்பிய நாடுகளுக்கு அளிக்க வேண்டும். கடனாக ஒரு தொகையைக் கொடுத்து விட்டால் அந் நாடுகள் அமெரிக்கா விற்க வேண்டிய பொருள்களைத்தான் வாங்கும் என்ற நிச்சயம் இருக்காது. அந்தந்த நாடுகளின் தேவை என்ன என்பதைக் கணக்கிட்டு

அதற்கு வேண்டிய பொருள்களை மட்டும் அமெரிக்கா உற்பத்தி செய்து தருவதும் அமெரிக்க முதலாளிகளுக்கு சரிப்பட்டு வராது. ஏனெனில் அப்பொழுது தங்களிடம் உபரியாயுள்ள பொருள்களை விற்க முடியும் என்ற உத்திரவாதம் இல்லை; மேலும் ஐரோப்பிய நாடுகளின் புனர் நிர்மாணம் அமெரிக்கத் தொழில்களுக்குப் போட்டியாகி விடும் என்ற பயம் ஒரு புறம்.

ஆதலால் அமெரிக்கா சுய நலம் கருதாதபடி ஐரோப்பிய நாடுகளின் புனர் நிர்மாணத்திற்கு உதவி யளிக்க முன் வருகின்றது என்று கூறுவது வெறும் பகட்டுப் பேச்சு. அமெரிக்காவிலேயே ஒரு பெரிய நெருக்கடி ஏற்படாதபடி தடுப்பதற்காக, அமெரிக்க முதலாளிகள் தங்கள் சுய நலத்தையே பிரதானமாகக் கருதி, வகுத்து வரும் திட்டமே ஐரோப்பிய நாடுகளின் புனர் நிர்மாணத் திட்டம்; [ஈ. ஆர். பி.] தங்கள் நாட்டு ஜனங்களுக்குப் போதிய ஊதியம் தந்து தொழில் அபிவிருத்தியை நீடிப்பதோ, அல்லது மற்ற நாடுகளும் தங்கள் மக்களுடைய பொருளாதார சுபீக்ஷத்தை லட்சியமாகக் கொண்டு வகுக்கும் திட்டத்திற்கு உதவி செய்வதோ அமெரிக்காவின் 'உதவி' திட்டத்தின் நோக்கமல்ல. மற்ற நாடுகளின் நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு தன்னுடைய ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்வதே அமெரிக்க சர்க்காரின் நோக்கம்.

1945 நவம்பர் மாதத்தில் யுத்த பிற்காலக் கொள்கையைப் பற்றி யோசனை செய்வதற்காக அமெரிக்க சட்டசபை அமைத்த கமிட்டி பின்வருமாறு கூறியது:

"அமெரிக்கா கொடுக்கும் கடன்களினால் ஏற்படும் சாதகமான நிலைமையை நாம் நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இந்த சாதகமான நிலைமையை உபயோகித்துக் கொண்டு நாம் அரசியல் பொருளாதாரச் சலுகைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த லட்சியத்துக்கு ஏற்றபடி நமது பொருளாதாரத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்; யுத்தம் முடிவடைந்த சில நாட்களுக்குள்ளாகவே அமெரிக்காவின் லட்சியம் இவ்வாறு குறிப்பிடப் பட்டது.

அரசியல் பொருளாதார ஆதிக்கத்தை அதிகரித்துக் கொள்ள இதுவே சந்தர்ப்பம் என்று அமெரிக்க முதலாளிகள் 1945-ல் எண்ணினர். 1947-ல் வெளி நாட்டு ஏற்றுமதியை எள்ளளவும் குறைக்காதபடி காப்பாற்றினால்தான் உள்நாட்டின் 'சுபீக்ஷ' நிலைக்கு ஆபத்து வாரமல் பாதுகாக்கலாம் என்று பொருளாதார நிபுணர்கள் கூறினர். 1947 ஜூனில் அமெரிக்க அயல் நாட்டு இலாகா மந்திரி ஜார்ஜ் மார்ஷல் ஹார்வார்ட் சர்வகலாசாலையில் பிரசங்கம் செய்யும் போது, "ஐரோப்பிய நாடுகள் பரஸ்பரம் உதவி செய்துகொள்ளும் நோக்கத்துடன் எடுத்துக் கொள்ளும் புனர் நிர்மாண முயற்சிக்கு அமெரிக்கா உதவி அளிப்பதற்குத் தயாரா யிருக்கும்" என்று கூறினர்.

மார்ஷல் இப்பிரசங்கம் செய்வதற்கு முன்பே ஜனாதிபதி ட்ருமன் துருக்கி, கிரீஸ் ஆகிய இரு நாடுகளுக்கும் உதவி அளிக்கும் ஒரு திட்டத்தைக் குறிப்பிட்டார். ட்ருமன் பேசிய பொழுதே ஐரோப்பாவில் சுதந்திரத்துக்குப்

பெரிய அபாயம் ஏற்பட்டு விட்டதாகவும், அதினின்று அந்நாடுகளைக் காப்பாற்றுவதற்காகவே அமெரிக்கா அவற்றிற்கு உதவி அளிக்கவேண்டும் என்றும் சொன்னார்.

ஆகவே தன் சுய நலத்தைக் கருதி, தன்னுடைய ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக வகுதத திட்டத்திற்கு ஆதரவு தேடும் பொருட்டே "சுதந்திரத்திற்கு அபாயம்" ஏற்பட்டுவிட்டது என்று கூக்குரலிடுகின்றது அமெரிக்கா. இந்த அபாயம் கம்யூனிஸத்தால் ஏற்படுகின்றது என்று பிரசாரம் நடத்தி, கம்யூனிஸ்டு எதிர்ப்பு சக்திகளை எல்லாம் திரட்டி, அமெரிக்கா தன் திட்டத்திற்கு ஆதரவு திரட்டி வருகின்றது. இதைத்தான் வெளிப்படையாக அமெரிக்க முதலாளிகளின் பத்திரிகையாகிய "வால் ஸ்டிரீட் ஜர்னல்" பின்வருமாறு கூறிற்று: "கம்யூனிஸத்தை அணைபோட்டு நிறுத்துவதற்காக இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. ஆனல் இது வெளி வார்த்தை தான். உண்மை என்ன வென்ருல் அமெரிக்கா தன் வெளி நாட்டு வியாபாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற அவசியமே இத்திட்டத்திற்குக் காரணம்."

மார்ஷல் மேலே குறிப்பிட்ட ஹார்வார்டு சர்வகலாசாலையில் பிரசங்கம் செய்த பின்னர் ஐரோப்பிய நாடுகள் பரஸ்பர ஒத்துழைப்புடன் தங்கள் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளும் முயற்சியைக் காண்பிப்பதற்கும், அமெரிக்காவிட மிருந்து எவ்வளவு உதவி தேவைப்படும் என்பதைத் திட்டமிடுவதற்கும், பாரிஸில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி பெவினும் பிரெஞ்சு மந்திரி பீடால்டும் இதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டனர்.

இந்த உதவித் திட்டம் அமெரிக்க சட்ட சபையில் அனுமதியைப் பெற்று விடுமென்று தெரிந்தவுடன், மீண்டும் 16 தேசங்களின் பிரதிநிதிகளை பெவினும், பீடால்டும் கூட்டி ஒரு மகாநாடு நடத்தி வருகின்றனர்.

பாரிஸ் மகாநாட்டில் ஸோவியத் யூனியன் முதலில் பங்கெடுத்துக்கொண்டது. பிரிட்டனும் பிரான்ஸும் அமெரிக்காவின் ஆதிக்கத்-துக்குத் தக்கபடி ஐரோப்பாவை அமைத்து, அடிமைப்படுத்தும் அபாயம் மார்ஷல் திட்டத்திலிருக்கின்றதென எச்சரிக்கை செய்துவிட்டு ஸோவியத் யூனியன் மகாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் அதில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. பரஸ்பர உதவி என்று கூறி ஐரோப்பிய நாடுகள் தங்கள் பொருளாதார சுதந்திரத்தை இழந்து அமெரிக்காவுக்கு அடிபணிவது தேசத்தின் சுதந்திரத்தைப் பாதிக்கும் செய்கை என்றும், தங்கள் உள் நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதற்கு இடமளிக்கும் திட்டம் இது என்றும் ஸோவியத் யூனியன் கூறியது.

பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க், நார்வே, டென்மார்க், ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி, ஆஸ்டிரியா, இத்தாலி, கிரீஸ், போர்ச்சுகல், அயர்லாந்து, துருக்கி—ஆகிய 16 நாடுகளும் சேர்ந்து தங்களுக்கு என்ன

சாமான்கள் தேவையாயிருக்கும் என்று திட்டமிட்டன. ஐரோப்பிய நாடுகள் புனர் நிர்மாணமடைய நான்கு வருஷங்கள் ஆகுமென்றும், இந்த நான்கு வருஷங்களில் 2200 கோடி டாலர் மதிப்புள்ள சாமான்கள் கடனாக அமெரிக்கா கொடுக்க வேண்டுமென்றும் திட்டமிட்டன.

ஆனல், அமெரிக்க முதலாளிகள் ஐரோப்பிய நாடுகளின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவை உத்தேசித்துள்ளபடி ஐரோப்பிய நாடுகள் நான்கு வருஷங்களில் யுத்தத்திற்கு முன்பிருந்த பொருளாதார நிலையை அடைய முடியுமா என்பதைப் பரிசீலனை செய்வதற்காக 215 அமெரிக்ககாங்கிரஸ் பிரதிநிதிகள் அனுப்பப்பட்டனர். இவர்கள் ஐரோப்பிய நாடுகளைத் தங்களிடம அடமானம்வைக்கும் நிலத்தைப் பார்ப்பதுபோல் சுற்றிப் பார்த்தனர். பார்த்த பிறகு உங்கள் திட்டம் சரியாயில்லை. என்று அவர்கள் சொன்னூர்கள். அவர்களின் விருப்பத்திற்கிணங்க அதைத் திருத்தி அமைத்துக் கொண்டனர்.

16 தேசங்களின் பிரதிநிதிகள் கோரும் பொருள்களைக் கொடுப்பதற்கு முடியுமா என்று பரிசீலனை செய்யஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளின் உண்மையான தேவை என்ன என்று பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அதற்குத்தான் ஹாரிமன்கமிட்டி என்று பெயர்.

ஹாரிமன் கமிட்டியின் சிபார்சுகள் 16 நாடுகளின் திட்டத்தைப் பல வகைகளில் திருத்திவிட்டது. ஐரோப்பிய நாடுகள் கேட்ட சாமான்களைக் குறைத்துவிட்டது. அவை கேட்காத பொருள்கள் சிலவற்றையும் சேர்த்துவிட்டது. உதாரணமாக ஐரோப்பிய நாடுகள் தங்கள் எஃகுத் தொழிற்சாலைகளை நடத்துவதற்காக உபயோகமற்ற எஃகுத் துண்டுகளைக் கேட்டன. ஹாரிமன் கமிட்டி ரிபோர்ட் அவற்றைக் கொடுக்க வேண்டாமென்று கூறிவிட்டது. இரும்பைக் காய்ச்சி பதம்செய்து எஃகு செய்யவேண்டும். முற்றிலும் பதம் செய்யப்படாத எஃகு கிடைத்தால் ஐரோப்பிய நாடுகள் தங்கள் எஃகு உற்பத்தி ஆலைகளை நடத்தலாம் என்று எண்ணிக் கேட்டதில் ஐந்தில் ஒரு பங்கு மட்டும் தரும்படி ஹாரிமன் கமிட்டி சிபாரிசு செய்துள்ளது. அதேமாதிரியாக இயந்திரங்களை உற்பத்தி செய்யும் சாதனங்களிலும், பெரிய பண்ணைகளை நடத்துவதற்கு வேண்டிய சாதனங்களிலும் ஐரோப்பிய நாடுகள் கேட்டதில் ஒரு பகுதியை மட்டும் தரும்படி சிபார்சு செய்துள்ளது. ஐரோப்பிய நாடுகள் கப்பல் கட்டுவதற்காகக் கேட்ட பொருள்களை வேறு தொழில்களுக்கு உபயோகிக்கலாம் என்று கூறி மறுத்துவிட்டது. ஐரோப்பிய நாடுகள் கேட்காத பஞ்சு, புகையிலை, கப்பல்கள் ஆகியவற்றை அவை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று ரிப்போர்ட் கூறுகின்றது.

ஹாரிமன் கமிட்டியின் சிபார்சுகளைப் பார்த்தால் எப்படி அமெரிக்கா தனக்கு இஷ்டமான பொருள்களையே 'உதவியாக' கொடுத்து ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தைத் தனக்குச் சாதகமான முறையில் மாற்றி அமைத்துக் கொள்ள முயலுகின்றது என்பது விளங்

கும். அமெரிக்க உதவியைக் கேட்கும் எந்த நாடும் தன்னுடைய பொருளாதாரத்தைத் தனக்குத் தகுந்தபடி அமைத்துக் கொள்ள வழியில்லை.

மேலும் இந்த உதவி குறிப்பிட்ட நோக்கப்படி நடக்கிறதா என்பதைக் கவனிக்க அமெரிக்காவில் தனி ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப்படும். ஐரோப்பாவில் அமெரிக்கப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படுவார். ஒவ்வொரு நாட்டிலும் இந்த உதவி எப்படி உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைப் பார்வையிடுவதற்குப் பார்வையாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

அது மட்டுமல்ல. இந்த உதவிக்குக் கைம்மாருக முக்கியமான மூலப் பொருள்களை அமெரிக்கா பெற்றுக் கொள்வதற்கு இந்நாடுகள் உதவி அளிக்க வேண்டும். அதாவது பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து போன்ற ஏகாதிபத்திய நாடுகளின் ஆதிக்கத்திலுள்ள 'குடியேற்ற' நாடுகளிலிருந்து வரும் முக்கியமான மூலப் பொருள்களை அமெரிக்கா அடையும். அவற்றுள் முக்கியமானவை: மாங்கனீஸ், துத்தம், அஸ்பெஸ்டாஸ், வெண்கலம், கிரோமைட், கோபால்ட், நிக்கல்—பழைய ஏகாதிபத்திய நாடுகள் அமெரிக்காவின் பொருளாதார அடிமைகளாகும் திட்டம் இது.

இவ்வாறு அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய செல்வாக்கை அதிகரித்துக் கொண்டு, ஐரோப்பிய நாடுகளையே தன்னுடைய ஆக்ஞைப்படி நடக்கும் அடிமை நாடுகளாக்க வந்த திட்டமே மார்ஷல் திட்டம். மார்ஷல், பிரசங்கத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு உதவி அளிப்பது பற்றி குறிப்பிட்டதினுல் அதற்கு "மார்ஷல் திட்டம்" என்ற பெயர் வந்தது.

தற்சமயம் இந்தத் திட்டம் அமெரிக்க மேல் சபையின் அனுமதி பெற்று விட்டது. மார்ச்சு மாதம் முடிவதற்குள் திட்டம் சட்டசபையின் அனுமதி பெற்ருல்தான் ஐரோப்பிய நாடுகளைக் கம்யூனிஸத்திலிருந்து காப்பாற்ற வழி இருக்கும் என்பது ஜனுதிபதி ட்ரூமன், மார்ஷல் ஆகியோரின் கூற்று.

ஆனுல் அமெரிக்கா தேசத்திலேயே நெருக்கடி தோன்றி விட்டது. பிப்ரவரி மாதத்தில் அமெரிக்கக் கம்பெனிகளின் பங்குப் பத்திரங்களின் விலை 10 சதம் குறைந்தது. நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரையிலுள்ள பங்குதார்கள் பீதியுடன் பங்குகளை விற்க ஆரம்பித்து விட்டனர் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனமே கூறியது. இந்த நெருக்கடி, இத்தகைய பீதி, ஏன் ஏற்பட்டது? அமெரிக்க முதலாளிகளுடைய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சாமான்களை விற்பது கடினமாகிவிட்டது. ஜனவரி மாதத்தில் ஜனுதிபதி ட்ரூமன் அமெரிக்க சட்டசபைக்கு விடுத்த அறிக்கையில் "பணவீக்கத்தையும், விலைவாசி ஏற்றத்தையும் நாம் தடுத்து நிறுத்தாவிட்டால் ஒரு பயங்கரமான நெருக்கடி நமது நாட்டைப் பீடிக்கும்" என்ருர். இப்படி அவர் கூறும்பொழுது, விலைவாசி ஏற்றத்தையும் கண்டிப்பதாகத் தோன்றிய போதிலும், அமெரிக்க முதலாளிகள் தம் பொருள்களை விற்க முடியாமல்

நிண்டாடி நிற்கும் ஒரு நிலைமையை அவருடைய செய்தி அம்பலப்படுத்திவிட்டது.

அதனுல்தான் ஐரோப்பிய உதவி திட்டத்திற்கு அனுமதி பெற்று, துரிதமாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அமெரிக்க முதலாளிகள் அவசரப்படுகின்றனர். ஏனெனில், இந்த நெருக்கடியினின்று தப்புவதற்கு அது ஒன்றேவழி என்று அவர்கள் நினைக்கின்றனர். மேலும் மற்ற நாடுகளின் மீது தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு முடியும் என்றும் எண்ணுகின்றனர். கம்யூனிஸ்டு அபாயத்தைத் தடுப்பதற்காக நாங்கள் பரோபகார சிந்தனையுடன் உதவி அளிக்க முன் வருகின்றோம் என்று பிரசாரம் செய்கின்றனர். அமெரிக்க முதலாளிகளின் இஷ்டப்படி ஆளும் சர்க்கார்களை அமைத்துக் கொண்டு, ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தையும் தங்களுடைய இஷ்டப்படி மாற்றி அமைக்கும் அரசியல் பொருளாதார ஆதிக்கத்தை மறைப்பதற்காகச் செய்யும் பிரசாரம் அது.

ஹிட்லர் தன்னுடைய ஆதிக்கத்தை விஸ்தரித்துக் கொண்ட பொழுதும் கம்யூனிஸத்தை எதிர்ப்பதாகக் கோஷமிட்டான். ஆனல் பாஸிஸ்ட் ஜெர்மனிக்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் ஒரு வித்தியாசம்: பாஸிஸ்ட் ஜெர்மனி "ஜனநாயக" கோஷம் போடவில்லை. அமெரிக்க முதலாளிகள் "ஜனநாயகப் பாதுகாப்பு," "சுதந்திரப்பாதுகாப்பு" என்று கூக்குரலிட்டுக் கொண்டே ஐரோப்பிய நாடுகளின் சுதந்திரத்தை ஆக்கிரமித்து வருகின்றனர்.

ஆகவே "மார்ஷல் திட்டம்" என்று கூறப்படும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத் திட்டம் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் பொருளாதார நிலையைப் பாதிக்கும் முக்கியமான திட்டம். அமெரிக்க உதவியை எதிர்பார்த்து நிற்கும் ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு "மேற்கு ஐரோப்பிய யூனியன்" ஏற்படுத்த வேண்டும் என்று பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி பெவின் பிரஸ்தாபித்திருக்கிறார். அந்த 'யூனியன்' ஐரோப்பிய நாடுகளின் கீழுள்ள குடியேற்ற நாடுகளையும் (காலனிகளையும்) நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்கவேண்டும் என்று பெவின் கூறியிருக்கிறார்.

மார்ஷல் திட்டத்தினின்று ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு இது ஒரு அறிகுறி. அமெரிக்காவிடம் உதவி பெற்று, தங்களுடைய ஏகாதிபத்தியத்திற்குக் கீழ்ப்பட்ட இதர நாடுகளையும் மக்களையும் ஒரு புதிய அரசியல் அமைப்பின் கீழ் கொண்டுவந்து, அமெரிக்காவுக்குப் பணியாற்றபெவின் போன்ற ஐரோப்பியப் பிரமுகர்கள் தயாராயிருக்கின்றனர்.

சுதந்திரத்திற்காக, ஏகாதிபத்திய ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைவதற்காக, அரசியல் பொருளாதார விடுதலை அடைவதற்காகப் போராடிய இந்தியா இனியும் போராடி வரும். இந்தியாவில் 'மார்ஷல் திட்டம்' போல் நமக்கும் அமெரிக்கா உதவி அளிக்கும் திட்டம் வேண்டுமென்று விரும்பும் பிரமுகர்களை 'சுதந்திர வீரர்' என்றோ, 'சுதந்திர இந்தியப் பிரஜைகள்' என்றோ எண்ணுவதற்கு இயலாது!

LUX
LUX TOILET SOAP
பத்மா தன் மேனியை
லக்ஸ் டாய்லட் சோப்பினால்
மிருதுவாகவும் மென்மையாகவும்
வைத்துக்கொள்கிறார்
LTS 179-111 TM
★ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★

சக்தி

மாதப் பத்திரிகை

○

தனிப் பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0	10
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	8	0
2 வருஷம்	15	0

○

சக்தி காரியாலயம்

சென்னை 14

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

For the Delightfully Refreshing Soap

KERALA SOAP INSTITUTE, CALICUT

FSS-103

கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்

கள்ளிக்கோட்டை

இன்று சமூகத்தில் தகுதியுடையவர்களுக்குத் தகுதியற்ற நிலையும், தகுதியற்றவர்களுக்குப் பேறும் பெருமையும் கிடைத்துள்ளன. இந்த முரண்பாடுகளைத் தொலைப்பது எப்படி? வாழ்வது எப்படி?

ஒரே குழப்பம்

வ. ரா.

வெண்ணெயை வைத்துக் கொண்டு, நெய்க்கு அழுபவன் பழுத்தமுட்டாள். மூளையை வைத்துக் கொண்டு, யோசிக்க மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறவனை என்ன பெயரிட்டு அழைப்பது என்று தெரியவில்லை. வாழ்க்கையை எப்படியோ தள்ளி, காலம் கழித்து விடுவோம் என்று வாய் கூசாமல் பேசுகிறவர்களைக் கண்டால், எனக்கு ஆத்திரம் பொங்குகிறது.

வாழத்தெரியாமல் திண்டாடுவதெல்லாம் சிந்தனைக் குறைவால் தான். 'நாம் யோசனை செய்து என்ன பண்ண? நாம் நினைக்கிறபடி, ஏதாவது ஒன்று நடக்கிறதா?' என்று புலம்புகிறார்கள். இந்தப் புலம்பலுக்கு தேவையுமில்லை; அர்த்தமும் கிடையாது. 'உலகத்தின் போக்கு என்ன? எந்த மூல சக்திகள் தாண்டவமாடுகின்றன? அவைகளின் விளைவுகள் என்ன?' என்று யோசனை செய்ய முடியாமல் போனால், பிறகு சிந்தனை எதற்காக?

தான் நினைக்கிறபடி சுகமோ, சௌகரியமோ கிடைக்க வில்லையானால், 'நான் ஏன் பிறந்தேன்' என்று பிலாக்கணம் பாடுகிறார்கள். குடியிருக்க வீடும், உண்ண போதிய உணவும், உடுக்க அழகான ஆடையும் சல்லாபம் செய்ய சிநேகிதர்களும், பார்த்துப் பூரித்துப் போக காட்சிகளும், படிக்கப் படிக்கத் தெவிட்டாத நூல்களும், ஏறிச் செல்ல வாகன வசதிகளும், இன்பம் துய்க்க காதல் மனைவாளும், அழுகையைக் கனவிலும் அறியாத குழந்தைகளும், கடன் என்று கேட்கத் தேவையில்லாத நிலைமையும், நோயில்லாத தீர்க்க ஆயுளும், இவைகள் கற்பனைகளோ என்றுகூட சந்தேகிக்கும் படியான புதிய புதிய அறிவுத் தோட்டங்களும் அபரிமிதமாக, இம்மண்ணுலகில் இருப்பின், 'நான் ஏன பிறந்தேன்' என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.

சங்கீதத்தில் ஆழ்ந்து கிடப்பார்கள்; தவறு சொல்லி விட்டேன். சங்கீதத்தில் மிதந்து, ஆனந்த சாகரத்தில் ஆழ்வார்கள். இப்பேர்ப்பட்ட உலகத்தை, ஆண்டவன் தான் செப்பனிட்டு கொடுக்க வேண்டுமா? மனித முயற்சிக்கு ஆசி கூறுவதுதான் ஆண்டவனது வேலை. கடவுள் என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்த காந்தி, ஒரு விநாடிகூட வேலை செய்யாமல் இருந்ததில்லை. ஒவ்வொரு விஷயத்தையும் நுட்பமாக ஆராய்ச்சி செய்யாமல் இருந்ததுமில்லை. எல்லாம் வல்ல இறைவன் எதையும்

செய்து முடித்து விடுவார் என்று சோம்பல் பேச்சு பேசுகிறவர்களுக்கு, வாழ்க்கையைப் பற்றி எவ்வித அக்கரையும் இருக்காது.

'சோம்பல் மிகக் கெடுதி, பாப்பா' என்று குழந்தைகளுக்கு உபதேசம் செய்த பாரதியார் எவ்வளவு தீர்க்காலோசனையுடன் எதையும் தமிழர்களுக்கு எடுத்துரைத்தார் என்று நினைக்கையில், அளவில்லாத சந்தோஷம் உண்டாகின்றது.

காந்தி எத்தனையோ அற்புதங்களை செய்திருக்கிறார். அவைகளில் சிகரம் போன்ற ஒன்றை குறிப்பிடுகிறேன். சோம்பலையும் வாழ்க்கைக்கு பொருத்தமில்லாத தர்க்க வாதத்தையும் இந்த நாட்டை விட்டு ஓட்டினது தான், காந்தி தோற்றுவித்த அற்புதங்களில் சிகரம் போன்றது.

சோம்பல் செய்கிற வினோத சேஷ்டைகளை வர்ணிக்கவே முடியாது. அவைகள் வார்த்தைகளுக்கு அப்பால்பட்டவை.

சோம்பல் என்பது சைத்தானுடைய பிரதம மந்திரி, யமனுடைய் கையாள்; மனித வர்க்கத்தின் முற்போக்கை தடுத்து, இதம் கூறுவது போல அதை எதிர்த்துப் போராடும் மாபெரும் விரோதி; சகுனியைப் போன்ற சூட்சும புத்தியும் சதியாலோசனையும் கொண்ட நீசத்தன்மை படைத்தது சோம்பல்.

'உன்னைக் காப்பாற்றுவேன்' என்று சொல்லுவதைப் போல நடித்து, மனிதனை, படுகுழியில் தள்ளும் துரோகி, சோம்பல் என்றால் அது மிகையாகாது. பயத்துக்கு தாயகம் சோம்பல்; அலட்சியததுக்கு தங்குமிடம் சோம்பல்; பொறுப்பின்மைக்கு ஊற்றுக் கண் சோம்பல்; விதண்டா வாதத்தை வளர்ப்பது சோம்பல்; செயல் செய்யாமல் தடுப்பது சோம்பல்; அற்ப ஆயுளுக்கு அஸ்திவாரம் கோலுவது சோம்பல்.

இந்த சோம்பலை, சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு மேலாக நம்மவர்கள் வளர்த்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். இது எந்த ஙயமான நிலைமையில் இருக்கிறது, தெரியுமா? உதட்டிலிருக்கிற வாழைப்பழத்தை உள்ளே தள்ளுவதற்கு கூட ஒரு ஆள் வேண்டியிருக்கிறது.

சிரத்தையும் பொறுப்பும் இல்லாமல் போனால், வாழ முடியாது, வாழத் தெரியாது. மூச்சை உள்ளே இழுத்து, வெளியே வாங்கி, பசித்த போது சாப்பிட்டு, களைத்தபொழுது தூங்கி கொட்டாவி விட்டுக் கொண்டிருப்பதற்கு, வாழ்க்கை என்ற பெயர் கொடுக்கலாமா?

உள்ளதைச் சொல்லப் போனால், நம்மவர்களின் வாழ்க்கை, இவ்வளவில் சுருக்கம் அடைந்து விட்டது ஆகவே, உயர்ந்த சரக்கு எது, மட்டமான வஸ்து எது என்று மதிப்பிடும் வல்லமையை இழந்து நிற்கின்றோம்.

சுதந்திரத்தைக் காட்டிலும் ஜாதி பெரிது என்று பிடிவாதம் பிடிக்கும் அசட்டுத்தனத்துக்கு, 'நோபல்' பரிசு கொடுத்தாலும் போதாது. ஆராய்ச்சியால் ஏற்பட்ட அறிவைக் காட்டிலும், பரம்பரையாலும் வதந்தியாலும் உண்டான மூட பக்தி உயர்ந்தது என்று சொல்லும் அபத்தத்தக்கு, கோயில் கட்டி, கும்பிடத்தான் வேண்டும்.

நாலுபேர் சேர்ந்து பேசினல் சண்டைவரும் என்று கொண்டு, நாகரிக முறையில், சண்டை வராத முறையில் பேசக் கற்றுக் கொள்ளுவது பயனற்ற வேலை என்று வாதம் செய்யும் அடி முட்டாளுக்கு, என்ன தண்டனை விதித்தாலும் போதாது.

தேவர்களோ, அசுரர்களோ செய்த சூழ்ச்சியாலும் காந்தி யின் நிகரிலாத சாகஸத்தாலும் இந்தியா, சுதந்திரம் பெற்றது. அது சென்ற ஆகஸ்டு மாதத்தில். அந்த மாதத்திலிருந்து இந்த நாட் டில் எழும் கோஷங்களைக் கேட் டால், மனதுக்கு இனிப்பாகவே இல்லை.

வகுப்புப் போர், வர்க்கப் போர், தர்க்கப் போர், மதப் போர் என்று அர்த்தமில்லாமல் கூச்சல் போடுகிறார்கள். வகுப் புக்குள்ளே வகுப்பு. இது ஒரு விசித்திரம். வாழ்க்கை என்பது என்ன என்று கேட்டால், 'எங் களை ஆண்ட ஆங்கிலேயனை கேளுங்கள்' என்று சொல்லு வதைப்போல, பெரும்பான்மை யோர் நடந்து வருகிறார்கள். சிந்தனை செய்யும் சிலருக்கும் பெரும்பான்மையான மற்றவர் களுக்கும் தொடர்பு இல்லை.

நம்மவர்களுடைய வாழ்க் கையை கேவலப் படுத்தி வரும் மந்திரக்காரன், ஜோசியன், சன்னியாசி, மடாதிபதி, 'பில்லி சூன்யம்' வைப்பவன், கள்ளுக் கடைக்காரன், கறுஞ்சந்தைப் பேர்வழி, வகுப்பு வாதக்காரன் போன்றவர்களுக்குத்தான் இன் றும் நமது சமுதாய வாழ்க்கை யில் செல்வாக்கு இருக்கிறது. இந்த நிலைமை மோசமானதல் லவா?

அப்படியே ஒரு சில சிந்தனை யாளர்களுக்கு செல்வாக்கு இருந்தாலும், அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. ஒருவர் மற்றவ ருடைய காலை வாரிவிடும் சிறு மைக் குணம் தான் தாண்டவ மாடுகிறது.

சமுதாயத்தை காப்பாற்றி, அதை முன்னேறச் செய்தால் அன்றி, நாம் எல்லோரும் தனித் தனியாகவும் கூட்டமாகவும் அழிந்துபோவோம் அல்லது அடிமைப் பட்டுபோவோம் என்ற நினைப்பே இல்லாமல், தங் கள் தங்கள் வாழ்வுதான் பெரிது என்றும் தேசத்துரோகம் செய் தும் வாழலாம் என்றும் எண் ணக் கூடிய பதர்கள் இருக்கி றார்கள்.

இருபத்திநான்கு மணி நேர மும் நாட்டைப்பற்றியும் நம்ம வர்களின் வாழ்க்கையைப் பற்றி யும் காந்தி சிந்தனை செய்தார். ஆகவே மகத்தான காரியங்களை சாதித்தார். காந்திக்கு தனி பெருமை இதனலே என்றுகூடச் சொல்லலாம்.

ஆகவே வாழ்க்கையைப் பற்றி யோசியுங்கள். குழப்பத்துக்கு ஆளாகாதீர்கள். சோம்பலை உதறித் தள்ளுங்கள். இதுதான், நான் இப்பொழுது தமிழர் களுக்கு சொல்லக் கூடியது.

✲

முடியுமா?

கையில் வெள்ளிப் பிரம்பை வைத்துக் கொண்டால் அறிவு வந்து விடுமா?

தங்கப் பாத்திரத்தில் காதலைச் சொரிய முடியுமா?

—வில்லியம் பிளேக்

பாரத் கணித பஞ்சாங்கம்

(1948-'49 ஸர்வதாரி ௵)

பலருக்கும் எளிதில் புரியக்கூடிய விதத்தில், பல விசேஷ அம்சங்களைச் சேர்த்து, சுத்த கணித ஸ்புடத்துடன் கணிக்கப்பட்டுள்ளது.

மற்றும் ஜோதிஷ ஸம்பந்தமான, பல புதிய அம்சங்களும், நக்ஷத்திர பலாபலன்களும் அடங்கியது.

பாரத தேசத்தில் பலராலும் அபிமானிக்கப்பட்டதும், சாஸ்திர நிபுணர்களின் ஆதரவையும், நன் மதிப்பையும் பெற்ற ஷை பஞ்சாங்கம் கால நிர்ணயங் தவராது கணிக்கப்பட்டிருப்பதால் ஸகல ஸகாம கர்மாக்களுக்கும் முக்கியம் வாய்ந்ததாகும்.

விலை அணா 6

ஆசிரியர்கள்: சென்னை புரசை பிரஹத் ஜோதிஷ நிலையத்து

L. V. S. மணி, B. A., (Hons) Mathamatics

பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ பானு

கிடைக்குமிடம்:

சக்தி காரியாலயம்

சென்னை 14.

வகுப்புவாத வெறிக்கு காந்திஜியின் அருமந்த உயிர் இலக்காய் விட்டது. இந்த வெறியை ஒழிக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகிறார் கட்டுரையாளர்.

நமது கடமை

ஆர். ராமநாதன்

கடந்த முப்பது வருடங்களாக இந்திய அரசியல் வானை அலங்கரித்து வந்த ஜோதி மறைந்து விட்டது; கடந்த முப்பது வருடங்களாக ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை என்னும் மந்திரத்தை இடைவிடாது உச்சரித்து வந்த குரல் அடைத்து விட்டது. இந்தியாவின் ஜீவ சக்தியை அரித்துத் தின்னும் பிற்போக்குக் கும்பலின் குண்டு செய்த வேலை இது! இந்தக் குண்டு மகாத்மாவின் உயிர் மீது மாத்திரம் வீசப்பட்ட குண்டு அல்ல; எல்லா ஜனநாயக சக்திகளின் மீதும் வீசப் குண்டு இது.

முப்பது வருடங்களுக்கு முன் இந்திய தேசிய இயக்கம் "சட்டம் என்னும் சகதியில்" அமிழ்ந்து கிடந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தர்ம உணர்ச்சியைத் தூண்டி விடுவதன் மூலம் அடிமைத் தளையை அறுத்துவிட முடியும் என்று தேசத் தலைவர்களில் பலர் கருதினர். லோகமான்ய திலகரின் குரல் அன்று மெல்லியதாக இருந்தது. எனினும் முதலாவது மகா யுத்தம் சுதந்திர சக்திகளைத் தட்டி எழுப்பிற்று. ருஷ்யப் புரட்சி அடிமை நாடுகளுக்குப் புதிய நம்பிக்கை அளித்தது. உலக மகா யுத்தம் விட்டுச் சென்ற தீமைகள் பாமர மக்களை வாட்டி வதக்கின. மக்கள் கொதித்தனர். விழித்து எழும் மக்களை நசுக்க ஏகாதிபத்தியம் ரௌலட் சட்டம் போன்ற கொடிய சட்டங்களைப் பிறப்பித்தது. அந்தக் காலத்தில் மகாத்மா இந்திய அரசியல் உலகில் தோன்றினார். "சைத்தான் சர்க்காரைப் பணிய வைக்க முடியாது என்றால், அதை வீழ்த்த வேண்டும்" என்னும் ஸ்லோகத்தை அவர் அதிரக் கோஷித்தார். அத்துடன் தேசிய இயக்கத்தை அவர் பொது ஜன இயக்கமாக மாற்றினார்; ஜனங்களின் சுதந்திர உணர்ச்சியைத் தட்டி எழுப்பினார். நாட்டில் எங்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சியைப் பரப்பினார். அடிமை அந்தகாரத்திலே தவழ்ந்துகொண்டிருந்த மக்களுக்கு, "சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை' என்று கோஷிக்கக் கற்றுக்கொடுத்தார். நாட்டில் எங்கும் சுதந்திர உணர்ச்சியைப் பரப்பின, தேசிய இயக்கத்தைப் பொதுஜன ஸ்தாபனமாக மாற்றின மகாத்மா வாழ்க!

சுதந்திர இயக்கத்தின் முதுகெலும்பு ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை என்பதைக் காந்திஜீ ஆரம்பத்திலேயே உணர்ந்தார். பேசுவதுடன் திருப்தி அடையாத அவர், செயலாற்றும் துறையில் இறங்கினார். இதன் பலன் தான்

கிலாபத்—சுயராஜ்ய இயக்கம். காந்திஜியின் இடைவிடாத பிரசாரத்தின் பலனாக ஹிந்துக்களும் முஸ்லிம்களும கை கோத்துக் கொண்டு விடுதலைப் போர்க் களத்தில் குதித்தனர். நாடு அது வரையில் கண்டிராத புதுமையை அந்தக் காலத்தில் கண்டது. ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்குக் காந்திஜி அமைத்த அஸ்திவாரம் கிலாபத்—சுயராஜ்ய இயக்கம். மக்கள் ஒன்றுபட்டுப் போர் புரிந்தால் தேசம் அபிவிருத்தி அடையும் என்பதை ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டின. காந்திஜி, மக்களை ஒன்றுபடுத்துவதற்காக ஓய்வும் ஒழிச்சலுமின்றிப் பாடுபட்ட காந்திஜி, ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பன்முறை தம் இன்னுயிரைப் பணயம வைக்கவும் தயங்காத காந்திஜி வாழ்க!

கடந்த இரண்டு வருடங்களாக இந்த நாட்டில் வகுப்புத் தீ கொழுந்து விட்டு எரிகிறது. வகுப்புத் தீ தேசத்தை எரித்துச் சாம்பலாக்கும் என்பதைத் தெளிவாக உணர்ந்த காந்திஜி, அந்தத் தீயை அணைக்கப் பெரு முயற்சி செய்தார். வகுப்பு வெறியர்களின் மனதை மாற்ற அவர் இரு முறை உண்ணு விரதம் இருந்தார். காந்திஜியின் ஒற்றுமைப் பிரசாரம் பிற்போக்காளர்களின் கண்களை உறுத்த ஆரம்பித்தது. எனவே, காந்திஜியை ஒழிக்க அவர்கள் முடிவு செய்தனர். வகுப்புப் போர்வையில் செயலாற்றி வந்த பிற்போக்காளர்கள் மகாத்மாவை மாய்த்தனர். ஒற்றுமை வழி ஒன்றே வழி என்பதை அறிவுறுத்தின காந்திஜி வாழ்க!

காந்திஜி வாழ்க என்று சொல்லுவதுடன் நமது கடமை தீர்ந்து விடவில்லை. காந்திஜிக்குத் தலை வணங்கும் பொழுது நாம் ஓர் உண்மையை மறந்துவிடலாகாது.

காந்திஜியை எதிர்த்த சக்திகள், காந்திஜியைக் கொன்ற சக்திகள், இன்னும் மறைந்துவிட வில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு வேடங்களில் தோன்றும் பிற்போக்கு சக்திகளை அழிப்பதும், உண்மையான ஜனநாயக ஆட்சி முறையை இந்த நாட்டில் ஸ்தாபிப்பதும்தான் தேச நலத்தில் கருத்துள்ளவர்களின் முழு முதற் கடமையாகும். சரித்திர ரீதியான இந்தக் கடமைகளைப் பூர்த்தி செய்வதுதான் காந்திஜிக்கு நாம் செலுத்தும் உண்மையான வணக்கம்.

✻

இங்கே இல்லை!

புருஷனும் மனைவியும் ஒரு ஹோட்டலில் காபி சாப்பிட்டு விட்டுத் திரும்பினார்கள். மனைவி தன் கை உறைகளை மறந்துபோய் எங்கோ வைத்துவிட்டாள். ஆகவே அவள் ஹோட்டலுக்குள்ளே திரும்பி வந்தாள். புருஷன் வாசல் படிக்கு அருகாமையில நின்று கொண்டிருந்தான். மனைவி மேஜையின்மேல் கை உறைகளைத் தேடிப் பார்த்தாள், அவற்றை அங்கே காணவில்லை. உடனே மேஜையின் மேல் விரிக்கப்பட்டிருந்த துணியைத் தூக்கிப்பார்த்தாள். பிறகு தரை யெங்கும் தேடினாள். இதைப் பார்த்ததும் வேகமாக வந்தான் ஹோட்டல் வேலைக்காரன். வந்து அந்த ஸ்திரீயைப் பார்த்து, "அம்மா, ஐயா அங்கே வாசல் பக்கத்தில் அல்லவா நின்று கொண்டிருக்கிறார்!" என்றான்

—டைஜஸ்ட் ஆப் டைஜஸ்ட்ஸ்

தொடர் கதை

சாக்கடையிலிருந்து

பி. கேசவதேவ்

(முன் கதைச் சுருக்கம்)

[மாதவன் சிறு வயதிலேயே நியாயத்துக்காக முரட்டுத்தனமாய்ப் போராடியவன்; ஆகவே ஊரைவிட்டுத் துரத்தப்பட்டு பட்டணக் கரைக்கு வந்து சேர்ந்தான்: பட்டணக் கரையில் அவனுக்கு வயிற்றுக்குச் சோறிட பல வேலைகள் இருந்தன—சோடா பாக்டரி, மில், பீடித் தொழில் முதலிய பல வேலைகள். எங்கும் உரிமைக்காகப் போராடி உதையும் மிதியும் பெற்று கடைசியில் ரிக்ஷா வாலாவாக மாறினான்.

மாதவனின் ரிக்ஷா ஒருநாள் கமலத்தின் மீதுமோதவே அவள் வாங்கிச் சென்ற அரிசி முதலியவை சிந்திச்சிதறி விட்டன. கமலம் ஏழைச் சிறுமி. ஆகவே அவன் அவளுக்கு அரிசி-காய்கறி முதலியன வாங்கிக் கொடுத்துதவினான். அன்று முதல் அவனுக்குக் கமலத்தின் மீது ஒரு வாஞ்சை பிறந்தது. கமலம் தனது விதவைத் தாயான கல்யாணியிடம் மாதவனின் தயாளத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள். ஒரு நாள் மாதவன் கமலத்தின் வீட்டுக்கு வந்தான். கல்யாணியைச் சந்தித்தான். அங்கேயே சாப்பாடு. அந்தக் குடும்பச் சம்ரக்ஷணையைத் தானே ஏற்றுக் கொண்டான். கமலத்தைப் படிக்க வைத்தான். தாயும் பிள்ளையும் அவனது அன்பால் வளர்ந்தனர். காலம் கல்யாணியை மாதவனின் அன்புக்கு ஆளாக்கியது. அவர்கள் பரஸ்பரம் காதலித்தனர்.

கமலமோ நன்றாகப் படித்து ஒவ்வொரு வகுப்பாக மேலேறினாள். பெரிய வீட்டுப் பெண்களின் சிநேகம் அவள் மனசில் பெரிய மனுஷ கௌரவத்தை ஊட்டியது. தனது பாதுகாவலன் ஒரு ரிக்ஷா வாலா என்று சொல்லிக் கொள்ளவே அவள் வெட்கினாள். ஆகவே அவள் தனது உண்மை நிலையை மறைக்க அரும்பாடுபட்டாள். மாதவனைக் காணவே கூசினாள்.

இப்படி அவள் மனசிலே வறட்டுக் கௌரவம் வளர்ந்து வருகிறது.........]

புத்தகங்கள் அதிகமாகத் தேவையாயின. சம்பளம், புத்தகம், நோட் புத்தகம், பென்சில், பேனா, பௌடர், சோப்—தனக்குத் தேவையான பொருள்களின் ஜாபிதாவை அவள் மாதவனிடம் கொடுப்பாள். தேவையான பொருள்களையெல்லாம் மாதவன் வாங்கிக் கொடுப்பான்,

மாதவன் ஓய்வும் ஒழிச்சலுமின்றி வேலை செய்தான். பொழுது புலருமுன் வேலைக்குப்

புறப்படுவான். நடுநிசியில்தான் திரும்பி வருவான். சாப்பிட்டு விட்டுச் சிறிதநேரம் படுப்பான். சில நாட்களில் அதற்குக்கூட நேரமிராது. சாப்பிட்டதும் வேலைக்குச் சென்றுவிடுவான். இரவில்தான் சாப்பிடுவான். மத்தியானம் தேநீர் அருந்துவான். பிரயாணிகளை எதிர்பார்த்துக்கொண்டு ரிக்ஷாவில் உட்கார்ந்திருக்கும் பொழுது கண்ணயர்வான். இதுதான் தூக்கம்! என்றைக்காவது ஒருநாள் குளிப்பான்.

அவன் வீட்டில் கமலத்தைச் சந்திப்பது அபூர்வமாயிற்று. வேலைக்குச் செல்லும் பொழுது அவள் தூங்கிக்கொண்டிருப்பாள். வீடு திரும்பும் பொழுதும் அவள் தூங்கிக்கொண்டிருப்பாள். அவளுக்குத் தேவையானவைகளைக் கல்யாணி சொல்லுவாள். அவள் பள்ளிக்கூடத்திற்குப் போகும்பொழுதும், பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும் பொழுதும் அவளுக்குத் தெரியாமல் எங்கேயாவது மறைந்து நின்று அவளைப் பார்ப்பான்.

ஒருநாள் பொழுது புலருமுன் மாதவன் கட்டிலிலிருந்து திடுக்கிட்டு எழுந்தான். கீழே பாயில் படுத்திருந்த கல்யாணியும் எழுந்திருந்தாள். களைப்பால் அவன் கட்டிலிலேயே உட்கார்ந்தான்.

கெஞ்சும் குரலில் கல்யாணி சொன்னாள், "இன்னும் கொஞ்ச நேரம் தூங்குங்கள். பொழுது புலரட்டும். பிறகு போனால் போதும்."

"ரயில் வரும் நேரமாய் விட்டது. நான் போக வேண்டும்."

"ரயிலில் வருகிறவர்கள் எப்படியாவது போகட்டும். இன்று பொழுது புலர்ந்து கஞ்சி குடித்துவிட்டு வேலைக்குப் போனால் போதும். படுத்துக்கொள்ளுங்கள். சிறிது நேரம் தூங்குங்கள்."

"இன்று கமலம் சம்பளம் கொடுக்கவேண்டும். என் கையில் ஒரு காசுகூட இல்லை" அவன் எழுந்திருந்தான்.

"சம்பளம் ஐந்து நாட்களுக்குப் பிறகு கொடுத்தால் போதும்."

"இன்று சம்பளம் கொடுக்கவில்லையென்றால், அபராதம் செலுத்த வேண்டும். அபராதம் செலுத்துவது அவமானமல்லவா?"—அவன் வெளியே சென்றான்.

கல்யாணி நெடு மூச்சு விட்டாள்.

மணி ஒன்பது. சம்பளம் கொடுக்கப் போதுமான பணம் கிடைக்கவில்லை. மாதவன் கலங்கினான். சம்பளம் கொடுக்காமல் தேநீர்கூட அருந்துவதில்லை என்று அவன் சபதம் செய்திருந்தான். அவன் ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு வீதியில் நடந்தான். பள்ளிக்கூடத்திற்கு முன் அவன் சிறிதுநேரம் நின்றான். அதுவரையில் கிடைத்த கூலியை எண்ணினான். இன்னும் ஒன்றரை ரூபாய் வேண்டும். பிரயாணிகள் யாரும் வரவில்லை. தூரத்தில் கமலம் வருவதைக் கண்டதும் அவன் அப்பால் சென்றான்.

பத்து மணி. மாதவன் நிலைகுலைந்தான். ஒன்றரை ரூபாய் வேண்டும். அதற்கு வழி என்ன? அவன் அதுவரையில் யாரிடமும் கடன் வாங்கினதில்லை. கடன் வாங்க அவன் அப்பொழுதுகூட விரும்பவில்லை. அப்படியானால்

பணத்திற்கு வழி? ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு அவன் நடந்தான்.

முன்னால் அவன் வசித்து வந்த காப்பிக் கடையை அடைந்தான். கடைக்கு முன் அவன் அசைவற்று நின்றான். கடைக்காரன் கேட்டான்: "என் வருத்தத்துடன் நிற்கிறாய்?"

"எனக்கு ஒன்றரை ரூபாய் வேண்டும்."

"நான் தருகிறேன்."

"நான் கடன் வாங்கமாட்டேன் என்பது உனக்குத் தெரியுமே!"

"நீ முன்பு என்னிடம கொடுத்த பணத்தில் இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. அதைத்தான் தருவதாகச் சொன்னேன்."

"அதில் பாக்கி இருக்கிறதா?"

"இருக்கிறது."

அவன் ஐந்து ரூபாய் கொடுத்தான். ரிக்ஷாவை அங்கேயே வைத்துவிட்டு, பணத்தை எடுத்துக்கொண்டு அவன் பள்ளிக்கூடத்திற்கு ஓடினான்.

வகுப்பு நடந்துகொண்டிருந்தது. மாதவன் வகுப்பில் பிரவேசித்தான். எல்லோரும் திகைத்தனர். கமலத்தின் முகம் கறுத்தது.

"ஓ! வெளியே போ!" என்று கட்டளை இட்டார் உபாத்தியாயர்.

மாதவன் மனம் புண்பட்டது. இரண்டு மூன்று நிமிடங்கள் அவன் அசைவற்று நின்றான். அவன் கண்கள் கலங்கின; அதரங்கள் துடித்தன. அவன் வலது கை தலைக்கு மேலே உயர்ந்தது.

"ஐயோ!" என்று கூவினாள் கமலம்.

மாதவன் கை அப்படியே நின்றது. அவன் அவள் முகத்தைப் பார்த்தான். அவன் கரம் தளர்ந்தது; மெதுவாகக் கீழே விழுந்தது.

பள்ளிக்கூடச் சேவகன் ஓடி வந்தான். "இவனைப் பிடித்து வெளியில் தள்ளு" என்று உபாத்தியாயர் கட்டளை இட்டார்.

சேவகன் மாதவனை அணுகினான். "அருகில் வந்தால் உன் தலையைப் பிளப்பேன்" என்று மாதவன் கூவினான். அவன் கமலத்திடம் சென்றான். "இந்தா சம்பளம்." மடியிலிருந்து ரூபாயை எடுத்து அவளிடம் கொடுத்தான். கோபக்கனல் வீசும் கண்களால் திரும்பிப் பார்த்து விட்டு, அவன் வேகமாக நடந்தான்.

உபாத்தியாயர் கேட்டார்: "அது யார் கமலம்?"

"அவன் ரிக்ஷாக்காரன். அவனுக்கு ஒன்றும் தெரியாது."

அன்று முழுவதும் அவள் துக்கக் கடலில் மூழ்கி இருந்தாள்.

அந்தி நேரத்தில் மாதவன் வீடு திரும்பினான். அதற்கு மேல் அன்று அவனால் வேலை செய்ய முடியவில்லை. அவன் வீட்டு வாசலை அடைந்ததும் உள்ளே பேச்சுக் குரலில் கேட்டது.

கமலம் சொன்னாள்: "அம்மா, நான் சினிமா பார்க்க வேண்டும்."

"அதை என்னிடம் ஏன் சொல்லுகிறாய்?" என்று கல்யாணி கேட்டாள்.

"நான் யாரிடம் சொல்ல வேண்டும்?"

"சொல்ல வேண்டியவரிடம் சொல்ல வேண்டும்."

"மாமாவிடம் சொல்ல வேண்டுமா? நான் அவரிடம் சொல்ல மாட்டேன். மாமா கூட நான் இனி எங்கும் போகமாட்டேன்."

"ஏன்?"

"மாமா கூட நான் போவதை யாராவது கண்டால் அவமானமல்லவா?"

"என்ன சொன்னாய்?"—கல்யாணி உறுமினாள். அதுவரையில் அவ்வளவு உரத்த குரலில் அவ்வளவு கடுமையான குரலில் கல்யாணி பேசினதே இல்லை. "என்ன சொன்னாய்?"—அவள், கமலத்தின் அறைக்குச் சென்றாள். "மாமா கூடப் போவது அவமானமா? இதை எப்போது தெரிந்துகொண்டாய்? நன்றி கெட்ட நாயே!"—கோபத்தால் அவள் உடம்பு நடுங்கிற்று.

கமலம் அதன் பிறகு ஒன்றும் சொல்லவில்லை. அவள் மௌனமாக இருந்தாள். கோபம் தீரும் வரையில் கல்யாணி அவளை ஏசினாள்.

மாதவன் இருதயம் துடித்தது. தன் கூட வருவது அவமானம் என்று சொன்ன அந்த நாக்கை அறுக்க அவன் விரும்பினான். அந்த வீட்டிற்குத் தீ வைத்துவிட்டு, அங்கிருந்து ஓடிப்போக அவனுக்கு ஆசை. அவன் முஷ்டியை உயர்த்தி உயர வீசினான். அவன் முன்னே பாய்ந்தான். ஆனால், திடீரென்று அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டான். அறையில், விளக்குக்குமுன், மௌனமாக இருக்கும் கமலத்தின் முகத்தை அவன் கண்டான். ஒன்பது வருடங்களுக்கு முன் சாக்கடையில் இருந்து வாரி யெடுத்த சிறுமி அவள்! அவன் வாழ்க்கையைச் சாரம் நிறைந்ததாக ஆக்கினவள் அவள்தான். ஒன்பது வருட முயற்சியின் பலன் அவள். வறுமையின் ஜ்வாலையால் கருக ஆரம்பித்த அந்தப் பட்ட மரம் இன்று வாழ்க்கை வசந்தத்தில் பூத்துக் குலுங்குகிறது. சுற்றுச் சார்பின் மாயையில் சிக்கி அவள் நிலை குலைந்திருக்கிறாள். பாவம்! அவளை ஏன் பழிக்க வேண்டும்? ......ஒன்பது வருட முயற்சியில் சிருஷ்டித்த அந்தக் கண்ணாடிப் பாத்திரத்தை நொடிப் பொழுதில் உடைத்துவிடுவது அழகா?...... மாதவன் இருளில் புன்னகை புரிந்தான்.

மாதவன் சாப்பிடும்பொழுது கல்யாணி சொன்னாள்: "அவள் படிப்பை நிறுத்துவது நல்லது."

மாதவன் சிரித்தான். 'படிப்பை ஏன் நிறுத்த வேண்டும்?"

"அவள் ஆங்கிலம் படித்துக் கெட்டுவிட்டாள். அவள் தலைகீழாக நிற்கிறாள்."

"அவள் குழந்தை. அவள் சொல்லுவதைப் பொருட்படுத்தாதே!"

7

கமலம் பத்தாவது வகுப்பில் படிக்கிறாள். சம்பளம் அதிகரித்தது. அவள் தேவைகளும் அதிகரித்தன.

மாதவனின் தேகக்கட்டு தளர்ந்தது. அவன் உண்ணவில்லை; உறங்கவும் இல்லை. ஓயாது அவன் உழைத்தான். எப்பொழுதாவது வீட்டிற்குத் தேவையான சாமான்கள் வாங்கிக்கொண்டு வருவான். கமலத்

தின் தேவைகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளுவான். அந்தத் தேவைகளை அவன் பூர்த்தி செய்வான். எப்பொழுதாவது சாப்பிடுவான். உடனே, வெளியே போய்விடுவான்.

முன்பு எவ்வளவுதான் ஓடினாலும் அவன் களைக்கமாட்டான். இப்பொழுது ஒரு பர்லாங் ஓடுமுன் அவன் களைத்துப் போய்விடுவான். அவன் ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு மெதுவாக நடக்க ஆரம்பித்தான்.

ஒரு நாள் மாதவனின் நண்பர்கள் பேசிக்கொண்டனர்: "மாதவன் தளர்ந்துவிட்டான்."

"துள்ளின மாடல்லவா? அவன் எதற்காக இப்படி உழைக்கிறான்?"

"தாயையும், மகளையும் அவன் பராமரிக்க வேண்டும். வேலை செய்யாமல் அவர்களைப் பராமரிக்க முடியுமா?"

"தாயும், மகளும் நமக்கு இல்லையா? நாம் அவனைப்போல் உழைக்கிறோமா, என்ன?"

"அந்தப் பெண்ணை அவன் ஆங்கிலம் படிக்க வைக்கிறான். அவள் பி. ஏ. வரையில் படிக்க வேண்டுமாம்!"

"விரலுக்குத் தகுந்த வீக்கம் வேண்டும். இல்லையெனில் ஆபத்து!"

மாதவனுக்கு அடிக்கடி ஜுரம் வந்தது. அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. வெயிலிலும், மழையிலும், பனியிலும் அவன் இடைவிடாது வேலைசெய்தான். ஜுரம் அதிகரித்தது. அவன் இருமவும் ஆரம்பித்தான்.

உணவு செல்லவில்லை. அடிக்கடி தே நீர் மாத்திரம் அருந்தினான். அப்பொழுதும் கஞ்சா குடிப்பதை நிறுத்தவில்லை. கஞ்சா குடிக்கும் பொழுது இருமல் அதிகரிக்கும். இருமி இருமி மூச்சடைக்கும்; கண்கள் அகலும். எனினும், கஞ்சா குடிப்பதை நிறுததமாட்டான்.

அவன் அங்குலம் அங்குலமாக அழிவதைக் கண்டாள் கல்யாணி. மருந்து சாப்பிட வேண்டும் என்று அவள் மன்றாடினாள். அவன் மௌனமாக இருந்தான். பகலில் வேலை செய்தால் போதும் என்றும், இரவில் நன்றாகத் தூங்கவேண்டும் என்றும் அவள் சொன்னாள். அதை கேட்டதாகக் கூட அவன் நடிக்கவில்லை. அவள் அழுதாள். ஒரு நாள் அவள் கேட்டாள்: "நானும் ஏதாவது கூலி வேலை செய்யட்டுமா?"

"அதற்கு இன்னும் காலம் வரவில்லை" என்றான் அவன்.

அந்த வருடம் வருடாந்திர விழாவைச் சிறப்பாகக் கொண்டாடப் பள்ளிக்கூட அதிகாரிகள் முடிவு செய்தனர். பாட்டு, நடனம், நாடகம், பேச்சுப் போட்டி, தேகப் பயிற்சிப் போட்டி முதலியன நடத்த அதிகாரிகள் தீர்மானித்தனர். உபாத்தியாயர்களும், மாணவர்களும் விழாவின் வெற்றிக்காகப் பாடுபட்டனர்.

கமலத்திற்கு விழாவில் முக்கிய பங்கு உண்டு. அவள் அபிப்பிராயத்தை உபாத்தியாயர்களும் மாணவர்களும் ஏற்றனர்.

விழா நாள் நெருங்கினதும் உற்சாகம் உச்ச நிலையை அடைந்தது. அன்று எவ்வாறு உடை அணியவேண்டும், கூந்தலை எவ்வாறு சீவி முடிக்கவேண்டும் என்பதைப் பற்றி அவள் சிந்தித்

தாள். வெள்ளை பிளௌசும், பச்சை நிறப் புடவையும் அணிந்துகொள்ள அவள் முடிவு செய்தாள். பச்சை நிறப் புடவை அவளுக்கு இல்லை. அதை வாங்கித் தரும்படி மாதவனிடம் நேரில் சொல்லுவதற்காக அன்று மாதவன் வரும் வரையில் அவள் காத்திருந்தாள்.

நடு நிசியில் இருமிக்கொண்டு மாதவன் வந்தான்; அவனுக்கு ஜுரம். உள்ளே பிரவேசித்ததும் இருமல் அதிகரித்தது. தூணைப் பிடித்துக்கொண்டு அவன் இடைவிடாது இருமினான். அவன் மூச்சு அடைத்தது. கல்யாணி அவனைத் தாங்கினாள். அவள் இருதயம் வேதனையால் விறைத்தது. அவள் அவனைப் படுக்கையில் படுக்கவைத்தாள். பிறகு, வெந்நீர் கொண்டு வருவதற்காக அடுக்களைக்குச் சென்றாள்.

கமலம் தெற்கு அறையிலிருந்து வடக்கு அறைக்கு வந்தாள். மூச்சைப் பிடித்துக் கொண்டு மாதவன் கேட்டான்: "ஏன் இன்னும் தூங்கவில்லை?"

அவள் பதில் சொல்லவில்லை.

"தூங்காமல் விழித்திராதே. போய்த் தூங்கு."

ஏதோ சொல்ல விரும்புகிறவளைப் போல் அவள் மாதவன் முகத்தைப் பார்த்தாள்.

"ஏதாவது சொல்ல வேண்டுமா?"

"எனக்குப் புதிய புடவை வேண்டும்."

"உனக்குப் புடவை இல்லையா?"

"பச்சை நிறப் புடவை வேண்டும், பள்ளிக்கூட வருட விழாவின் போது அணிய."

மாதவன் கண்கள் இருண்டன. அவன் அசையாது படுத்தான். அவன் ஆத்மா துடித்தது. திடீரென்று அவன் கேட்டான்: "என்று வேண்டும்?"

"நாளைய தினம் வேண்டும். நாளை மறுநாள் ஆண்டு விழா."

அவன் மீண்டும் கண்களை மூடிக்கொண்டு படுத்தான். மீண்டும் கண்களைத் திறந்தான். "வாங்கித்தருகிறேன். நீ தூங்கு."

அவள் போனாள்.

அவன் தூங்க வில்லை. இருமலுக்கு மத்தியில், "அதற்கு என்ன வழி? அதற்கு என்ன வழி?" என்று அவன் மனம் கேட்டது. கல்யாணியும் தூங்கவில்லை.

"அதற்கு என்ன வழி?" என்று அவன் உரத்த குரலில் கேட்டான்.

"எதற்கு?" என்று கல்யாணி கேட்டாள்.

"கமலத்திற்குப் பச்சைப் புடவை வேண்டுமாம்."

"பச்சைப் புடவையா?" அவள் எழுந்திருந்தாள். "எதற்காம் இப்பொழுது பச்சைப் புடவை?"

"பள்ளிக்கூடத்தில் என்னமோ நடக்கிறதாம். அன்று அணிய வேண்டுமாம்."

"வேண்டாம். பச்சைப் புடவை அணியாமல் போனால் போதும். கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்ததால்தான் மேலும் மேலும் அவள் கேட்கிறாள்."

"மெதுவாகப் பேசு. அவளுக்குக் கேட்கும்."

"கேட்டால் என்ன?"

"அவள் மனம் வேதனை அடையும்."

"பிறர் மனம் தகருகிறதே! பிறர் தேகம் சிதைகிறதே! இதையெல்லாம் அவள் தெரிந்து கொள்ள வேண்டாமோ?"

"பேசாதிரு. என்னிடம் கேட்காமல் அவள் யாரிடம் கேட்பாள்? அவள் தேவைகளைப் பூர்த்தி செய்ய என்னைத் தவிர அவளுக்கு வேறு யார் இருக்கிறார்கள்? அவளுக்குக் கொடுக்க வேண்டாம் என்றால் நான் எதற்காக வேலை செய்ய வேண்டும்? அவள்...... அவள்......"—இருமலால் அவனால் பேச முடியவில்லை.

"கடவுளே!..." அவள் மேலே பார்த்து வணங்கினாள்.

பொழுது புலருமுன் அவன் எழுந்திருந்தான். "அதற்கு என்ன வழி?"

"அதற்கு என்ன வழி?" என்று கல்யாணியும் கேட்டாள்.

திறந்து கிடந்த ஜன்னல் மூலம் அடிவானத்தைப் பார்த்துக் கொண்டு அவன் பேசாதிருந்தான். திடீரென்று கல்யாணி அவனைப் பார்த்தாள். அவள் ஏதோ சொல்ல விரும்பினாள். அவள் அதரங்கள் அசைந்தன. ஆனால், அவள் ஒன்றும் சொல்லவில்லை.

"என்ன? என்ன சொல்ல வேண்டும்?" என்று மாதவன் கேட்டான்.

(தொடரும்)

வெளியாகிவிட்டது!

ஆங்கிலம் - தமிழ் அகராதி

ENGLISH - ENGLISH & TAMIL

DICTIONARY

●

தொகுத்தவர்:
தி. நா. சுப்பிரமணியன்

●

500-க்கு மேற்பட்ட பக்கங்கள். வெள்ளைக் காகிதம். கலிகோ பைண்டு. அருமையான பதிப்பு.

●

ரூபாய் ஐந்து
தபால் செலவுடன் ரூ. 5-8
வியாபாரிகளுக்கு 15% கமிஷன்

●

சக்தி காரியாலயம்

சென்னை - 14

நச்சுப் பொய்கை

மகா பாரத காலத்தில் மட்டு மல்ல, ஒவ்வொரு தண்ணீர்த் தேக்கமும் ஒரு நச்சுப் பொய்கையாகிவிடலாம். பாசியும் அழுகிய தாவரங்களும் நிறைந்த ஒவ்வொரு தேக்கத்திலிருந்து எடுத்து உபயோகிக்கப்படும் சிறிதளவு தண்ணீரே எண்ணிறந்த நோய்களுக்கும் அவைகள் பரவுவதற்கும் காரணமாஇன்றது இன்று ரஸாயன நிபுணர்கள் கிருமி ஆராய்ச்சியாளர்களின் உதவியால் மக்கள் உபயோகத்திற்கான தண்ணீர் நன்கு சுத்தப் படுத்தித் தரப் படுகின்றது,

தண்ணீரை சுத்தப்படுத்த குளோரின் உபயோகமே சிறந்ததெனக் கருதப்படுகிறது. இதற்கு குளோரின் திரவம், பிளீச்சிங் பவுடர் இவை உகந்தவை. மேட்டூர் கெமிகல் அண்டு இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன்குளோரின்தயாரிப்புகள் நம் நாட்டில் எண்ணிறந்த தண்ணீர் ஸப்ளை ஸ்தாபனங்களால் எப்போதும் உபயோகப்படுத்தப் படுகிறது. "காவேரி ப்ராண்ட்" குளோரின் திரவம் எஃகு குழாய்களில் நிரப்பப்பட்டு சப்ளை செய்யப்படுகிறது.

Mettur Chemicals
VITAL TO INDUSTRY

வெளியிடுவோர்

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை, சேலம்.

மானேஜிங் ஏஜண்டுகள் :

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சினப்பள்ளி.

பூரண விற்பனை ஏஜண்டுகள் :

தி அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்
120, அரண்மணைக்காரத் தெரு, மதராஸ்.

கிளை ஆபீஸ்கள் :

பெஜவாடா, கோயமுத்தூர், கள்ளிக்கோட்டை, கும்பகோணம்,
மேட்டூர் அணை, சேலம், ஹைதராபாத், திருச்சினப்பள்ளி, திருவனந்தபுரம்

புத்தக உலகம்

நமது இலக்கியம்: [ஆசிரியர்: சொ. விருத்தாசலம் பி. ஏ. கிடைக்குமிடம்: தமிழ்ப் புத்தகாலயம், மயிலாப்பூர், சென்னை 4. விலை அணா 12]

இந்தச் சிறு புத்தகத்தின் முகவுரையில் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்:

"வாழ்வு, வாழ்க்கை என இரண்டு பதங்கள் உண்டு. இவற்றிடையே உள்ள தொடர்பையோ தொடர்பற்ற தன்மையையோ விளக்குவது, மனித சிந்தனையின் சாரம். வாழ்வு எனில் தோற்றம், ஸ்திதி, மறைவு என முக்கூறாகத் தோன்றும் பிரபஞ்சத் தன்ம. வாழ்க்கை என்பது தனிப்பட்ட ஜீவராசியின் உயிர்ப்பாசத்தினால் நிகழும் அவஸ்தை. இவ்விரண்டுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவது மனித சிந்தனையின் சாரம். அது தத்துவமாக உருவாகிறது. வாழ்வின் நியதி ஒன்று, சூத்திரம் ஒன்று என வற்புறுத்துவது ஆஸ்திகம். வாழ்வு நியதிக்கும் கட்டுப்படாதது. பிரபஞ்ச உற்பத்தியே அகஸ்மாத்தாக நிகழ்ந்த சம்பவம். இதில் நியதிக்கோ, ஒரு கட்டுக்கோப்புக்கோ இடம் உண்டு என நினைப்பதுவெறும் சொப்பனாவஸ்தை என வற்புறுத்துவது நாஸ்திகம்.

இவ்விரண்டு விதமான மனநிலைகளுக்கும் பிறப்பிடம் மனித சித்தம். இதைச் சித்திரங்களாகத் தீட்டுவது இலக்கியம். மனிதனுக்கும் புறவுலகுக்கும் உள்ள தொடர்பை அல்லது தொடர்பின்மையை மனிதக் கண்கொண்டு பார்ப்பது இலக்கியம். மனிதன் உணர்ச்சிக்கு உட்பட்டவன், உணர்ச்சி உண்மையறியும் சாதனமாகவும், அதை மறைக்கும் திரையாகவும் அமைந்துள்ளது. இலக்கியம், மன அவசத்தில் தோன்றி, புறவுலகின் அடிமுடியை நாட முயலும் ஒரு பிரபஞ்சம். இது தேசந்தோறும் பாஷைக்கும் பண்புக்கும் தக்கபடி பல்வேறுருபங்களில் அமைந்துள்ளது. இதன் பொது விதிகளை, தன்மைகளை ஆராயும் நோக்கத்துடன் இக்கட்டுரைகள் எழுதப்பட்டன."

இலக்கியத்தைப் பற்றிக் கூறும் முகவுரையின் இந்த மணிவாசகங்களே புத்தகத்தின் சிறப்பை நமக்குப் பறையறைகின்றன. இலக்கியத்தின் தன்மைகளை மொத்தம் ஏழு கட்டுரைகளில் ஆசிரியர் ஆராய்கிறார். புத்தகம் சிறு புத்தகமானாலும், பொருள் செறிந்த பயன்தரக்கூடிய புத்தகமாக அமைந்துள்ளது. இலக்கிய ரசிகர்களுக்குப்பெருவிருந்தாக உள்ள இந்தப் புத்தகத்தை எல்லோரும் படிக்க வேண்டியது அவசியமாகும்.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

தியாகச் சின்னம்: [ஆசிரியர்: ஆர். ராமநாதன். கிடைக்குமிடம்: பொன்னெழுத்துப் பொறிப்பகம், குடியாத்தம். விலை அணா 12.]

மைசூர் சமஸ்தானம் இந்திய யூனியனில் சேர வேண்டுமென்று சமீபத்திலே மைசூர் சமஸ்தான மக்கள் போராடிய வீரப் போராட்டத்தைப் பொருளாகக் கொண்டு சிருஷ்டிக்கப்பட்ட நாடகம் இது. ஆசிரியர் மிகவும் விறுவிறுப்புடன் இந்த நூலை எழுதியிருக்கிறார். அரசியல் நோக்கத்துடன் எழுதப்பட்ட நூல் என்றாலும், எப்போதும் அனுபவிக்கத் தக்க நாடகச் சுவையும், அரசியல் வாதிகளுக்கும் பொது மக்களுக்கும் கூறும் பல படிப்பினைகளும் கொண்டுள்ளது. இது வரவேற்கத் தக்க புத்தகம். இத்தப் புத்தகம் சக்தி வெளியீடு.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரம்: [மொழி பெயர்த்தவர்: எம். இஸ்மத் பாஷா. கிடைக்குமிடம்: ஜனசக்தி காரியாலயம், 1/6 டேவிட்ஸன் தெரு, ஜி. டி. சென்னை. விலை ரூபாய் 6.]

நம் நாடு அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டது. ஆனால், நம் நாட்டு மக்களிடம் அரசியல் சாஸ்திர அறிவும், பிற நாடுகளில் நடைபெற்ற அரசியல் போராட்டங்களைப் பற்றிய அறிவும் போதிய அளவுக்கு இல்லை என்றே கூறவேண்டும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் வேண்டிய அளவுக்கு அரசியல் நூல்கள் அடிக்கடி வெளிவராத காரணமும் ஒன்று. இந்தக் குறையைப் போக்குவதற்கு தமிழில் வெளிவந்த ஒரு சில அரசியல் நூல்களில் இதுவும் ஒன்று.

இப் புத்தகத்தில் சோவியத் நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி எவ்விதம் தோன்றி, எவ்விதமான இடையூறுகளை யெல்லாம் சமாளித்து, கடைசியில் ருஷ்ய தேசத்தின் அதிகார பீடத்தில் அமர்ந்தது என்ற விபரங்கள் சாங்கோபாங்கமாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. காரல் மார்க்ஸ் உத்தாரணம் செய்த கம்யூனிஸ சித்தாந்தத்தை இன்று உலகில் உள்ள முற்போக்கு நிறைந்த அறிஞர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். நம் பிரதமர் பண்டித நேரு அவர்கள் உட்பட எல்லா நாட்டுப் பொது மக்களின் தலைவர்களும் மார்க்ஸீயக் கண்ணோட்டத்துடன் உலக நிகழ்ச்சிகளை ஆராய்கின்றனர்; உலகின் அபிவிருத்தியைப் பற்றியும் திட்டமிடுகின்றனர். இப்படிப்பட்ட மார்க்ஸீயத் தத்துவத்தை ருஷ்யாவில் லெனின் போன்ற தலைவர்களெல்லோரும் எவ்வாறு நடை முறைக்குக் கொண்டு வந்தனர், உலகத்துக்கே புதுமையான இந்தப் பரீட்சையில் அவர்களுடைய திறமை எவ்வாறு வேலை செய்தது என்பதை எல்லோரும் அறிய வேண்டியது அவசியம். அதற்கு உதவும் வகையில் இந்தப் புத்தகத்தைவிடச் சிறந்த புத்தகத்தைக் காண முடியாது. எல்லோருக்கும் புரியக்கூடிய முறையில் மொழி பெயர்ப்பு எளிய நடையில் இருக்கிறது. 680 பக்கங்களுள்ள இந்தப் புத்தகத்துக்கு ஆறு ரூபாய் என்று குறைவாக விலை வைக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் சௌகரியமான ஒரு சிறந்த அம்சமாகும். அவசியம் இந்தப் புத்தகத்தைப் படிக்கவேண்டும்.

கட்டுரைகள்: [ஆசிரியர்: ராஜாஜி. கிடைக்குமிடம்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை ரூபாய் 5.]

இந்தப் புத்தகம் இப்போது இரண்டாம பதிப்பாக வெளி வந்திருக்கிறது. இதன் முதல் பதிப்புக்குத் தமிழ் நாட்டில் நல்ல வரவேற்பு இருந்தது; சக்தியிலும் இதற்கு அப்போது மதிப்புரை செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகத்தில் மொத்தம் 24 கட்டுரைகள் அடங்கி யுள்ளன. சில ஹாஸ்யமாக உள்ளன; அதே சமயத்தில் சில புத்திமதிகளையும் கூறுகின்றன. சில கட்டுரைகள் சிந்தனையைக் கிளறக் கூடியனவாக உள்ளன. வாழ்க்கையில் தினசரி நடைமுறையில் காணப்படும் சில பழக்க வழக்கங்கள், கல்வித் துறையிலும் கலைத் துறையிலும் உள்ள பல விஷயங்கள், இன்னும் வேதாந்தம் விஞ்ஞானம் முதலிய பல சாஸ்திரங்கள் ஆகிய எல்லாவற்றையும் பொருளாகக் கொண்டு கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. கடைசியாக சாக்ரட்டீஸ் நீதி மன்றத்தில் பேசிய பேச்சும் உள்ளது. மிக மிக எளிய நடை; எல்லோரும் படித்து இன்புறத்தக்க இந்த நல்ல புத்தகத்தை அழகாக வெளியிட்டுள்ளனர் புதுமைப் பதிப்பகத்தார்.

கம்ப சித்திரம் (சுந்தர காண்டம்): [ஆசிரியர்: பி. ஸ்ரீ. கிடைக்குமிடம்: நவபாரதி பிரசுராலயம் லிமிடெட், திருநெல்வேலி. விலை ரூ. 7-8-0.]

இந்தப் புத்தகத்தில் கவிச் சக்கரவர்த்தி கம்பரின் ராமாயணத்தில் சுந்தர காண்டத்திலுள்ள பல இனிய

கவிதைகளைப் பொறுக்கி யெடுத்து அவற்றிற்குப் பொருள் கூறி, கதையையும் சுவாரஸ்யமாக எழுதிச் செல்லுகிறார், ஆசிரியர் பி. ஸ்ரீ. இது கம்பருடைய கவிச் செல்வத்தை விரும்பும் கலாரசிகர்களுக்கு உதவி செய்யும் புத்தகம். கம்ப ராமாயணத்துக்கு விமரிசனம் தேவையில்லை. அதிலும் தலைசிறந்த காண்டமாக விளங்குவது சுந்தரகாண்டம். இந்த அருமை பெருமையான இலக்கியத்தைத் தமிழர்கள் சிரமமின்றி நன்கு அனுபவித்தற்கேற்ற முறையில் ஸ்ரீ பி. ஸ்ரீ. யும் நவபாரதி பிரசுராலயத்தினரும் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். புத்தகத்துக்கு ஸ்ரீ ரீ. கந்தசாமி பிள்ளை எழுதிய முகவுரை மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது. எல்லோரிடத்திலும் இருக்க வேண்டிய புத்தகம்.

(தியாகி) சுந்தர காண்டம்: [ஆசிரியர்: வடுவூர் இராமசடகோபன். கிடைக்குமிடம்: தியாகி அச்சுக் கூடம், சென்னை. விலை ரூ. 4-12-0.]

கம்பரது இனிய காவியத்தைப் பக்தி சிரத்தையுடன் படித்துப் படித்து அனுபவித்தவர் 'தியாகி' ஆசிரியர் ஸ்ரீ இராம சடகோபன்; தாம் பெற்ற இன்பத்தை வையத்துக்கும் அளிக்கப் பாடுபடுகிறவர். இந்தச் சுந்தர காண்டத்திலே வால்மீகி முனிவரின் இனிய சுலோகங்களையும், கம்பரின் அழகிய கவிதைகளையும் ஒழுங்கு பெறக் கோத்து சுந்தர காண்டத்தில் அடங்கி யுள்ள கதைப் பகுதியை எழுதி யுள்ளார் ஆசிரியர். நூல் முழுவதிலும் பக்தி ரசம் ததும்பி யுள்ளது; அது, பழைய நூல்களைப் படிப்பதற்கு இலக்கிய ரசனை மட்டும் போதாது, பக்தியும் அடக்கமும் வேண்டும் என்பதை நன்கு எடுத்துக் காட்டுகிறது. குறைந்த விலையில் வெளியிடப்பட்டுள்ள இந்த சிறந்த நூலை எல்லோரும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேக மில்லை.

(1) ரேஷன் காலம் (2) மனோரதம்: [ஆசிரியர்: கே. ஸ்ரீ. கிடைக்குமிடம்: பேசும்படம் காரியாலயம், சென்னை. விலை ஒவ்வொன்றும் ரூ. 1-4-0.]

சரசுவதி: [ஆசிரியர்: பாசரசு. கிடைக்குமிடம்: பாசரசு பிரசுரம், சென்னை. விலை ரூ. 1-8-0.]

மேற்கண்ட மூன்று புத்தகங்களும் பொழுது போக்குக்கு என்றே புத்தகம் படிக்கக்கூடிய கூட்டத்துக்குப் பிரயோஜனப்படும்; அந்த வகையில் மூன்றும் சுவாரஸ்யமாகவே இருக்கின்றன.

தமிழரிடையே அன்புப் போர்: [ஆசிரியர்: கே. வீ. வீ. பழம் நீ. விலை ரூபாய் 1.]

இலக்கியம், சினிமா, நாடகம், அரசியல் முதலிய பல துறைகளிலும் உள்ள பலருக்குக் கடிதங்கள் எழுதுவது போல, எழுதப்பட்ட புத்தகம். விலாசதார்களிடம் உள்ள குறை நிறைகளை எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். எடுத்துக்காட்டும் முறை சுவாரஸ்யமாக உள்ளது. ஆனால், விலாசதார் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய தமிழ் நடையைக் கையாண்டே கடிதம் எழுதுவது விளையாட்டுத்தனமாகத் தோன்றுகிறது. ஆசிரியர் தம் சொந்த நடையிலேயே, வேண்டுமென்றால் ஹாஸ்யமாகவும், எழுதி யிருக்க வேண்டும். பார பக்ஷமோ விருப்பு வெறுப்போ இல்லாத முயற்சி, இது.

வீரத் தமிழருக்கு ஆவேசக் கடிதங்கள்: [ஆசிரியர்: கவியோகி சுத்தானந்த பாரதியார். விலை ரூ. 1-8-0]

பற்பல ஆட்களுக்கும் ஆசிரியர் எழுதியுள்ள பல கடிதங்களின் தொகுதி இது. ஆனால், புத்தக உருவில் வெளியிடத் தக்க பெருமை ஒன்றும் இக்தக் கடிதங்களில் காணப்படவில்லை.

மேற்கண்ட இரண்டு புத்தகங்களும் நியூ இந்தியா புக் ஹவுஸ், இராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட் என்ற விலாசத்தில் கிடைக்கும்.

—அ.

நீங்கள் நேரில் வந்து
பரீக்ஷை செய்யுங்கள்

முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானல் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் **பாபாலால்** கம்பெனியிலிருந்து வாங்கினதானல் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டியதில்லை. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS.

சக்தி வாய்ந்த நூல்கள்

காந்தி மகான் கதை : கொத்தமங்கலம் சுப்பு

மகாத்மா காந்தியடிகள்-நம்மை அடிமை வாழ்விலிருந்து விடுவித்த சரித்திரத்தை நாட்டுப் பாடல் வடிவத்தில் பாடியிருக்கிறார். அழகான அட்டைப் படம்—உயர்ந்த காகிதம். கலிகோ பைண்டு டெம்மி அளவில் பக்கம் 260.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

சக்தி பிறக்குது : சுரபி

எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சாக இருந்த சுதந்தர வாரத்தில் 'சுரபி'யின் உள்ளத்தில் பெருக்கெடுத்த உணர்ச்சி வெள்ளத்திலே எழுந்த கவிதை அலைகள். அருமையான பதிப்பு.

விலை அணா : ஆறு — தபால் செலவு தனி

லெனின் பிறந்தார் : ஆர். ராமநாதன் எழுதியது

லெனின் பிறந்தார் என்றால் கூடவே புரட்சி இயக்கமும் பிறந்தது என்றுதான் பொருள். இந் நூலில் லெனின் வரலாறு சொல்லும் வகையில் புரட்சி இயக்கம் வளர்ந்த வகையையும் ஆசிரியர் விளக்கியிருக்கிறார். படங்களுடன்

விலை ரூ. மூன்றரை — தபால் செலவு தனி

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

டால்ஸ்டாய் எழுதியது ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்தது இந் நூல். "உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்" எனும் அரிய சித்தாந்தம்தான் இந் நூலில் அடங்கியிருக்கிறது. இப்போது தமிழில் மூன்றாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அழகிய மொழிபெயர்ப்பு:

விலை ரூ. மூன்று — தபால் செலவு தனி

உலோகமும் நாமும் : மு. அருணாசலம் எழுதியது

உலோகங்களைப் பற்றிய விரிவான முறையில் தெளிவாய் விளக்குவது இந் நூல். தமிழ் உலகுக்குப் புதிது.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

ஹிந்து பத் பாதுஷாஹி

வீர சாவர்க்கர் எழுதியது 'அபிநவம்' மொழி பெயர்ப்பு

இந்து சாம்ராஜ்ய வீழ்ச்சியை விவரிக்கும் சிறந்த நூல்.

விலை ரூ. மூன்றேமுக்கால் — தபால் செலவு தனி

சக்தி காரியாலயம் சென்னை—14.



மகாத்மா காந்தியடிகள்—

நம்மை அடிமை வாழ்விலிருந்து
விடுவித்த சரித்திரத்தை

காந்தி மகான் கதை

என்ற பெயரில் நாட்டுப்பாடல் வடிவத்தில்
ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு
பாடியிருக்கிறார்.

விலை ரூ. ஐந்து—தபால் செலவு தனி

சக்தி காரியாலயம்—சென்னை 14



உலகத்திலே அழகும் மணமும்
மிகுந்தது ரோஜா புஷ்பம்
உலகத்திலே சுவையும் மணமும்
மிகுந்தது அசோகா பாக்குத்தூள்

No.1506 அசோகா MILD SCENTED ASOKA

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி

'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூர்